# தமிழும் தமிழரும்

டாக்டர். ந. கடிகாசலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை—600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | — | Thamizhum Thamizharum |
| Author | — | Dr. N. GHADIGACHALAM<br>Senior Research Fellow<br>International Institute of Tamil Studies. Madras—600113. |
| Publisher & Copy Right Holder | — | International Institute of Tamil Studies, Madras—600-113 |
| Publication Number | — | 54 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | September, 1982 |
| Paper Used | — | 18kg D/Demy F. White Printing |
| Size of the book | — | 21 X 18cms |
| Printing types used | — | 10pt. |
| Number of pages | — | xii+108 |
| Number of copies | — | 2,200 |
| Price | — | Rs. 5 (Rupees Five only) |
| Printer | — | Prints De'lite, Madras—600094<br>Phone : 420249 |
| Binding | — | Cardboard |
| Artist | — | Amudhone |
| Subject | — | Tamil and Tamil Studies in India and Abroad |

# முகவுரை

'உலகில் தமிழும் தமிழரும்' என்ற நூல் 1976—இல் வெளிவந்தது. அந்த நூல் விற்பனையாகி ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. மறுபடியும் அதற்குப் பின்பு அந்நூலைப் பற்றிப் பலரும் கேட்டனர். அதோடு சில ஆண்டுகளில் உலகில் பல பகுதிகளிலும் இருக்கின்ற தமிழர்களிடம் தமிழ் உணர்வு மிகுதியாக வளர்ந்துள்ளதை 1980—இல் மொரீசியசு சென்றபோது உணர்ந்தேன். உலகில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கின்றார்கள் தமிழ்க் கல்வி எந்த நிலையில் நடை பெறுகின்றது என்பதைப் பற்றி ஒரு அறிமுக நூலாக ஒரு நூல் இருக்க வேண்டும் என்று இந்நிறுவனம் உணர்ந்தது. அந்த உணர்ச்சியின் வெளிப்பாடே டாக்டர் ந. கடிகாசலம் அவர்களின் 'தமிழும் தமிழரும்' என்ற நூலாகும் இந்நூல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிதாகச் செம்மைப் படுத்தப்பட்டு வெளிவருதல் நல்லது. ஏனெனில் அன்றாடம் உலகில் பலவகை மாற்றங்கள் நடைப் பெற்றுக் கொண்டிருக் கின்றன. கருத்துக்களைத் தொகுத்துச் சீர்படுத்தி, செவ்வை யாகத் தந்த டாக்டர் ந. கடிகாசலம் அவர்களைப் பாராட்டு கிறேன்.

இந்நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் உறுதுணையாக அமைகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர். திரு. செ.அரங்க நாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி.

உரிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த பிரின்ட்ஸ் டிலைட் அச்சக உரிமையாளர் திரு. இராமச்சந்திரன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

சென்னை-113 — ச. வே. சுப்பிரமணியன்

6-9-1982. — இயக்குநர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# முன்னுரை

தமிழும் தமிழரும் என்னும் இந்நூலில், தமிழர்கள் வாழ்கின்ற மாநிலத்தின் / நாட்டின் —

(1) மொத்த மக்கள் தொகை: அதில் தமிழர்தம் எண்ணிக்கை; அவர்தம் தொழில்;

(2) கல்வி நிறுவனங்களில் (பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம் முதலியவற்றில்) தமிழ்; கல்வி நிறுவனங்களின் பெயர்கள், மாணவர் எண்ணிக்கை; அரசு வழங்கும் மானியம்;

(3) தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகள், அவற்றின் பணிகள்,

(4) குறிப்பிடத்தக்க தமிழர்கள் — அரசு நிலையில் கல்வி நிறுவனத்தில், தொழிலில், கலைத் துறையில், எழுத்தாளர்கள், வெளிநாட்டில் தமிழ்ப்பணி புரிவோர்;

(5) தமிழின் ஆக்கத்திற்காக மாநில அரசின் (அ) பல்கலைக்கழகத்தின் முயற்சிகள்;

(6) நூல்நிலையங்களில் இடம் பெற்றுள்ள தமிழ் நூல்கள் பற்றிய செய்திகள்; இடம் பெற்றுள்ள தமிழ்த் தினசரி, வார, திங்கள் இதழ்கள்; அங்கு வெளியாகும் தமிழ் இதழ்கள்.

(7) வெளியாகும் தமிழ் நாளேடுகள், வார, திங்களிதழ்கள்

(8) வானொலி & தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் என்பன போன்ற பல செய்திகளைத் தரவேண்டும் என எண்ணி, பலருக்கும் இதுகுறித்த தகவல்களைச் சேகரித்து அனுப்புமாறு கேட்டுக் கொண்டோம்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற தகவல்களோடு, பிறரிடம் கேட்டறிந்த தகவல்கள், பத்திரிகைகளில் வெளியான சில செய்திகள் ஆகியனவும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

பொது நிலையில், தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்கள், தமிழ்க் கல்வி எந்த நிலையில் வழங்கப்படுகிறது, தமிழ்த் தொடர்பாக நிகழ்த்தப்பெற்ற ஆழ்வுகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதுதான் இந்நூலின் பொதுவான நோக்கம்.

*தமிழ்* என்னும் தலைப்பில், தமிழ் மொழியின் சிறப்பு, இலக்கியங்களில் தமிழ் பயின்று வந்துள்ள நிலை, பிறநாட்ட றிஞர்களும் இந்நாட்டு அறிஞர்களும் தமிழ் மொழியின் சிறப்பை எவ்வாறு எடுத்துக்கூறியிருக்கின்றனர் ஆகிய செய்திகள் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன.

*தமிழர்* என்னும் தலைப்பில், தமிழர்தம் தோற்றம் உல கின் பல நாடுகளுக்கும் அவர்கள் குடியேறிய நிலை ஆகியவை மிகச் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன.

*தமிழும் தமிழரும்* எனும்பகுதியில், தமிழர் வாழும் நாடுகளைப் பற்றிய செய்திகள், தமிழ்க் கல்வி நிலை, அந்நாடுகளில் வெளியாகும் தமிழிதழ்கள், (நாள், வார திங்கள்) வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சி கள், தமிழ்ச் சங்கங்கள், குறிப்பிடத்தக்க தமிழர்கள் போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

*உலகில் தமிழ் வளர* என்னும் பகுதியில், இனி தமிழ்க் கல்வி வளம் பெறவும், வெளிநாடுகளில் வாழும் தமிழர் நலன் காக்கவும், தமிழ்ப் பண்பாடு, வரலாறு, இலக்கியம் தொடர்பாகச் செய்யப்பட வேண்டிய ஆய்வுகளைப் பற்றி யும் எழுந்த எண்ணங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன.

இந்நூல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை செம்மைப் படுத்தப் பெற்று, பல புதிய செய்திகளுடன் வெளிவர வேண்டும் என்பது நிறுவன இயக்குநரின் எண்ணம். எனவே '*தமிழும் தமிழரும்*' தொடர்பான செய்திகள் மேலும் கிடைக்கப் பெற்றவர்கள் தெரிவித்தால் அன்புடன் ஏற்றுக் கொள்வோம்.

**ந. கடிகாசலம்**

# நன்றியுரை

இந்நூலைப் பற்றிய எண்ணத்தையும், எவ்வாறு இந்நூல் அமைய வேண்டும் என்பதை அடிக்கடி எடுத்துக் கூறியும் ஊக்கமூட்டி, இச்சிறிய நூலை உருவாக்க நான் எடுத்துக் கொண்ட அதிதப்படியான காலத்தைப் பொருட்படுத்தாமல், நூல் நல்ல முறையில் வர வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் காட்டி வழிநடத்திய நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப் பிரமணியன் அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூல் உருவாகும்போது பல்வேறு நிலைகளில் எனக்கு உறுதுணையாக இருந்த டாக்டர் க. காந்தி, திரு. பூ. சுப்பிர மணியம், நூலினிறுதியில் உள்ள சொல்லகராதியைத் தயாரித் தளித்த என் ஆய்வு மாணவர்கள் திரு. இரா. சாந்தாராம், திரு. த. அழகப்பராசு ஆகியோர்க்கும் நன்றி உரியது.

இந்நூல் உருவாவதற்குப் பல்வேறு நிலைகளிலும் செய்தி களைச் சேகரித்து அனுப்பியுதவிய அன்பர்கள் அனைவருக் கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ந. கடிகாசலம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | iii |
| முன்னுரை | iv |
| நன்றியுரை | vi |
| 1. தமிழ் | 1 |
| 2. தமிழர் | 17 |
| 3. தமிழும் தமிழரும் | 22—85 |
| இந்தியா | 22-23 |
| அந்தமான் நிக்கோபார் தீவுகள் | 23 |
| ஆந்திரப் பிரதேசம் | 24 |
| உத்தரப் பிரதேசம் | 25 |
| கருநாடகம் | 27 |
| கேரளம் | 28 |
| தில்லி | 29 |
| பஞ்சாப் | 30 |
| புதுச்சேரி | 31 |
| மேற்கு வங்காளம் | 32 |
| கனடா | 33 |
| கிரேட் பிரிட்டன் | 34 |
| சிங்கப்பூர் | 36 |
| செக்கோசுலோவாகியா | 38 |
| செனகால் | 39 |
| சோவியத் ஒன்றியம் | 40 |
| பிஜித் தீவு | 42 |
| போலந்து | 43 |

| | |
|---|---|
| மலேசியா | 44 |
| மேற்கு ஜெர்மனி | 58 |
| மொரீசியசு | 66 |
| ஸ்வீடன் | 68 |
| ஸ்ரீலங்கா | 68 |
| ஆஸ்திரியா | 71 |
| ஆஸ்திரேலியா | 72 |
| இந்தோனீசியா | 73 |
| இத்தாலி | 74 |
| ஈராக் | 76 |
| எத்தியோப்பியா | 76 |
| கயானா | 76 |
| கிரீஸ் | 77 |
| கம்போடியா | 77 |
| கீன்யா | 77 |
| குவாட்டிமேலாப் | 77 |
| கொரியா | 78 |
| சீனா | 78 |
| சுரிநாம் | 79 |
| சுவிட்சர்லாந்து | 79 |
| தாய்லாந்து | 80 |
| தான்சேனியா | 80 |
| துருக்கி | 80 |
| தென்னாப்பிரிக்கா | 81 |
| நியுகாலிடோனியா | 81 |
| பாகிஸ்தான் | 81 |
| பிரெஞ்சு கயானா | 81 |
| மார்ட்டினிக் | 81 |
| யுகாண்டா | 82 |
| ரீயூனியன் | 82 |
| வெனிசுலா | 82 |
| ஜமைக்கா | 82 |
| ஸ்பெயின் | 83 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 83 |
| பிரான்சு | 84 |
| பின்லாந்து | 85 |
| ஜப்பான் | 85 |
| ஹாலந்து | 85 |

**4. உலகில் தமிழ் வளர** **86—92**

தமிழ்க்கல்வி 86
ஒப்பீட்டாய்வு 88
தமிழ்ப்பாட நூல்கள் 88
வரலாறு, பண்பாடு, இலக்கியம் தொடர்பான ஆய்வு 88
அகராதி 89
நூலடைவு 90
சுவடி நூல் பாதுகாப்பு 90
மொழிபெயர்ப்புப் பணி 91
கல்வெட்டுகள் 92

**பின்னிணைப்பு I** 93
**பின்னிணைப்பு II** 98
**சொல்லகராதி** 99

# தமிழும் தமிழரும்

# 1. தமிழ்

மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் கருவியாக விளங்குவது மொழி. உலகில் வழங்கும் ஒவ்வொரு மொழிக்கும் வரலாறு உண்டு. பழமையான இலக்கிய வளம் கொண்ட மொழிகளில் குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்குவது தமிழ் மொழியாகும்.

## தமிழ் என்னும் சொல்

தமிழ் என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி பல பொருள்களைத் தருகிறது. 1. இனிமை 2. நீர்மை 3. இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூவகையாக வழங்கும் மொழி. 4. தமிழ் நூல் 5. தமிழர் 6. தமிழ் நாடு. தொகுதி II. பக். 1756)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் தமிழ் என்னும் சொல் பயின்று வந்துள்ளது.

'தமிழ் கூறு நல்லுலகம்', 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்' என்னும் தொடர்களால் தமிழ் மொழியையும் அது பேசப்பெறும் நாடுகளையும் தொல்காப்பியப் பாயிரம் குறிக்கிறது.

செந்தமிழ் நிலம், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என எச்சவியலில் குறிப்பிடும் பொழுது 'செம்' என்னும் அடைமொழியைத் தமிழோடு சேர்த்துரைத்திருப்பது உணரத் தக்கது. தமிழின் செம்மையை அது உணர்த்தி நிற்கிறது.

தமிழ் என்னும் சொல் சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளது. இச்சொல் பல பொருள்களை உணர்த்துவதையும், பல அடைமொழிகள் இச்சொல்லோடு சேர்ந்திருப்பதையும் காண முடிகிறது. சங்க இலக்கியங்களில் 15 இடங்களில் தமிழ் என்னும் சொல் பயின்று வந்துள்ளது. கீழ்வரும் பொருளை அது உணர்த்தி நிற்கிறது.

1. மொழி — தமிழ் கெழு கூடல் (புறம் 58)
2. நாடு — தண்டமிழ்ப் பொது எனப்பொறான் (புறம் 51)
3. மக்கள் — நாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள் (பரி. தி. 7. 5)
4. படை — தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானத்து (புறம் 19)
5. இலக்கியம் — தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் (பரி. 9. 25)

தமிழில் எழுந்த முதல் காப்பியமான சிலப்பதிகாரத்திலும் தமிழ் எனும் சொல் 25 இடங்களில் பயின்று வந்துள்ளது. இங்கு அருந்தமிழ், தண்டமிழ், தென்தமிழ், வண்டமிழ் ஆகிய புதிய அடைமொழிகளும் கையாளப்பட்டுள்ளன. புதிய பொருளும் தமிழ் என்னும் சொல்லுக்கு வழங்கப்படுவதை அறிய முடிகிறது.

"இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்" (3610) எனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தால் தமிழுக்குரிய *இனிமை* எனும் பொருளும் பெறப்படுகிறது. "*தமிழ் தழீஇய சாயலவர்*" (*சீவக* 2026), "*தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே*" (கம்ப. பம்பை. 29) ஆகியன வற்றைத் தமிழ் என்னும் சொல் *இனிமை* என்னும் பொருளில் வருவதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இனிமையையே தமிழ் மொழிக்கு அடையாக வைத்து *இன்தமிழ்* என வழங்குவதற்கு, "இன்தமிழ் இயற்கை இன்பம்" (*சீவக* 2063) என்பதைக்காட்டாகக் கொள்ளலாம். தமிழ் என்னும் சொல்லுக்கு *இனிமை* என்ற பொருளைக் கூறுமிடத்தெல்லாம் தமிழ் என்பது இனிமையுடைய வற்றிற்கு அடையாய் அடுத்து வருவதற்கு, "தமிழ் வையைத் தண்ணம் புனல்" (6, 60) என்னும் பரிபாடல் அடியைக் காட்டலாம்.

தமிழ் என்னும் சொல் *அழகு* என்னும் பொருளையும் உடையது என்பதற்கு "*தமிழ் தழீஇய சாயல்*" என்பதே சான்று. வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்றையும் குறிக்கும் வகையில்

(த - வல்லினம்; மி - மெல்லினம் ; ழ் - இடையினம்) தமிழ் என்னும் சொல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ் என்பதை, தம்+இழ் எனப் பிரித்து, தன்னிடத்தில் 'ழ்' என்பதைக் கொண்டது தமிழ் என்று A. S. நாராயணசாமி நாயுடு பொருள் கூறுவார். 'இழும்' என்பதன் அடியாக 'இழ்' அமைந்து இனிமை எனப் பொருள் தருகிறது. இழுமென் மொழி (1491) எனும் தொல்காப்பியத் தொடர் இதை உறுதிப்படுத்தும். தமி எனும் அடியும், தனித்தன்மை வாய்ந்தது, ஒப்புயர்வற்றது எனும் பொருளைப் பெற்றிருப்பதால் சிறந்து தனித்தன்மை கொண்டு விளங்கிய தமிழ் மொழிக்கு இப்பெயர் வழங்கியிருக்கலாம் என ஊகிக்கலாம்.

முத்தமிழ் என்றும் தமிழ் மொழி வழங்குவதுண்டு. "இயல், இசை, நாடகம் என்னும் இம் மூன்றில் - இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும்; இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச் செய்யும்; நாடகத் தமிழ் நடந்து காட்டி மக்களை நல்வழிப்படுத்தும்" என்பார் கி. ஆ. பெ. விசுவநாதம்.

உயர்ந்த மொழி, செம்மையான மொழி, தனித்த மொழி என்னும் கருத்தில் *உயர்தனிச் செம்மொழி* என்றும் தமிழை அறிஞர் சிறப்பித்துக் கூறுவர்.

*செந்தமிழ்* என்னும் வழக்கு திராவிடப் பழமையைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. செந்தமிழில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருப்பது போல, ஒரே சொல் பல பொருள்களைத் தருவதும் உண்டு. இலக்கியத் தமிழில் வடமொழிச் சொற்பயிற்சி மிக அருகியே காணப்படுவதும் தமிழின் மாண்பாகும். தமிழ் மொழியின் வடிவங்களும் அடிச்சொற்களும் தெலுங்கில் இடம் பெயர்ந்து அமைந்துள்ள நிலையால் (அவன் > வாடு) திராவிடக் குடும்பத்து மொழிகளில் தமிழ் தாயாகும் போக்கும் காணப்படுகிறது எனலாம்.

"EVEN such languages as Telugu, Canarese and Malayalam are merely offshoots of their Tamil mother. Some scholars

have fancied Telugu and other so-called Dravidian languages are quite independent of Tamil. This is the old song of grown up child turning proud and disowning all relationship to their ancestry. If all Sanskrit words and derivatives are eleminated from these languages the residue of words left will be found to be ancient Tamil words now considered obsolete or found in poetry of by gone days." *(R. J. 'Lazarus, South India Research vol I)* என்னும் கூற்றும் இங்குச் சுட்டத் தக்கது.

பல்வேறு சிறப்படைமொழிகளுடன் தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ள பாங்கினைக் காண்போம்.

அசைவில் செழுந்தமிழ் (பெரிய புராணம். சம்பந்தர் 24)

அணி ஆர் செந்தமிழ் (சம்பந்தர் 331)

அந்தமிழ் (நாலாயிரம். 650; தமிழியக்கம் 11)

அமிழ்தம் எனுந் தமிழ் (கனிச்சாறு 1 பக். 109)

அமுதம் அனைய தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 4)

அமுதம் ஊறிய தமிழ் (இசை -.)

அமுதனைய செந்தமிழ் (செந். செல்வம் 10)

அமுது ஊறும் தீந்தமிழ் (இசை 11)

அமுது ஒத்த தமிழ் (தமிழியக்கம் 91)

அரிய தமிழ் (திருப்புகழ் 1101)

அரிய தீந்தமிழ் (கந்தபுராணம் 2. 27. 10)

அருந்தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 62; கனிச்சாறு 1)

அருந்தமிழ் அகப்பொருள் (நம்பி 1)

அலங்கார்ந்த செந்தமிழ் (கனிச்சாறு 1)

அளிதமிழ்

ஆடல் தரும் செந்தமிழ் (தமிழியக்கம் 5)

ஆய்ந்த முதுதமிழ் (கல்லாடம் சிறப். பா)

ஆர் தமிழ் (தமிழலங்காரம் 21)
ஆரா அருந்தமிழ் (சம்பந்தர் 89)
ஆழி அமுதனைய செந்தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 17)
ஆற்றல் சால் தமிழ்

இசைத் தமிழ் (நாலாயிரம் 718)
இசை மலி தமிழ் (சம்பந்தர் 22)
இருந்தமிழ் (தமிழ் விடு தூது 151)
இலங்கு தமிழ்
இளவண்டமிழ் (வில்லிபாரதம் 1. 7. 20)
இன் தமிழ் (சீவக சிந்தாமணி 2063)
இன்பத் தமிழ்
இன்புறுந் தமிழ் (சம்பந்தர் 214)
இன்றமிழ் நாலாயிரம் 1057)
இன்னிசைச் செந்தமிழ் (சுந்தரர் 67-11)
இனிக்குந் தமிழ் (கனிச்சாறு 1)
இனிய தமிழ் (மலரும் மாலையும்)

உண்மைத் தமிழ் (தமிழலங்காரம் 17)
உயர் தமிழ் (தமிழியக்கம் 12-16)
உரு ஆகும் ஒண்தமிழ் (சம்பந்தர் 150)
உறு தமிழ் (சுந்தரர் 19-11)
ஊறும் இன்தமிழ் (சம்பந்தர் 259)

எழிற்றமிழ்
எள்ளல் இலாத் தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 45)
என்றும் தழைத்து வரும் தமிழ் (மலரும் மாலையும்)
என்றுமுள செந்தமிழ்
என்றுமுள தென்தமிழ் (கந்தபுராணம் 3. 3. 47)

ஏரினார் தமிழ் (சம்பந்தர் 288)
ஏழிசை இன்தமிழ் (சுந்தரர் 100-10)
ஏறுபல்பொருள் முத்தமிழ் (சம்பந்தர் 373)

ஒண்டமிழ் (நாலாயிரம் 3127)

ஒண்சீர் உறை தண்தமிழ் (சுந்தரர் 84 - 10)

ஒண்தீந்தமிழ் (திருக்கோவையார் 20)

ஒப்பிலா முத்தமிழ்

ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் (சுந்தரர் 67. 11)

ஒளிர்பூந்தமிழ் (சம்பந்தர் 194)

ஓங்கிய செந்தமிழ்

ஓங்கு தமிழ் (கனிச்சாறு 1)

கரும்பனைய தீந்தமிழ் (இசை 17-10)

கலைத் தமிழ்

கலை மலி தமிழ் (சம்பந்தர் 120)

கலை முத்தமிழ் (சம்பந்தர் 153-10)

கவின் தமிழ் (தமிழலங்காரம் 63)

கவினார் தமிழ்

கற்பகத் தமிழ்

கன்னல் தமிழ் (பாரதிதாசன்)

கன்னல் நிகர் தமிழ் (தமிழியக்கம் 90, 119)

கன்னித் தமிழ் (யாப்பருங்கலக்காரிகை அவையடக்கம்)

கன்னிப் பசுந்தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 2)

கனத்த செந்தமிழ் (திருப்புகழ் 949)

கனித் தமிழ் (கனிச்சாறு 1)

குலமார் தமிழ் (சம்பந்தர் 153)

குலவேந்தர் செந்தமிழ் (சம்பந்தர் 193)

குளிர் தமிழ் (கனிச்சாறு 1)

குற்றமில் செந்தமிழ் (சம்பந்தர் 113)

குறையாத் தமிழ் (சுந்தரர் 80-10)

குன்றாத் தமிழ் (சம்பந்தர் 18)

கொழுந்தமிழ் (கனிச்சாறு 1)

கோதில் தமிழ்
கோலத் தமிழ்
கோவைத் தமிழ் (நாலாயிரம் 1367)

சங்கத் தமிழ் (நாலாயிரம் 503)
சங்கமலி செந்தமிழ் (சம்பந்தர் 332)
சந்தத் தமிழ் (திருப்புகழ் 860; செந்தமிழ்ச் செல்வம் 67)
சந்த நிறை தண்டமிழ் (சம்பந்தர் 355)
சந்தம் ஆர் தமிழ் (சம்பந்தர் 305)
சந்தம் ஆர்ந்து அழகாய தண்டமிழ் (சம்பந்தர் 225)
சந்தம் மிகு தண்டமிழ் (சுந்தரர் 4. 10)
சந்த மதுரத் தமிழ்
சந்தமின் தமிழ் (சம்பந்தர் 114)
சந்துலாந் தமிழ் (சம்பந்தர் 245)

சித்திரத் தமிழ் (திருப்புகழ் 1265)

சீர் ஒன்புறுஞ் செந்தமிழ் (சம்பந்தர் 214)
சீர் உறை தண்டமிழ் (சுந்தரர் 84-10)
சீர் ஊர் செந்தமிழ் (சுந்தரர் 26-10)
சீர்த்தமிழ் (திருவருட்பா)
சீர்மலி செந்தமிழ் (நாலாயிரம் 161)
சீர்மன்று செந்தமிழ் (நாலாயிரம் 1137)
சீர்மிகுந்த தமிழ் (சம்பந்தர் 60)
சீர் வண்ண ஒண்டமிழ் (நாலாயிரம் 3127)
சீரார் தமிழ் (சம்பந்தர் 37)
சீரார்ந்த தமிழ் (நாலாயிரம் 740)
சீரின்மலி செந்தமிழ் (சம்பந்தர் 333)

செஞ்சொற் றமிழ் (சுந்தரர் 42-10)
செந் தண்டமிழ் (சம்பந்தர் 182)

செந்தமிழ் (தொல். பாயிரம்; சம்பந்தர் 41-43;
மலரும் மாலையும் 1057)
செந்தமிழ்ப் பத்தும் (நாலாயிரம்)
செப்பரிய தண்டமிழ் (சம்பந்தர் 100)
செய்ய தமிழ் (மலரும் மாலையும் 1057)
செல்வச் செந்தமிழ்
செழுந் தமிழ்
செறி தரு தமிழ் (திருவலஞ்சுழி மும்மணிக் கோவை)
செறிவண்டமிழ் (சம்பந்தர் 199)

சொல்லார் தமிழ் (சம்பந்தர் 31, 171)
சொல் வழுவாத ஒண்டமிழ் (நாலாயிரம் 3083)
சொற்றமிழ் (சம்பந்தர் 274)

ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ் (பெரிய புராணம்)
ஞாலம் மல்குந் தமிழ் (சம்பந்தர் 212)
ஞாலம் மிக்க தண்டமிழ் (சம்பந்தர் 51)
ஞானத் தமிழ் (சம்பந்தர் 117-12; திருப்புகழ் 718; நாலா. 2182)

தக்க தென்தமிழ் (சம்பந்தர் 218-7)
தகு தமிழ் (சம்பந்தர் 13)
தகைமலி தண்டமிழ் (சம்பந்தர் 44)
தண்டமிழ் (புறம் 51; சிலப். பதிகம்; சுந்தரர் 84-10; புறப்.
வெண்பா. சிறப். 3)
தண்ணார் தமிழ் (திருவாசகம் 8-20)
தமிழ் கெழு கூடல் (புறம் 58)
தலமார் தரு செந்தமிழ் (சம்பந்தர் 160)
தவம் மல்கு தமிழ் (சம்பந்தர் 1?2)
தன்னேரிலாத தமிழ் (தமிழியக்கம் 90)
தனித்தமிழ்

திணைகொள் செந்தமிழ் (சுந்தரர் 18-10)

தித்திக்கும் செந்தமிழ் (மலரும் மாலையும் 1043)
திரிசங்கத் தமிழ் (திருப்புகழ் 69)
திருத்தமிழ் (கந்தபுராணம் 4. 13. 231)
திருந்து தமிழ் (சிவப்பிரகாசர்)
திருநெறித் தமிழ்
திருநெறிய தமிழ் (சம்பந்தர் 1)
திருமலிந்த தமிழ் (தமிழியக்கம் 50)

தீஞ்சுவைத் தமிழ்
தீதிலா ஒண்டமிழ் (நாலாயிரம் 3567)
தீந்தமிழ் (திருக்கோவையார் 20; குமரகுருபரர். தமிழியக்கம் 108)

துய்ய தமிழ்
துளங்கில் தமிழ் (சம்பந்தர் 13)
தூமண் தமிழ் (சூளாமணி 4)
தூய தமிழ் (நாலாயிரம் 306, 566; கனிச்சாறு 1)

தெய்வத் தமிழ் (பெரிய புராணம். மூர்த்தி நாயனார் 3)
தெய்வத் திருத்தமிழ்
தெரி தமிழ் (திருப்புகழ் 592)
தெள்ளு தமிழ் (தமிழ் விடு தூது 185; திருப்புகழ் 619-1290)
தெள்ளூற்ற தமிழ்
தெளி தமிழ்
தெளிதரு முத்தமிழ் (கந்தரந்தாதி 25)
தென்தமிழ் (சம்பந்தர் 218-7)
தென்னன் தமிழ் (நாலாயிரம் 2674; திருவிசைப்பா 26-3)

தேக்குறு தமிழ் (கந்தபுராணம் 2. 26. 4)
தேமரு தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 1)
✓தேனார் இன்சொல் தமிழ் (வில்லிபாரதம் 1277)
தேன் நேரார் தமிழ் (சம்பந்தர் 126)

நல்ல செந்தமிழ் (சம்பந்தர் 218)
நல்ல தமிழ் (சம்பந்தர் 327)
நல்லவாய இன்தமிழ் (சம்பந்தர் 300)
நல்லிசைத் தமிழ் (நாலாயிரம் 718)
நல்லியனின் தமிழ் (நாலாயிரம் 751)
நலங்கொள் தமிழ் (சம். 14)
நலந்தமிழ் (சுந். 3-10; 55-4)
நற்றமிழ் (நாலா. 697; சுந்தரர் 53-10)
நாடவல்ல தமிழ் (சம்பந்தர் 281; 283)

நிலைப்புற்ற தமிழ் (தமிழியக்கம் 106)

நீண்ட தமிழ் (கம்பர்)

நெடுந்தமிழ் (பெரிய. திருஞான. 75)

பசுந்தமிழ் (கனிச்சாறு 1; தமிழலங்காரம் 35)
படமலி தமிழ் (சம்பந்தர் 21)
பண்ணார் தமிழ் (நாலாயிரம் 3644)
பண்ணார்ந்த செந்தமிழ் (மலரும் மாலையும் 1005)
பண்ணாருந் தமிழ் (சம்பந்தர் 323)
பண்ணிடைத் தமிழ் (சுந்தரர் 78-7)
பண்ணியல் தமிழ் (சம்பந்தர் 309-5)
பண்ணின் தமிழ் (சுந்தரர் 78-7)
பண்ணுலாம் அருந்தமிழ் (சம்பந்தர் 348)
பண்பொலி செந்தமிழ் சம்பந்தர் 184)
பந்தம் ஆர் தமிழ் (" 363)
பரவு ஆர் தமிழ் ( " 33)
பரவிய தமிழ் (" 287)
பல்கு தமிழ் (கனிச்சாறு 1)
பல்பொருள் முத்தமிழ் (சம்பந்தர் 373)

பல ஓசைத் தமிழ் (சம்பந்தர் 11 - 4)
பலங்கிளர் தமிழ் (சுந்தரர் 69-4)
பழுத்த செழுந்தமிழ் (திருவிசைப்பா 5-12)
பன்னலந் தமிழ் (சுந்தரர் 64-4)
பாகான தமிழ்
பாங்குறு செந்தமிழ் (தமிழியக்கம் 102)
பாடலாந் தமிழ் (சுந்தரர் 64-10)
பாடுந்தமிழ்
பாமரு செந்தமிழ் (சம்பந்தர் 43)
பாமருவு தமிழ் (நாலாயிரம் 1457)
பாரின் மலிகின்ற புகழ்நின்ற தமிழ் (சம்பந்தர் 333)
பாவணத் தமிழ் (சுந்தரர் 78-10; திருவிசைப்பா 21-10)
பாவளருந் தமிழ் (நாலாயிரம் 1657)
பாவின் தமிழ் (சுந்தரர் 78-10)
பாவு தண்டமிழ் (நாலாயிரம் 1157)

பீடுடைப் பழந்தமிழ் கனிச்சாறு 1)
பீடுநிறை தமிழ் ( ” )
புகழ் நின்ற தமிழ் (சம்பந்தர் 333)
புகழ் வண்டமிழ் ( ” 240)

பூந்தமிழ் ( ” 194)

பெருகிய தமிழ் ( ” 19)
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப்புலவன் (கல்லாடம். பாயிரம். 54)

பேரியல் இன்தமிழ் (சம்பந்தர் 64)

பைந்தமிழ் (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)
பொங்குதமிழ் (கந்தபுராணம்)
பொய்யாத் தமிழ் (சுந்தரர் 13-14)
பொருவிலாத் தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 86)

மங்காத செந்தமிழ் (தமிழியக்கம் 115)

மண்டலமெங்கும் கமழும் அருந்தமிழ் (மலரும் மாலையும்)

மதுரத் தமிழ்

மருவிய தமிழ் (சம்பந்தர் 371-12)

மழலைத் தமிழ்

மறை வளருந் தமிழ் (சம்பந்தர் 203)

மன்னு தமிழ் (கனிச்சாறு 1)

மன்னுந் தமிழ் (தொண்டை மண்டல சதகம் 83)

மாத்தமிழ் (தமிழியக்கம் 8; கனிச்சாறு 1 பக். 75)

முக்கனி அருந்தமிழ் (சேக்கிழார் பிள்ளைத் தமிழ் 5)

முங்குதமிழ் (சேக்கிழார் பிள்ளைத் தமிழ் சிறு பறை. 10)

முடிவில் இன்தமிழ் சம்பந்தர் 94)

முத்தண் தமிழ் (கந்தபுராணம் 2. 2 . 53)

முத்தமிழ் (மலரும் மாலையும் 1075)

முத்தித் தமிழ் (திருப்புகழ் 1259)

முதிய மாதமிழ் (திருப்புகழ்

முதுதமிழ் (கனிச்சாறு 1 பக். 50 )

முந்து தமிழ் (சேக்கிழார் பிள்ளைத் தமிழ்-சிறுபறை. 9,

மும்மைத் தமிழ்

முனிவில் தமிழ் ( ,, சிறுபறை. 8)

மூவாத் தமிழ் (தண்டி)

மெய்த் தமிழ் (கந்த. 2. 24. 5)

மேன்மைத் தமிழ் (பெரிய புராணம்)

மோனை முத்தமிழ்

வடம் ஆர் தமிழ் (சம்பந்தர் 158)

வண்டமிழ் (" 62; 199)

வண்ண ஒண்தமிழ் (நாலாயிரம்)

வடிக்குறும் தமிழ் (திருவருட்பா)

வடி தமிழ் (செந்தமிழ்ச் செல்வம் 5)

வண்டமிழ் (சுந்தரர் 83-6)

வாய்த் தமிழ் (தமிழலங். 80)

வாயிருந் தமிழ் (அப்பர்)

வார் தேனார் தமிழ் (சம்பந்தர் 126)

வியந்தரு செந்தமிழ் (தமிழியக்கம் 95)

வியன் தமிழ் (நாலாயிரம் 442)

விலையுடை அருந்தமிழ் (சம்பந்தர் 262)

விறல் தமிழ் (கனிச்சாறு 1 பக். 92)

வெண்தமிழ் (தமிழலங்காரம் 76)

இவ்வாறு பல சிறப்படைமொழிகளுடன் இலக்கியங்களில் பயின்று வந்துள்ள தமிழின் சிறப்பை மேலை நாட்டறிஞர்களும் விவரித்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றைக் காண்போம்.

TAMIL is perhaps the only example of an ancient classical tongue which has survived as a spoken language, for more than 2500 years with its basic structure almost unchanged.

*—Encyclopaedia Brittanica.*

TAMIL is the most highly cultivated language and possesses the richest stores of indigenous literature.

*—Prof. Max Muller.*

THE great antiquity of Tamil, which is one worthy rival of Sanskrit, is abundantly plain

*—Rev. G. U. Pope.*

TAMIL has a wealth of words which English lacks ; thus in its first stage, new form is the blossom. The apple is a பிஞ்சு, developed but still immature is காய்; when fully ripe it is கனி.

*–Rev. G. U. Pope*

IT is not perhaps extravagant to say that Tamil in its poetic form, is more polished and exact than the Greek and in both dialects with its borrowed treasure, more copious than Latin in its fullness and force it resembles English and German more than any other.

*-Dr. Winslow.*

THE Tamil language is extraordinary in its subtlety and sense of logic. The perfection with which it has been developed into an organ for precise and subtle thought, combined with the fact that it represents a much earlier stage in the evolution of inflexional language than the Indo-Germanic tongue suggests the priority of the Dravidians in attaining settled order and regular Government....... of all the Dravidian languages. Tamil is the one best fitted to be the instrument of exact thought.

*-Dr. G. Slater.*

PERHAPS no language combines greater force with equal brevity and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The sequence of things, of thought and action and its results, is always maintained inviolate, in the structure and

nature of the Tamil language .... No human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than Tamil.

*-Percival.*

THE mode of collocating its (Tamil) words follows the logical or intellectual order more so than even Latin or Sanskrit.

*-Dr. Schmidt.*

TAMIL is the earliest cultivated of all the Dravidians idioms, the most copious and contains the largest portion and the richest variety of indubitably ancient forms.

TAMIL, the most highly cultivated *ab intra* of all Dravidian idioms, can dispense with its Sanskrit altogether, if need be, and not only stand alone, but flourish without its aid.

THE ancient or classical Tamil language, called CENTAMIL, in which nearly all the literature has been written, contains exceedingly little Sanskrit.

*-Dr. Caldwell.*

இவ்வாறு மேலை நாட்டறிஞர்கள் வாயிலாகச் சிறப்பாகக் கூறப்பெற்றுள்ள தமிழ் மொழியின் சிறப்பை இந்நாட்டு அறிஞர்கள் புகழ்ந்திருப்பது வெள்ளிடைமலை. அவற்றுள் ஒரு சில இங்கே தரப்படுகின்றன.

IF LATIN is the language of the law, Hebrew the language of ethical religion, Sanskrit the language of philosophy. English, French, and German are the languages of science, TAMIL is the language of poetry of divine experience.

*-Prof T. P. Meenakshisundaram.*

TAMIL or Dravida was not merely the language of South India, but before the Aryans came it was the language of the whole India and was spoken from Kashmir to Cape Comorin.

*-Dr. B. R. Ambedkar.*

OF all the languages now spoken in India TAMIL reached high stage of development in very early times. It grew uninfluenced by Sanskrit and its speakers reached a high level of culture long ago.

*P. T. Srinivasa Iyengar.*

உலக மொழிகள் ஏறத்தாழ 3000 எனக் கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றுள் தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வலிமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புக்களை ஒருங்கே உடையது தமிழே.

**—ஞா. தேவநேயப் பாவாணர்.**

இத்தகு பெருமை வாய்ந்த தமிழ் மொழியைப் பேசும் தமிழரைப் பற்றி அடுத்துக் காண்போம்.

# 2. தமிழர்

சூரியனிலிருந்து தெறித்து விழுந்த ஒரு பகுதியே இவ்வுலகம் என்பர். தழல் வடிவமாயிருந்த உலக உருண்டையின் மேற்புறம் குளிர்ச்சியடைந்து நீரும் நிலமுமாக மாறியது. நிலத்தின் மேற்புறம் முதலில் மக்கள் குடியிருப்பதற்கு ஏற்ற நிலையை அடைந்திருக்க வில்லை. முதன் முதலில் கடல் பூண்டுகளும், பின் மலைப் பூண்டு களும் மீனும் தோன்றி, தொடர்ந்து சிறு செடிகளடர்ந்த காடு களும் ஊர்வனவாகிய பாம்பு முதலியனவும், அதற்குப் பின்னர் தான் தழை மிகுந்த மரங்களும் விலங்கினமும் தோன்றலாயின; இறுதியாகத்தான் மனிதன் தோன்றியிருத்தல் கூடும் என்று நிலநூல் வல்லார் கூறுகின்றனர்.

உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த நிலப் பகுதி முதலில் குளிர்ந்து அமைந்த பகுதி தென்னிந்தியாவே; இங்கு தான் மனித இனம் முதலில் தோன்றியிருக்கக்கூடும் என்றும் புவியியல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இப்போது இந்தியக் கடலாக உள்ள பகுதியில் பரப்பான நிலமும், மலையும், ஆறும் இருந்து, பிறகு கடலில் ஆழ்ந்து மறைந்து போயிருக்கக்கூடும் என்றும் கூறுகின்றனர். குமரி மலை, பஃறுளி ஆறு முதலியன இருந்து கடல் கோளில் மறைந்தன என்று பழந்தமிழிலக் கியம் குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின், பழந்தமிழ் நாட்டு மக்களே தொன்மையான மக்களினம் என்று கருதல் நன்று. அவ்வாறன்றி, மத்தியதரைக் கடலை அடுத்த நிலப்பகுதி யில் மக்கள் முதன் முதல் தோன்றினர் என்றும், பிறகு

அவர்களே வெவ்வேறு நாடுகளில் குடியேறி வேறு வேறு இன மாய்ப் பிரிந்தனர் என்றும் சிலர் கருதுவர். பழந்தமிழ் நாட்டு மக்களே முதலில் தோன்றிய மனித இனம் என்றும், அவர்கள் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று பிரிந்து வாழ்ந்த பின் வேறு வேறு இனங்கள் வளர்ந்தன என்றும் கொள்வது பொருந்தும் என்பர் மு வ. (கலைக்களஞ்சியம், தொகுதி 8,பக். 510). அவ்வாறு தென்னிந்தியாவில் மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழர் என்று குறிக்கப்பட்டதோடு, வரலாற்றுத் தெளிவு கருதித் திராவிடர் என்ற பெயராலும் வழங்கப்பட்டனர் என்றும், வடநூலார் தமிழரைத் திராவிடர் என்றும் வழங்கினர்; ரோமர்கள் தமிழகத்தைத் தமிரிகி என்றும், சீனர் தெஹிமோளோ என்றும் வழங்கினர் என்றும் மு. வ. குறிப்பிடுகிறார்.

நம் தென்னாடானது கடல்கோட்படுவதற்கு முன் மேற்றிசையிலுள்ள ஆப்பிரிக்காக் கண்டத்தோடும், கீழ்த்திசையிலுள்ள ஜாவா முதலிய தீவுகளின் தொகுதியோடும் தொடர்புடையதாயிருந்தது; ஆதலால் மேற்குப் பாகத்தில் வசித்த நீக்ரோ மக்களினத்தோடும், கீழ்ப்பாகத்தில் வசித்த மங்கலியரோடும் தென்னாட்டில் இருந்த மக்கட் பகுதியினருக்குத் தொடர்பு உளதாயிருத்தல் இயல்பேயாம் எனக் கருதுகிறார் கா. சு. பிள்ளை (தமிழ் இலக்கிய வரலாறு, பகுதி ஒன்று, பக். 10)

அபினாஸ் சந்திரதாஸ் என்னும் அறிஞர் தம்முடைய ரிக்வேத இந்தியா என்னும் நூலில், பாணிகள் என்னும் வணிகர்கள் வடநாட்டிலிருந்து தென்னிந்தியாவிற்குள் வந்து நாகரிகத்தைப் பரப்பினார்கள் என்று கூறுகிறார். ஆனால், பாணிகள் என்னும் சொல் வணிகர் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாதலாலும்; 'பண்டைக் காலத்தில் கடல் வாணிகத்தில் தமிழர்களே சிறந்து விளங்கினர்; பாணிகள் ஆரியர்க்கு எதிரிகளாயிருந்தோர்; ஆரியர் கடல் செலவில் பயிற்சி பெற்றவரல்ல' என்னும் P. T. சீனிவாச ஐயங்கார் அவர்களின் கூற்றாலும் பாணிகள் ஆரிய வகுப்பைச் சார்ந்தவரல்ல என்பது தெளிவாகிறது.

பலுச்சிஸ்தானத்தில் காணப்படும் பிராகுயி (Brahui) என்னும் மொழியானது பெரும்பாலும் தமிழ் மொழியைச் சார்ந்திருக்கிறது என்பது மொழிநூலார் கூற்று. பாஸ்க் (Basque) என்னும் ஸ்பெயின் நாட்டுப் பழங்குடிகளோடும், காக்கேசியரோடும் உடலமைப்பிலும் தமிழர் ஒற்றுமையுடையவராயிருக்கின்றனர் என்று Haeckel என்னும் அறிஞர் கருதுகிறார். வட ஆப்பிரிக்கர், தென் ஐரோப்பியர் ஆகியரோடு Huxley என்னும் அறிஞர் தமிழரை

ஒற்றுமைப் படுத்துவார். Lydeker என்பார், தமிழர் நீக்ரவரோடு பெரிதும் தொடர்புடையவர் என்று கருதுவார்.

பழந்தமிழ் நாட்டு மக்களே தொன்மையான மக்களினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவ்வினத்தார் பேசிய தமிழ் மொழி மிகப் பழமை வாய்ந்தது என்றும் கூறலாம்.

பன்னெடுங்காலமாகக் கடல் கடந்து பிற நாடுகளில் குடியேறி வாணிகம் நடத்தினர் தமிழர் என்று கூறுவதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. சிந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தைப் பண் படுத்தியவர்கள் தமிழர் நம் முன்னோர்களே என்று அறிஞர் சிலர் குறிப்பிடுவர். பழைய எபிரேய மன்னனாகிய சாலமன் ஆட்சி செய்து வந்த நகரத்திற்குப் பழந்தமிழ் மக்கள் அகில், அரிசி, சந்த னக்கட்டை, மலைத் தேக்கு ஆகிய பொருட்களை எடுத்துச் சென்று வாணிகம் செய்திருக்கிறார்கள்.

மெசப்பொட்டேமியா நாட்டின் பாழடைந்த நகரங்களைப் பரி சோதனை செய்தபோது, தென்னிந்தியத் தேக்கு மரத்தினாலான தூலங்கள் அங்கிருந்த கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதுபெறப்படுகிறது. அந்நாட்டில் உள்ள பாபிலோன்(Babylon) நகரில்தமிழர்களும் வசித்திருக்கலாம்என ஊகிக்க முடிகிறது.கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து தமிழகத்திற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே வாணிகம் செழித்தோங்கியிருக்கிறது. எனவே இக் காலக்கட்டத்தில் தமிழகத்திலிருந்து பலர் அந்நாட்டிற்குக் குடி யேறியிருக்கலாம். முத்து, நுண்ணிய பருத்தியாலான ஆடைகள், மிளகு, இலவங்கம், ஏலக்காய் முதலிய பொருட்களை மத்திய தரை நாடுகளுக்குத் தமிழர்கள் எடுத்துச் சென்று வாணிகம் நடத்தியிருக்கலாம்.

இலங்கைத் தீவில் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே தமிழர் குடியேறியுள்ளனர். யாழ்ப்பாணம், திரிகோணமலை ஆகிய பகுதிகளில் இன்றும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள்.

சாவக நாடு, அந் நாட்டின் முக்கிய நகரமான நாகபுரம், அந்நாட்டை ஆண்ட பூமிசந்திரன், புண்ணியராசன் ஆகிய அரசர்கள் ஆகியோரைப்பற்றி மணிமேகலைக் காப்பியம் குறிப் பிடுகின்றது. இந்தச் சாவக நாடு ஜாவா அல்லது ஜாவா, சுமத் திரா ஆகிய இரு தீவுகளையும் குறிப்பதாக அறிஞர் கருதுவர். அகத்திய முனிவர் கட்டிய ஒரு சிவன் கோயிலும், அகத்திய

கோத்திரத்தைச் சேர்ந்த தென்னிந்திய வகுப்பினரின் சந்ததிகள் வசித்த இடம் ஒன்றும் ஜாவாவில் இருந்தன என்பதற்குச் சாசன சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

மலேசியா, கிழக்கிந்தியத் தீவுகள், கம்போடியா முதலிய நாடுகளில் தமிழர்கள் கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில் குடியேறி யிருக்கிறார்கள். தமிழர், தம் கலைகள், கோயில் கட்டும் முறைகள், சமயக் கருத்துகள், தெய்வ வழிபாட்டு முறைகள் ஆகிய வற்றை நன்முறையில் பரப்பியிருக்கிறார்கள். மலேசியாவில் கெடா (Kedah) என்னும் பகுதியில் தென்னிந்தியப் பண்பாட் டின் சில நிலைகள் வேரூன்றியிருக்கின்றன என்பர்.

நாகப்பட்டினத்தில் துங்கவர்மன் கட்டிய சூடாமணி பதும விகாரை என்னும் பௌத்த ஆலயத்திற்காக இராச ராச சோழன் ஆலமரங்கள் என்னும் பெயருடைய ஒரு கிராமத்தை நன்கொடையாக வழங்கினான் என்னும் செய்தியை ஹாலந்து நாட்டின் லெய்டன் நகரில் சேமிக்கப்பட்ட பெரிய லெய்டன் சாசனம் என்னும் தலைச் சாசனத்தால் அறிய முடிகிறது.

பல்லவர் ஆட்சிக் காலத்திலேயே போர்னியோ, ஜாவா ஆகிய தீவுகளுக்கும் தமிழகத்திற்கும் இடையே தொடர்பு இருந்து வந்திருக்கிறது. பல்லவ சாசனங்களில் வழங்கி வந்த கிரந்த எழுத்து போர்னியோ, ஜாவா ஆகிய தீவுகளில் வழங்கி வந்த கிரந்த எழுத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு உடையதாகக் காணப்படுகிறது என்று டாக்டர் வோகெல் (Dr. Vogel) என்னும் ஹாலந்து நாட்டு வரலாற்றுச் சாசன ஆராய்ச்சி அறிஞர் கருது கின்றார்.

சீனாவுக்கும் தமிழகத்திற்கும் தொடர்பிருந்ததாகத் தெரிய வருகிறது. இக்காலத்தில், தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தி யர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களாக இருத்தல் காண் கிறோம்.

மொரீசியசு தீவில் வாழும் இந்தியக் குடிமக்களில் பெரும் பான்மையோர் முன்நாளில் குடியேறிய தமிழர்களின் சந்ததியின ராக இருப்பது வெளிப்படை.

மலேசிய ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களே. கீன்யா, டாங்கனீயக்கா ஆகிய

கிழக்கு ஆப்பிரிக்கக் குடியேற்றப் பகுதிகளிலும் சிறுபான்மை அளவில் தமிழர்கள் வணிகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஜப்பானியரின் ஆட்சிக்குள் பர்மா வருவதற்கு முன்னர் பர்மாவில் தமிழர்கள் பெரும்பான்மையாக விளங்கினார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் தமிழர்கள்வாழ்ந்து வருகிறார்கள். பிரிட்டனிலும் குறிப்பாக இலண்டன் முதலிய பெரிய நகரங்களில் தமிழர்கள் வசித்து வருகிறார்கள்.

# 3. தமிழும் தமிழரும்

தமிழ்க் கல்விக்கு உயர்நிலையில் வாய்ப்பு அளித்துள்ள பல்கலைக் கழகங்கள். கல்வி நிறுவனங்கள், மற்றும் தமிழர்தம் பிற அமைப்புகள் ஆகியவை குறித்து முதற் பகுதியிலும்; தற்போது தமிழ்க் கல்விக்கு உரிய வாய்ப்பில்லாத நாடுகளில் தமிழர் தம் பண்பாட்டுத் தொடர்பு நிலை குறித்து இரண்டாம் பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளன.

தமிழும் தமிழரும் பரவியுள்ள நாடுகளில் தமிழ்க் கல்வியின் நிலையும், தமிழ்ப் பண்பாட்டு எச்சங்களும் எவ்வெந் நிலைகளில் உள்ளன என்பதை இப்பகுதியில் காண்போம்.

## 1

## இந்தியா

தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் தவிர இந்தியாவில் பிற மாநிலங்களிலும் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இந்தியாவில் ஏறத்தாழ இருபது பல்கலைக் கழகங்களில் தமிழ் பயில இப்போது வாய்ப்புண்டாகியுள்ளது. தில்லி, கல்கத்தா, பம்பாய், பெங்களூர், ஐதராபாத், செகந்திராபாத், திருவனந்தபுரம் ஆகிய பெருநகரங்களில் கணிசமான அளவில் தமிழ் மக்கள் வசித்து வருகிறார்கள்.

## அந்தமான் நிக்கோபார் தீவுகள்

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் மக்கள் தொகை 2,00,000. இங்கு 30 ஆயிரம் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

அருது, டேரிபார்ம், பாத்துப்பஸ்தி, சயித்தான்காரி, நமுனாகர் கனாபுரம், சவுள்பே, மாயாபந்தர், இராம்பூர், சுபாஷ்கிராம், மில்லன் கிராம், ரைட்மியோ, விவேகானந்தபுரம், அட்பே, மில்டேரா, சப்னம்நகர், சிடியாடாப்பு ஆகிய இடங்களில் உள்ள இளநிலை ஆதாரப்பள்ளிகள்; அபர்டீன் காராசரமா, மாயாபந்தர், ஆகிய இடங்களில் உள்ள முதுநிலை ஆதாரப்பள்ளிகள்; அருது, இரங்கத், விம்பர்லிகஞ்ச் ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இங்கு வாழும் தமிழர்களில் தொழில் துறையில் கு. பாலசுப்பிரமணியன், க. கந்தசாமி ஆகியோரும், பொது நிலையில் து. க. கோபால், அ. இரா. மருதவாணன், க. வா. நன்மாறன், பிஷப் சீனிவாசன், சுப. சுப்பிரமணியன் ஆகியோரும்; அரசு நிலையில் அந்தமான் துறைமுகப்பணி தலைமைப் பொறியாளர் ஞான ஒளிவு, அந்தமான் பொதுப் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் எஸ். கணேசன், அரசு மார்க்கெடிங் பெடரேசன் தலைவர் சி. இராஜமாணிக்கம் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

'அந்தமான் முரசு' எனும் திங்களிதழ் வெளி வருகிறது. சுப. சுப்பிரமணியன் இதன் ஆசிரியர். இங்குள்ள நூலகத்தில் பல தமிழிதழ்கள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்கும் இங்கு போராட வேண்டிய நிலை உள்ளது.

அந்தமானில் தமிழர்களுக்கும் தமிழுக்கும் உதவி புரியும் நோக்கில் பின்வரும் அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

1. அந்தமான் தமிழர் சங்கம், போர்ட் பிளேயர்
2. தமிழர் சங்கம், மாயா பந்தர், டிக்லிபூர், லிட்டில்அந்தமான்
3. தமிழ்க் கல்வி பாதுகாப்புக் குழு, போர்ட் பிளேயர்

4. அநிகார் தமிழ் எழுத்தாளர் பேரவை, போர்ட்பிளேயர்
5. கலை இலக்கியப் பெருமன்றம், விவேகானந்தபுரம்
6. தமிழ் இலக்கிய மன்றம், போர்ட் பிளேயர்
7. முத்தமிழ் இலக்கிய மன்றம், இரங்கத்.

## ஆந்திரப் பிரதேசம்

ஆந்திர மாநிலத்தில் பல்கலைக்கழக அளவில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. உஸ்மானியா பல்கலைக்கழக மொழித் துறைகளில் மிகப் பழமையானது தமிழ் மொழித்துறை. இது 1935 இல் தொடங்கப்பட்டது, 1961-இல் முதுகலைத் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டன. பின்னர் பி. எச் டி. (டாக்டர்) பட்ட ஆய்வுக்கும் வழி வகுக்கப்பட்டது இப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 10,000 நூல்கள் உள்ளன. 1962-ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கான ஊதியச் செலவினைத் தமிழ்நாடு அரசு கொடுத்து வருகிறது. 1978 முதல் தமிழில் சான்றிதழ் பட்டயத் தேர்வுக்கான வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இக்கல்விக்கான செலவினையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அனந்தப்பூரில் துவக்கப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணதேவராயா பல்கலைக் கழகத்திலும் தமிழில் சான்றிதழ் வகுப்புகள் துவக்கப்பெற்றுள்ளன பகுதி நேர விரிவுரையாளர் ஒருவர் இங்குப் பொறுப்பேற்றிருக்கிறார்.

திருப்பதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேசுவராப் பல்கலைக் கழகத்தில் 1955-முதல் பட்ட வகுப்பில் தமிழ் மொழி கற்பிக்கப் படுகிறது. தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் எம். ஏ., வகுப்புகள் 1970-இல் தொடங்கப்பெற்றன. டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் பெரு முயற்சியால் இப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்புகள் துவங்கப் பெற்றன. பின்னர் எம். பில், டாக்டர் பட்ட ஆய்வுக்கான வாய்ப்பும் உருவாயிற்று. 1978 வரை எம் ஏ. வகுப்பில் அக இலக்கியம் சிறப்புப் பாடமாக வைக்கப் பெற்றிருந்தது. தற்போது வைணவ இலக்கியம் சிறப்புப் பாடமாக உள்ளது இப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் இதுவரை நால்வர் டாக்டர் பட்டம் பெற்றிருக்கின்றனர். இவர்களில் மூவர் டாக்டர் ந சுப்பு ரெட்டியாரின் மேற்பார்வையில் ஆய்வு நிகழ்த்தினார்கள். தற்போது சான்றிதழ் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

1974 முதல் ஒவ்வோராண்டும் இப்பல்கலைக்கழகத்தில் ஆய் வரங்குகள் நடைபெற்று வருகின்றன. பல்கலைக் கழக நூலகத்தில் போதிய தமிழ் நூல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தூர் மாவட்டத்தில் நகரி, புத்தூர், சித்தூர் ஆகிய இடங்களில் இளங்கலை வகுப்பில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சித்தூர் மாவட்டத் தமிழ்ச் சங்கம், பாகாலா தமிழ்ச் சங்கம், புத்தூர் தமிழ்ச் சங்கம், சித்தூர் மாவட்டத் தமிழாசிரியர் சங்கம், நாராயணவரம் தமிழ்ச் சங்கம், ஆந்திர மாநிலச் சிறுபான்மை மொழியினர் (தமிழ்) நலச் சங்கம், ஆந்திர மாநிலத் தமிழ்ப்பேரவை ஆகியவை தமிழ் மொழி, தமிழர் நலன் ஆகியவற்றிற்காக அரும்பாடுபட்டு வருகின்றன திருப்பதியில் உள்ள திருப்பதி கலாசார சங்கம் 1968–இல் நிறுவப்பட்டது. 'உலகம் ஒரு குடும்பம்' என்பது இச் சங்கத்தின் முகப்பு வாசகம் தமிழ் பயிற்று மொழி உயர்நிலைத் தொடக்கப் பள்ளி ஒன்றை இச்சங்கம் நடத்தி வருகிறது. இப்பள்ளி ஆந்திர மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் இசை, நாட்டியம், இசைச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. மார்கழி மாதந்தோறும் திருப்பாவை, திருவெம்பாவை வகுப்புகள் நடத்தப்பட்டு, மாணவர்க்குச் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. இச்சங்கத்தின் சீரிய பணிக்குத் துணையாய் சங்கத்தின் செயலாளர் அ. நடராஜன் அவர்கள் விளங்குகிறார்.

சித்தூர் மாவட்டத்தில் வாழும் மக்களில் 30 விழுக்காடு தமிழர்கள். செகந்திராபாத்-ஹைதராபாத் மாவட்டத்தில் வாழும் மக்களில் 40 விழுக்காடு தமிழர்கள் இருக்கிறார்கள். நெல்லூர் மாவட்டத்தில் 10,000 பேர் தமிழர் இருக்கலாம். பிற மாவட்டங்களிலும் தமிழர் (கணிசமான தொகையாக) வாழ்கிறார்கள்.

ஆந்திர மாநில அரசின் அமைச்சரவையில் இடம் பெற்ற திரு C R. தாஸ், சட்டசபை உறுப்பினர்கள் ஆறுமுகம், செங்காரெட்டி, மனோகர் ஆகியோர் பிறப்பால் தமிழர்கள். அரசு அலுவலகங்களில் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் பணிபுரிகிறார்கள்.

## உத்தரப் பிரதேசம்

இம்மாநிலத்தில் உள்ள காசி, அலகாபாத், ஆக்ரா, லக்னோ ஆகிய நகரங்களில் தமிழர் எண்ணிக்கையில் மிகுதியாக வாழ்கிறார்கள். ஆனால் அலிகார் நகரில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தமிழர் இல்லை

அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழித் துறைகள் இந்தித் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளன. 1969-ஆம் ஆண்டு முதல் இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. தொடக்கம் முதலே டாக்டர் டி. சீனிவாசவரதன் தமிழ் கற்பித்து வருகிறார். தமிழில் சான்றிதழ், டிப்ளமோ தேர்வுகள் நடத்

தப்படுகின்றன சான்றிதழ் வகுப்பில் பயிலும் ஐந்து மாணவர்க்கு மாதம் ரூ. 20, டிப்ளமோ தேர்வுக்குப்பயில்வோர் ஐவருக்கு மாதம் ரூ. 25 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் பத்து முதல் பதினைந்து மாணவர்கள் வரை இங்கு பயில்கின்றனர். பி. ஏ, ஆனர்சு நிலையில் தமிழ் பயில வாய்ப்புண்டு. எம் ஏ, இந்தி பயில்வோர் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

இப்பல்கலைக் கழக நூலகத்தில் 750 தமிழ் நூல்கள் உள்ளன; கலைமகள், ஆனந்த விகடன், குமுதம் ஆகிய இதழ்களும் காணப் படுகின்றன. 1970 முதல் அலிகார் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் கழகம் இயங்கி வருகிறது. இது தமிழர் விழாக்களைக் கொண்டாடுதல், கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசு வழங்குதல், தமிழ்த் திரைப்படம் திரையிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

அலிகார் நகரத்தில் 1976-ஆம் ஆண்டு அலிகார் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. பல தமிழ் இதழ்களைத் தருவிப்பதோடு, மாதமொரு முறை கூடி அவ்விதழ்களில் வெளியாகும் கதை, கட்டுரை குறித்து விவாதமும் நடத்த ஆவன செய்துள்ளது.

ஆக்ரா நகரில் அமைந்துள்ள ஆக்ரா பல்கலைக் கழகத்தில் உள்ள கன்ஹையா முன்ஷி இன்ஸ்டிட்யூட் எனும் இந்தி நிறுவனத்தில் சான்றிதழ், டிப்ளமோ வகுப்பிலும், இந்தி எம். ஏ., வகுப்பிலும் தமிழ் கற்க வாய்ப்புண்டு. இங்கு தமிழ் விரிவுரையாளர் ஒருவர் மட்டுமே உண்டு. இங்குள்ள நூலகத்தில் பல தமிழ் வார மாத இதழ்கள் உள்ளன. பல தமிழ் நூல்களும் உண்டு.

அலகாபாத் நகரில் உள்ள அலகாபாத் பல்கலைக் கழக இந்தித் துறையில் தமிழ் கற்க வாய்ப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. தமிழில் சான்றிதழ், டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படு கின்றன. எம். ஏ., இந்தி படிக்கும் மாணவர் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

காசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் இந்திய மொழித் துறையில் தமிழ் துறையும் உண்டு. பி.ஏ., பி.எஸ் சி. பயிலும் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயிலலாம். த. அருணபாரதி இங்கு விரிவுரையாளராக இருக்கிறார்.

லக்னோ நகரில் உள்ள பல்கலைக் கழகத்திலும் இந்தித் துறையுடன் தமிழ்ப் பகுதி இணைந்துள்ளது. தமிழில் சான்றிதழ், பெருஞ்சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பட்ட வகுப்பு பயிலும் மாணவரும் தமிழைக் கற்கலாம்.

உத்தரப்பிரதேசத்தில் பத்து இடங்களில் தென்னிந்திய மொழிப் பள்ளிகள் உண்டு. இவை அனைத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. பிற மொழியாளர்கள் இங்கு தமிழ் கற்கிறார்கள். சான்றிதழ், பெருஞ்சான்றிதழ், கோவித் என்ற நிலைகளில் இப் பள்ளிகளில் நான்கு ஆண்டு காலத்தில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. லக்னோவில் உள்ள தென்னிந்திய மொழிப் பள்ளி குறிப்பிடத்தக்க வகையில் தமிழ்த் தொண்டாற்றி வருகிறது.

## கருநாடகம்

கருநாடக மாநிலத்தின் மக்கள் தொகை ஏறக்குறைய 3 கோடியாகும். இதில் 90 லட்சம் பேர் தமிழர்கள்.

இம்மாநிலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புகுமுகவகுப்பு, பட்ட வகுப்பு ஆகியவற்றிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. ஏறத்தாழ 25 கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. பெங்களூரில் உள்ள நிஜலிங்கப்பா கல்லூரி, கிறித்தவக் கல்லூரி, தூய சூசையப்பர் கல்லூரி, மகாராணி கல்லூரி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கோலாரில் ஊரிகம் முதல் நிலைக் கல்லூரியில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. பேராசிரியர் வ. பெருமாள் அங்கு தமிழ் கற்பிக்கிறார்.

தார்வாரில் உள்ள கருநாடகப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. முதுகலை வகுப்பில் கன்னடம் பயில்வோரும், மொழியியல், நாட்டுப்புறவியல் பயில்வோரும் தமிழியல் கற்பதற்கு வாய்ப்பு உண்டு. டாக்டர் பன்னீர்செல்வம் தற்போது தமிழ் கற்பிக்கிறார்.

மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் மைய நிறுவனம் பிற மொழியாளர்க்குத் தமிழ் கற்பித்து வருகிறது. தமிழ்ப்பாட நூல்களும் எழுதப்பட்டுள்ளன.

பெங்களூர் தமிழ்ச் சங்கம் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டு புரிந்து வருகிறது. 1950-இல் நிறுவப்பெற்ற இச்சங்கம் தற்போது சொந்தக் கட்டிடத்தில் இயங்குகிறது. தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இசை,

நாட்டியம் ஆகியவற்றில் பயிற்சியளித்தல், வீணை கற்றுத்தருதல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளது. 'ஊற்று' எனும் மாத இதழை வெளியிடுகிறது. பத்ராவதியில் அமைந்துள்ள நண்பர்கள் இலக்கிய மன்றம் தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டு புரி வதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது. பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் (BEL) தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது.

பிரபல தமிழ் எழுத்தாளர் எஸ். ரங்கராஜன் (சுஜாதா) பெங்களூரில் பணியாற்றி வருகிறார்.

பெங்களூரிலிருந்து தினச்சுடர் எனும் நாளிதழ் வெளியாகிறது.

## கேரளம்

கேரளத்து மக்கள் தொகை 2 கோடியே 3 இலட்சம். இதில் 6 லட்சம் பேர் தமிழர்கள். இம்மாநிலத்தின் எல்லாத் துறைகளிலும் அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

திருவனந்தபுரம் காரியாவட்டத்தில் அமைந்துள்ள கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையும், தமிழ் ஆராய்ச்சித் துறையும் உள்ளன. மு. இராகவையங்கார், வையாபுரிப்பிள்ளை, டாக்டர் வி.ஐ.சுப்பிரமணியம், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் ஆகியோர் இத்துறையின் வளர்ச்சிக்குக் காரணமாவார்கள். எம்.ஏ.,எம்.ஃபில். பி.எச் டி., பட்ட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தமிழில் எம். ஃபில். படிப்பிற்கு இந்தியாவிலேயே முதன் முதலில் வழியமைத்துக் கொடுத்தது இப்பல்கலைக் கழகமே. கீழ்த்திசை மொழியியலில் பி. எச். டி. பட்டம் பெற முதன் முதலில் ஊக்கமளித்ததும் இத்துறையே ஆகும். இளவேனில் என்னும் ஆண்டு மலரை இத்துறை வெளியிடுகிறது. இருபதுக்கும் மேற்பட்டோர் இத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். தமிழகம் தவிர்த்த பிற மாநிலங்களில் இப்பல்கலைக் கழகம் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் முதன்மை பெறுகிறது.

கோழிக்கோடு பல்கலைக் கழகத்தின் கீழ்சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டப் படிப்பும் ஆராய்ச்சித் துறையும் உள்ளன. டாக்டர் அ. சுப்பிரமணிய பிள்ளை துறைத் தலைவராயிருந்தார். பாலக்காட்டில் உள்ள விக்டோரியா அரசினர் கல்லூரி, திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரி, திருவனந்தபுரம் அரசு கலைக் கல்லூரி, மகளிர் கல்லூரி, மார் இவானியஸ் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் இளங்கலை வகுப்பிலும், சிறப்புப் பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது.

திருவனந்தபுரம், இடுக்கி, பாலக்காடு ஆகிய மாவட்டங்களில் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. கோட்டயம், கொல்லம், எர்ணாகுளம், கோழிக்கோடு மாவட்டங்களில் ஒரு சில உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆரம்பப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சித்தூரில் அரசினர் தமிழ் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்று உள்ளது. ஆண்டுக்கு ஒன்பது மாணவர்களைப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

நீல. பத்மநாபன், ஹெப்ஸிபா ஜேசுதாசன், ஜேசுதாசன். துரைசாமி (நகுலன்). ஆ. மாதவன், சண்முக சுப்பையா, மலைநாடன் ஆகியோர் குறிப்பிடத்தக்க கேரளத்தமிழ் எழுத்தாளர்கள்,

திருவனந்தபுரம், கொல்லம், பீர்மேடு, மூணாறு, பாலக்காடு, சித்தூர், கோழிக்கோடு, கொழிஞ்சாம்பாறை ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கங்கள் அமைந்துள்ளன.

வானொலி நிலையத்தில் வித்வான் இ. குற்றாலம் பிள்ளை பணியாற்றுகிறார்.

திருவனந்தபுரத்தில் உள்ள சைவப் பிரகாச சபை தமிழ் தெரியாதவருக்குத் தமிழ் கற்றுத் தருகிறது.

திருவனந்தபுரத்திலிருந்து வஞ்சி நாடு, கேரளத் தமிழ் ஆகிய இதழ்கள் வெளியாகின்றன.

## தில்லி

இந்திய நாட்டின் தலைநகரான தில்லியில் 3 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். தில்லியில் அமைந்துள்ள தில்லிப் பல்கலைக் கழகத்தில் 1959-இல் தமிழ்த் துறை ஏற்பட்டது. பதினொரு மொழிகளைக் கொண்ட இந்திய மொழித் துறையின் ஓர் அங்கமாகத் தமிழ்த் துறை உள்ளது. டாக்டர் சாலை இளந்திரையன் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

1978-ஆம் ஆண்டில் இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு துவக்கப்பட்டது. இவ்வகுப்பில், இலங்கை மற்றும் மலேசியத் தமிழ் இலக்கியம் ஒரு சிறப்புப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. ஆய்வுரை ஒன்று வரைவதும் பாடத் திட்டத்தின் ஒரு முக்கியக் கூறாக உள்ளது. பிற மொழியினருக்குச் சான்றிதழ் வகுப்பு நடைபெறுகிறது, டாக்டர் பட்ட ஆய்வுக்கும் வாய்ப்பு இருக்கிறது. முதல் வகுப்புத் தொடங்கி டாக்டர் பட்டம் வரை தொடர்ந்து தமிழ் படிக்க இப்போது தில்லியில் முழுமையான வாய்ப்பு உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீவெங்கடேசுவரா கல்லூரி, மிராண்டா (மகளிர்) கல்லூரி, லேடி சீராம் (மகளிர்) கல்லூரி ஆகியவற்றில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. அஞ்சல் வழிக் கல்வித்துறையின் மூலமும் தமிழ் கற்க வாய்ப்புண்டு.

*தில்லித் தமிழ்ச் சங்கம்* சில பயனுள்ள செயல்களைச் செய்துள்ளது. இராமகிருட்டிணாபுரத்தில் சொந்தக் கட்டிடத்தில் அமைந்துள்ள இச்சங்கம் 1946-இல் நிறுவப்பட்டது. ஆண்டு தோறும் இலக்கிய விழாக்களைச் சிறப்பாக நடத்துவதோடு, *சுடர்* எனும் ஆண்டிதழையும் வெளிக் கொணர்கிறது. இச்சங்கம் அமைந்துள்ள நெடுஞ்சாலைக்கு *'தமிழ்ச் சங்க மார்க்'* எனப் பெயரிடப்பட்டுள்ளது. இச்சங்க நூலகத்தில் 10,000 தமிழ் நூல்கள் உள்ளன.

1973-இல் *தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம்* உருவாயிற்று. தலைநகரில் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் அவ்வப்போது சந்தித்து அளவளாவுவதற்காகவே இச்சங்கம் அமைக்கப்பட்டது. உடன்காலப் படைப்புக்களைப் பற்றிய மதிப்பீடுகளும் கலந்துரையாடல்களும் சங்கத்தில் நடப்பதுண்டு.

தில்லி வானொலி நிலையத்தில் தென்கிழக்காசிய இந்தியர்களுக்கான தமிழ் ஒலிபரப்புப் பகுதி உள்ளது அரசியல் செய்திகள் திரைப்படப் பாடல்கள், இலக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவை ஒலி பரப்பப்பட்டு வருகின்றன.

## பஞ்சாப்

சண்டிகார் நகரில் உள்ள *பஞ்சாப் பல்கலைக்கழகத்தில்* தென்னிந்திய மொழிகளுக்கென தனித்துறை உள்ளது. இதில் தமிழ் மட்டுமே இப்போது கற்பிக்கப்படுகிறது. கே இராமகிருட்டிணன் தமிழ் கற்பிக்கிறார். தமிழில் சான்றிதழ், பெருஞ்சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழைப் பாடமாகக் கொண்டு தனிப்பட்ட முறையில் பி.ஏ., தேர்வு எழுத வாய்ப்பிருக்கிறது.

சண்டிகாருக்கு அண்மையில் உள்ள பாட்டியாலாவில் உள்ள *பஞ்சாபி பல்கலைக் கழகத்தில்* தமிழ்ப் பகுதி மொழியியல் துறையோடு இணைந்துள்ளது. தமிழக அரசின் நிதியுதவியோடு தமிழ்க் கல்வி தொடங்கப் பெற்றுள்ளது. மொழியியல் எம். ஏ., பயிலும் மாணவர்கள் தமிழைக் கற்கிறார்கள்.

## புதுச்சேரி

480 ச. கி. மீ. பரப்பளவு கொண்ட இம்மாநிலத்தின் மக்கள் தொகை 4, 71, 707 ஆகும். இதில் ஏறக்குறைய 1, 40, 000 பேர் தமிழர்கள்.

புதுச்சேரி காரைக்கால் மாஹே, ஏனாம் பகுதிகள் அடங்கிய இம் மாநிலத்தில் புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்களில் மட்டுமே தமிழ்க் கல்விக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது 1961-இல் புதுச்சேரியில் கல்லூரிக் கல்வி துவங்கப்பெற்றது. புதுவை பாரதி தாசன் பெண்கள் கலைக் கல்லூரியில் 1968-ல் தமிழ்ப் பட்ட வகுப்புத் தொடங்கியது. புதுச்சேரி தாகூர் கலைக் கல்லூரியிலும், காரைக்கால் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியிலும் 1973-7' இல் தமிழ்ப் பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன. இவ்விரண்டு கல்லூரிகளிலும் 1979-ஆம் ஆண்டு தமிழ் முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் பெயர்களில் இரண்டு ஆராய்ச்சி மாணவர்களுக்கும், இரண்டு உயர்நிலை ஆராய்ச்சி மாணவர்களுக்கும் புதுச்சேரி அரசு உதவித் தொகை வழங்குகிறது.

பாரதியார், பாரதிதாசன், வ. வே. சு. ஐயர், வ. ரா., சுத்தானந்த பாரதியார் ஆகியோர் தமிழ்த் தொண்டாற்றிய இடம் புதுச்சேரி என்பது குறிப்பிடத்தக்கது. 1955-ஆம் ஆண்டில் இங்கு பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழுக்கும், இந்தியப் பண்பாட்டுக்கும் பெருந் தொண்டு புரிகிறது. இந்நிறுவனம் பல அருமையான நூல்களை வெளியிட்டுள்ளது திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம், கந்த புராணம் ஆகியவை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. டாக்டர் குரோ பரிபாடலையும், டாக்டர் பலியோ ஸா திருப்பாவை, திருமுருகாற்றுப்படை ஆகியவற்றையும் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். காரைக்கால் அம்மையார் புராணமும் பிரெஞ்சில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இந்நிறுவனம் வெளியிட்ட சங்க இலக்கியச் சொற்கள் பற்றிய அகராதி சிறப்பு வாய்ந்தது. தனிப்பட்ட சிலரும் தமிழ் நூல்களைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளனர்.

புதுவையில் பல தமிழ்ச் சங்கங்களும் அமைப்புகளும் தோன்றி தமிழ்த் தொண்டாற்றி வருகின்றன. தமிழ்க் கழகம், புதுவைத் தமிழ்ச் சங்கம், தமிழ்க் காவற் குழு, சுப்பிரதீபக் கவிராயர் மன்றம் புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம், தனித் தமிழ்க் கழகம். தமிழ்த்

தளிர் கழகம், கல்விக் கழகம் ஆகியவை குறிப்பிடத்தக்க முறையில் தொண்டாற்றி வருகின்றன.

புதுவையில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ளது; மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்ப் போதனா முறை செயல்படுத்தப்படுகிறது; தமிழாராய்ச்சிக்கு மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது; பாவேந்தர் நூலகத்தில் தமிழராய்ச்சித் துறைக்கு வழி கோலியது. இவை தவிர, இம் மாநிலத்தில்ஒரு பல்கலைக் கழகம் அமைக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இனி தமிழ்க் கல்வி வளர்ந்தோங்க வாய்ப்புண்டு.

## மேற்கு வங்காளம்

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் 1976-ஆம் ஆண்டு தமிழ்த் துறை செயல்படத் துவங்கியது. எம். ஏ. வகுப்பில் தமிழ் பயில வாய்ப்புண்டு. கல்லூரிகளில் புகுமுக பட்ட வகுப்புகளில் இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் திருமதி. ரங்கநாயகி தமிழ் கற்பிக்கிறார். தமிழ். வங்காளம் ஆகிய இரு மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வு தொடங்கப்படவிருக்கிறது.

ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில்தமிழ் விரிவுரையாளர் பதவி ஒன்றிற்காகத் தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது. இங்கு தமிழ் ஒப்பிலக்கிய ஆராய்ச்சி துவங்க உள்ளது.

1830-இல் கல்கத்தா பொது நூலகமாக உருவெடுத்து, 1903இல் தேசிய நூலகமாக மாறியுள்ள இந்நூலகத்தில் ஏறத்தாழ 15 இலட்சம் நூல்கள் உள்ளன. தமிழில் மட்டும் 20,000 நூல்கள் உள்ளன. தமிழ்நாட்டில் கூடப்பார்க்க முடியாத தமிழ்ப் பத்திரிகைகள் இங்கே உண்டு. வையாபுரிப் பிள்ளை நன்கொடையாக அளித்த 3000 புத்தகங்களும், சில பனை ஓலைச் சுவடிகளும் இங்கே உள்ளன.

பாரதீய பாஷா பரிஷத் என்னும் அமைப்பு மாலை நேரத்தில் பிற மொழியினர்க்குத் தமிழ் வகுப்பு நடத்துகிறது.

1941-இல் கல்கத்தா நகரில் உருவான பாரதி தமிழ்ச் சங்கம் பிற மொழினருக்குத் தமிழ் வகுப்புகள், வங்கமொழி வகுப்புகள், கல்லூரிகளில் இரண்டாம் மொழியாகத் தமிழைப் பயில்வோருக்குத் தமிழ் வகுப்புகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இச்சங்க நூலகத்தில் 5000 நூல்கள் உள்ளன. 30 இதழ்களைக் கொண்ட படிப்பகமும் இங்குண்டு.

ஏழைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உதவுவதற்காக இரண்டு அறக் கட்டளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இலக்கியக் கூட்டங்களைச் சிறப்பாக இச்சங்கம் நடத்தி வருகிறது. இதுவரை 14 நூல்களை வெளியிட்டுள்ளது.

1953-இல் கல்கத்தாவில் நிறுவப்பட்ட கல்கத்தா தமிழ் மன்றம் ஆண்டுதோறும் தமிழறிஞர்களை வரவழைத்துச் சிறப்புக் கூட்டங்களை நடத்துகின்றது. கவியரங்கம், பட்டி மன்றம், வழக்காடு மன்றம் ஆகியவற்றையும் நடத்துகிறது. இம்மன்றத்தில் ஒரு நூலகம் இயங்குகிறது. இம் மன்றத்தின் முயற்சியால் லேக்ரோடு 'கவி பாரதி சாரணி'யாக மாறியிருக்கிறது.

ஹௌரா நகர்ப் பகுதியில் வங்கத் தமிழர் சங்கம், திருவள்ளுவர் கலை மன்றம் ஆகியவை இயங்கி வருகின்றன. வங்கத் தமிழர் சங்கம் தமிழ்க் குழந்தைகளுக்காக ஒரு இலவசத் தொடக்கப் பள்ளிக் கூடத்தை நடத்துகிறது. திருக்குறளை வங்க மொழியில் மொழிபெயர்க்கும் பணியை திருவள்ளுவர் கலை மன்றம் மேற்கொண்டுள்ளது.

சாந்தி நிகேதனில் உள்ள விசுவ பாரதி பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி இந்தித் துறையுடன் இணைந்துள்ளது. தமிழில் சான்றிதழ், டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படுகின்றன. திரு. முத்தையா இங்குத் தமிழ் கற்பிக்கிறார். இங்குள்ள நூலகத்தில் 3500 தமிழ் நூல்கள் உள்ளன. மஞ்சரி, ஆனந்தவிகடன் ஆகிய இதழ்கள் பல்கலைக்கழக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

## கனடா

ஆங்கிலமும் பிரெஞ்சும் வழங்கும் இந்நாட்டில் இந்தியர் சிறுபான்மையோராக உள்ளனர். தமிழ் தெரிந்தவர்களும் தமிழ் படித்தவர்களும் இந்நாட்டில் வாழ்கிறார்கள்.

வான்கூவர் (Vancouver) நகரில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பிரெண்டா இ. எஃப். பெக் என்னும் அம்மையார் தமிழ் நாட்டின் பண்பாடு என்னும் தலைப்பில் ஆராய்ச்சியை நிகழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்களின் மொழியியல், மானிடவியல் துறைகளில் உள்ளவர்களில் ஒரு சிலர் தமிழில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். தமிழ் மொழி மீது ஆர்வம் கொண்டவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்து, சென்னை, மதுரை ஆகியநகரங்களில் தங்கித் தமிழ் படித்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் தமிழ் நூல்களும், தமிழைப் பற்றிய ஆங்கில நூல்களும் ஆயிரத்துக்கு மேல் காணப்படுகின்றன.

1980-இல் கல்காரிப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வகுப்பில் எட்டு மாணவர்கள் சேர்ந்தனர். 1980—81-இல் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் தமிழ் வகுப்பில் ஐந்து பேர் படித்தார்கள். ஸ்டீபன் இன்கிலிஸ், அலெண்பு ரோசே, ஆன்மேரி லெங்கர், எரிக்கா கினாஸ் என்னும் நான்கு பேர் தமிழ் பயில இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

மக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பால்-யங்கர் பலஆண்டுகள் தமிழ்நாட்டில் பணிபுரிந்திருக்கிறார். திருச்சி மாவட்டத்தின் இரண்டு பெரிய கோயில்களைப் பற்றி விரிவான முறையில் எழுதி வருகிறார். பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழக ஆய்வு மாணவரான ஸ்டீபன் இன்கிலிஸ் தமிழகத்தில் உள்ள மதுரை மாவட்டத்தில் வாழும் குயவர் சமூகத்தினரைப் பற்றி ஆய்வு செய்துள்ளார். டாக்டர் ஆர். இராதாகிருஷ்ணன் கல்காரிப் பல்கலைக் கழகத்தில் பணி புரிபவர். தமிழ் மொழியியல் தொடர்பான பல ஆய்வுகளை நிகழ்த்தியிருக்கிறார். தமிழ்நாட்டுப் பக்தி இயக்க மரபு குறித்து தற்போது ஆய்வு செய்து வருகிறார்.

*தமிழ் மணம்* என்னும் இதழ் அண்மையில் மலரத் தொடங்கியுள்ளது. கனடா நாட்டுத் தமிழ் மக்களின் படைப்போவியங்கள் *தமிழ் மணத்தில்* இடம்பெறுகின்றன. திரு. சுந்தரம் அவர்கள் இவ்விதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

இந்தியக் கலை, பண்பாடு ஆகியவற்றைப் பரப்பும் நோக்குடன் நிறுவப்பட்ட சாஸ்திரி இந்திய - கனடா நிறுவனம் தமிழியல் ஆய்வுக்கும் இடமளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியா சென்று அங்கு மொழிகளைக் கற்க விரும்புவோருக்கு இந்த நிறுவனம் துணை புரிந்து வருகிறது. இந்திய அறிஞர்களையும் வரவழைத்துச் சொற்பொழிவாற்ற வைத்துள்ளது. தமிழ் மொழி ஆய்வுக்காக இந்நிறுவனம் தொடர்ந்து ஆற்றிவரும் பேருதவி போற்றுதற்கு உரியது என்பதில் ஐயமில்லை.

## கிரேட் பிரிட்டன்

லண்டன் மாநகரைத் தலைநகராகக் கொண்டு விளங்கும் கிரேட் பிரிட்டனில் தொடக்க நிலையிலிருந்து தமிழைக் கற்று, தமிழில் பி. ஏ., எம். ஏ., பட்டங்கள்பெறவும், பின் ஆராய்ச்சி

நிகழ்த்தி டிஃபில் பட்டம் பெறவும், வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது;

சென்ற நூற்றாண்டிலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கப்பட்டது. அறிஞர் ஜி. யு போப் அவர்கள். தான் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1884 முதல் 1896 வரை தமிழ் - தெலுங்கு விரிவுரையாளராக விளங்கினார். அவர் மறைவுக்குப் பிறகு இப்பல்கலைக் கழகத்தில் தமிழ்க்கல்விக்கு வளர்ச்சியற்ற நிலை உண்டாகி விட்டது.

லண்டன் பல்கலைக் கழகத்தோடு இணைந்துள்ள கீழ்த்திசை மற்றும் ஆப்பிரிக்கப் படிப்புப் புலத்தில் உள்ள இந்தியவியல் துறையில் தமிழுக்கு இடமிருக்கிறது. கேப்டன் பதி, உ. வே. சாமிநாத ஐயரிடம் தமிழ்ப் பயின்ற பேராசிரியர் தாம்ப்சன் ஆகியோர் இங்கு தமிழ் கற்பித்தார்கள். அடுத்து, டாக்டர் ஜே. ஆர். மார் அவர்களும் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்களும் தமிழைக் கற்பித்தார்கள். தொடர்ந்து டாக்டர் ஜே. ஆர். மார் இங்குத் தமிழைக் கற்பித்து வருகிறார். இந்த நிறுவனத்தில் தொடக்க நிலை முதல் தமிழ் பயின்று, உயர் ஆய்வு செய்து பட்டம் பெறவும் வழியுண்டு; தமிழில் ஆர்வம் கொண்ட பிற துறை மாணவர்க்கும் இங்கே தமிழ் கற்பிக்கப்படுகிறது. இங்குள்ள நூலகத்தில் ஏறத்தாழ மூவாயிரம் தமிழ் நூல்களும், சில தமிழ்க் கையெழுத்துப் படிகளும் காணப்படுகின்றன.

எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மொழியில் முதுகலை பட்டப்படிப்புக்கு 'தமிழின் கட்டமைப்பு' ஒரு விருப்பப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. டாக்டர் ஆர். இ. ஆஷர் இங்குப் பணியாற்றுகிறார்.

பிரிட்டிஷ் நூலகம், இந்தியா ஆபீஸ் நூலகம் ஆகியவை பிரிட்டனிலுள்ள குறிப்பிடத்தக்க நூலகங்களாகும். பிரிட்டிஷ் நூலகத்தில் 32 000 தமிழ் நூல்களும், 200 ஏட்டுப் படிகளும் உள்ளன. இந்தியா ஆபீஸ் நூலகத்திலும் ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களும், சில கையெழுத்துப் படிகளும் உள்ளன. பல அரிய தமிழ் நூல்களை இவ்விரு நூலகங்களிலும் போற்றிப் பாதுகாத்து வரு கின்றனர்.

லண்டனில் உள்ள ராயல் ஆசிய மன்றம், ஃபாரின் பைபிள் சொசைட்டி, ஆக்ஸ்போர்டிலுள்ள போட்டிலியன் நூலகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக நூலகம், டர்ஹாமிலுள்ள பல்கலைக் கழக நூலகம் ஆகிய இடங்களிலும் தமிழ் நூல்களைக் காண முடிகிறது.

தமிழக ஆட்சி, தமிழர் தம் இசைக் கருவிகள், தமிழர் பண்பாடு, நாகரிகம் ஆகியவை தொடர்பான பல பொருட்களைப் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலை, விக்டோரியா அண்ட் ஆல்பெர்ட் பொருட்காட்சிச் சாலை ஆகியவற்றில் காணலாம்.

பிரிட்டனில் உள்ள B. B. C. வானொலி நிலையத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் தமிழ் ஒலிபரப்பு உண்டு. தமிழ், தமிழிலக்கியம், வரலாறு, பண்பாடு தொடர்பான சிற்றுரைகளும், மொழிபெயர்ப்பு உரைகளும், அறிவியல் செய்திகள், உரையாடல், கவிதை, கருத்தரங்கு போன்ற பல நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன

பிரிட்டனில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் வாழ்கிறார்கள். லண்டன் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் தமிழர்கள் ஒரு தமிழ்ச் சங்கத்தை அமைத்து நடத்தி வருகிறார்கள். லண்டன் மாநகரின் விம்பிள்டன் பகுதியில் வாழும் தமிழ்இளைஞர்கள் ஒன்று கூடி லண்டன் முரசு என்னும் மாத இதழை நடத்தி வருகிறார்கள்.

பிரிட்டானியா சைவ மாமன்றம் என்னும் பெயரில் லண்டனில் ஒரு தமிழ்ச் சைவ மன்றம் உள்ளது. சமயச் சார்பான உரைகள் இங்கு நிகழ்த்தப் பெறும். சமயம் சார்ந்த விழாக்களும் இங்கே கொண்டாடப்படுகின்றன.

## சிங்கப்பூர்

617 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிங்கப்பூரில் அந்நாட்டு அரசியல் சட்டப்படி ஆட்சி மொழிகளில் தமிழும் ஒன்றாக விளங்குகிறது. 1800-ஆம் ஆண்டு முதல் தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் உட்பட பல்வேறு மக்களும் கரும்புத் தோட்டங்களிலும், மிளகு, தென்னந் தோப்புகளிலும் வேலை செய்வதற்காகச் சிங்கப்பூருக்கு வர ஆரம்பித்தார்கள். 1913-இல் குடியேற வந்த தமிழர் தொகை மும்மடங்காகி விட்டது. சிங்கப்பூரை மலேயாவுடன் இணைக்கும் ஜோகோர் பாலம், செம்பாவாங் துறைமுகத் தலம், கல்லாங் விமான நிலையம் ஆகிய இவற்றின் வளர்ச்சிக்கு தமிழர்களின் உழைப்பே காரணம். நாளடைவில் பல்வேறு துறைகளில் வட இலங்கைத் தமிழர்களும் தென்னிந்தியர்களும் பிரிட்டிஷ் நிருவாகத்தில் பணியாற்ற இங்கு வந்து சேர்ந்தார்கள். கல்வித் துறையிலும், காவல் துறையிலும் அவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. தொடக்க காலத்தில் கிறித்தவ மிஷனரிகள், அரசாங்கப் பள்ளிகள் ஆகியவற்றில் இந்தியர்களே ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். சிங்கப்

பூரில் அந்நாளில் போலீசுக்காரர்களாக இருந்தவர்கள் அனைவரும் தமிழர்களே.

1887-இல் *சிங்கை நேசன்* எனும் தமிழ்ச் செய்தித் தாள் வெளிவரத் தொடங்கியது. ஆயினும் 1876-இல் *சிங்கை வர்த்தமானி* எனும் பெயரில் ஒரு பத்திரிகை வெளிவந்திருப்பதாகக் குறிப்புக் கிடைக்கிறது. சுதேசமித்திரன், தேசபக்தன், தினமணி, தமிழ் நாடு முதலிய தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் அங்குப் பிரபலமாயின. *விடுதலை* இதழால் சுயமரியாதை இயக்கம் பரவியது. அப்பத்திரிகைகளைப் பின்பற்றி *தமிழ் முரசு, சீர்திருத்தம், முன்னேற்றம், தமிழன், ஜோதி* என்பன சமூகச் சீர்திருத்தத்தை விழையும் ஏடுகளாகச் சிங்கப்பூரில் மலர்ந்தன. வேல், திரையொளி, இந்தியன் மூவி நியூஸ், கொள்கை முழக்கம், முரசொலி ஆகிய இதழ்களும் சிங்கப்பூரிலிருந்து வெளியாகின்றன. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் *தமிழ் முரசு* ஆற்றியுள்ள பணி சிறப்பானது. சிங்கப்பூரின் ஆங்கில தேசிய நாளிதழ் வாரந்தோறும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியப் பண்பாட்டுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

க்வான் யூ அவர்களைப் பிரதமராகக் கொண்டு 1959-இல் ஆட்சிக்கு வந்த மக்களியக்கக் கட்சி, தமிழை நான்கு தேசிய மொழிகளுள் ஒன்றாக உயர்த்தியது; எல்லா ஆங்கிலப் பள்ளிக் கூடங்களிலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க வழி கோலியது; தமிழாசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி, அவர்கள் கல்வித் தகுதிகளை மேம்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பு அளித்தது. சிங்கப்பூர் உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி மட்டுமே தமிழர் பெயர் கூற இப்போது நடைபெற்று வருகிறது. தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்வது மட்டும் குறையவில்லை. "சிங்கப்பூரில் 30390 தமிழ் மாணவர்கள் பள்ளிகளில் படிக்கின்றனர். இவர்களில் 9200 பேர் தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்கின்றனர். ஆனால், தேசியப் பல்கலைக் கழகம், தொழிற் பயிற்சி கல்லூரி ஆகியவற்றில் பயிலும் தமிழ் மாணவரின் எண்ணிக்கை ஒரு சதவீதம் அல்லது 102 மாணவர்களே" என்று சிங்கப்பூர் தமிழர் பேரவைத் தலைவர் திரு. கோ. கந்தசாமி குறிப்பிடுகிறார்

1970-இல் தமிழ் மொழிப் பாடம் பயின்றவர் தொகை உயர்ந்துள்ளது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம்

மலாய், மாண்டரின் ஆகிய மொழிகளுக்கு துறை இருக்கிறது; தமிழுக்கு உயர்நிலைத் துறை இல்லை.

சிங்கப்பூர் தமிழாசிரியர் மன்றம் பிற தோழமை அமைப்புகளுடன் சேர்ந்து 25 வாரத் தமிழ் இலக்கியப் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. கொழும்புத் திட்டத்தின் கீழ் இரண்டு பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டார்கள். 'ஆங்கில மொழிப் பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்பித்தல்' பற்றிய கருத்தரங்கு 1971 - இல் நடத்தப்பட்டது. சிங்கப்பூர் பல்கலைக் கழக மாணவர்களால் 1975-இல் தமிழ் மொழிக் கழகம் தொடங்கப்பட்டது. சிங்கப்பூரில் தமிழை வளர்ப்பது இதன் நோக்கம். தமிழ்ப் பேரவை என்னும் பெயரில் ஆண்டு இதழ் ஒன்றையும் 1977-ஆம் ஆண்டிலிருந்து இக்கழகம் நடத்தி வந்தது. இக்கழகப் பணிகளால் சிங்கப்பூரில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் புத்துயிர் உண்டாகியுள்ளது.

சிங்கப்பூர் வானொலியில் சீனம், ஆங்கிலம், மலேசிய மொழி ஒலிபரப்புக்குச் சமமாக அதிக அளவில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. நாள்தோறும் காலை 5-30 மணி முதல் இரவு 9 மணி வரை இடைவிடாமல் தமிழில் ஒலிபரப்பு நடைபெறுகிறது. ஏ. எம். எனப்படும் மத்திய, சிற்றலை வரிசைகளிலும், எஃப் எம். எனப்படும் ஒலி அலைச்சீர் வரிசையிலும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. உலகில் முதன் முறையாகச் சிங்கப்பூரில் தான் இருவழி ஒலிபரப்பில் (எஃப். எம். ஸ்டீரியோ) தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. புத்தக வளம் - இலக்கியச் சோலை என்ற பகுதியில் தமிழ் நூல்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களை நாடகமாக்கி ஒலி பரப்பியது சிங்கப்பூர் வானொலியின் சிறப்பான பணியாகும். சிங்கப்பூர் வானொலியில் இந்தியப் பகுதியின் தலைவர் திரு. அ. முருகையன். தொலைக் காட்சி ஒளி பரப்பிலும் தமிழ் நிகழ்ச்சிகள் உயிரோட்டத்துடன் விளங்குகின்றன. திரு. கண்ணப்பன் அவர்களின் அரும்பணியே இதற்குக் காரணம் எனலாம். வாரம் ஒருமுறை தொலைக்காட்சியில் தமிழ்த் திரைப் படங்கள் 'ஒளியேறு'கின்றன.

## செக்கோசுலோவாகியா

போலந்தை அடுத்துள்ள இந்நாட்டின் தலைநகரம் பிராக். இந்நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகளாகத் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. செக்கோசுலோவாகியா நாட்டு மாணவர்களுக்குத் தமிழில் ஆர்வம் ஊட்டி, இங்குப் பணியாற்றி

யவர் டாக்டர் கமில் சுவலபில். இவர் சங்க கால அகப்பாடல்கள் சிலவற்றையும், சிலப்பதிகாரத்தையும் செக் மொழியில் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளார். சில தமிழ்ச் சிறு கதைகளையும் செக் மொழியில் கொண்டு வந்துள்ளார். இவருடைய மாணவரான டாக்டர் வாசெக் (Vacek) தற்போது சார்லஸ் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றுத்தருகிறார். இந்தியாவிலிருந்து பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்லஸ் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பழந்தமிழ்ப் பாடல்கள் சில வற்றை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. டாக்டர் ச. வே. சுப்பிரமணி யன் அவர்களும், டாக்டர் வாசெக் அவர்களும் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிராக் நகரிலிருந்து வெளிவரும் Archiv Orientalni என்னும் இதழில் தமிழியல் குறித்த பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

## செனகால்

பிரெஞ்சு பேசப்பெறும் ஆப்பிரிக்க நாடுகளுள் தலைமை வாய்ந்த செனகால் நாடு, மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிறு நாடாகும்

செனகால் நாட்டின் அதிபரான செங்கோரின் ஆர்வத்தின் விளைவாக 1979-ஆம் ஆண்டில் தக்கார் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் அறிமுகப்படுத்தப் பட்டது. இங்கு பிரெஞ்சு மொழி வழியாகப் பல்கலைக் கழக அளவில் தமிழ் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத் தில் தமிழ்ப் பயிற்றும் இணைப் பேராசிரியராக டாக்டர் தாயம்மாள் அறவாணன் பொறுப்பேற்றிருந்தார்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள 53 நாடுகளில், முதன் முதலா கப் பல்கலைக்கழக அளவில் தமிழை அறிமுகப்படுத்திய நாடு சென கால் ஒன்றே ஆகும். பிரெஞ்சு பேசப் பெறும் உலக நாடுகளிலேயே செனகால்தான் முதன் முதலாகப் பல்கலைக்கழகத்தில் தமிழை ஏற்றுள்ளது. ஆர்வம் ஒன்றுதான் தமிழ் இங்கு அரியணை ஏறக் காரணமாயிருந்தது.

தக்கார் பல்கலைக்கழக இணைவான ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் இணைந்த டாக்டர் க. ப. அறவாணன் திராவிட-ஆப்பிரிக்கரிடையே பண்பாட்டுப் பழக்க வழக்கங்களின் ஒற்றுமை களை ஆராய்ந்தார், Anthropological Studies on the Dravido-Africans எனும் நூலை வெளியிட்டார்.

## சோவியத் ஒன்றியம்

திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு சோவியத் ஒன்றியத்தில் நெடுங்காலமாகவே நடந்து வருகிறது. 1787-89 ஆண்டுகளில் பீட்டர்ஸ்பர்க்கில் (இன்றைய லெனின்கிராத்) வெளியான பன்மொழிகள்—கிளை மொழிகளின் ஒப்பீட்டு அகராதி தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திராவிட மொழிகளின் சொற்றொகுதியின் விரிவான சுருக்க விளக்கத்தை அளிக்கிறது. 1901-ஆம் ஆண்டு சொற்களஞ்சிய அகராதி வெளியிடப்பட்டது. அதில் மாஸ்கோ பல்கலைக்கழக ஸ்லாவ் இன மொழிகளின் பேராசிரியராக விளங்கிய எஸ். கே. புலிச் என்பவர் தமிழ் மொழி பற்றி எழுதியுள்ளார். ருஷ்ய எழுத்தாளரும் சிந்தனைச் சிற்பியுமான லியோ டால்ஸ்டாய் 1905-ஆம் ஆண்டில் "இந்துக்களுக்கு ஒரு கடிதம்" என்பதில் சில குறட்பாக்களைக் கையாண்டிருப்பது, ருஷ்ய அறிஞர்கள் திருக்குறளைப்பற்றி அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சான்று பகர்கிறது.

1926-இல் லெனின் கிராதில் தமிழ் மொழியின் இலக்கணம் என்னும் நூல் வெளியானது. இதை, ருஷ்யமொழியில் எழுதியவர் ஏ. எம் மெர்வர்த். லெனின்கிராத் பல்கலைக் கழகத்தில் 1956 முதல் பத்தாண்டுகளுக்கு மேலாக ரூதின் (செம்பியன்) தமிழ் மொழியைக் கற்றுக்கொடுத்தார். இவர் தயாரித்த தமிழ்-ருஷ்ய மொழி அகராதியில் 38000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழியின் சொல் வடிவமைப்பு என்ற நூலை இவர் எழுதினார்.

திராவிட மொழிகளைப் பற்றி எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் பேராசியர் எம் ஆந்திரோனவ் ஆவார். இன்றைய தமிழில் வினைச் சொற்கள் என்பது குறித்து 1960-இல் ஆராய்ச்சி நூலொன்று எழுதினார். தமிழ் மொழி, கொச்சைத் தமிழும் வட்டார வழக்குகளும், தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். 25 திராவிட மொழிகளையும் பல வட்டார வழக்குகளையும் ஒப்பிட்டு இவர் ஆராய்ந்ததன் விளைவாக ருஷ்ய மொழியில் எழுந்த நூலே திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் ஆகும். A Standard Grammar of Modern and Classical Tamil என்னும் இவருடைய ஆங்கில நூல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப்பெற்றுள்ளது.

டாக்டர் ஸ்வெத்லானா துருப்னிக் கோவா என்பவர் மாஸ்கோவிலுள்ள சர்வதேச உறவுக் கல்லூரியில் தமிழ்க் கற்பித்து வருகிறார். தமிழ்ப்பாடப் புத்தகம், இக்காலத் தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய நூல்களை உருவாக்கியுள்ளார். மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் அலெக்ஸாண்டர் துபியான்ஸ்க் என்பவர் தமிழ் கற்பித்துவருகிறார். ஓலைச் சுவடிப் பாடல்கள் என்னும் தலைப்பில் பழந்தமிழ்ப் பாடல்களை ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் விளாதிமிர் மக்கா ரெங்கோ எழுதிய தமிழ்ச் சிறுகதைகளின் இன்றைய வளர்ச்சி என்னும் தலைப்பிலமைந்த கட்டுரையும், மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தில் பணிபுரியும் விக்டர் புர்னிக்கா என்பர் எழுதிய ஜெயகாந்தனின் கதைப் பாத்திரங்கள், ராஜம் கிருஷ்ணன், அகிலன் ஆகிய தலைப்பிலான கட்டுரைகள் ஆகியவை தமிழ் இலக்கிய ஆய்வுத் தொடர்பான கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பில் உலக நாடுகளில் முதன்மை இடத்தைப் பெறுவது சோவியத் ஒன்றியம் என்பதில் ஐயமில்லை. திருக்குறள் மூன்று முறை சோவியத்தில் வெளியிடப்பட்டது. கவிதை வடிவிலான திருக்குறள் மொழிபெயர்ப்பு 1974-இல் வெளிவந்தது. அந்நூலில் குறள் ஒவ்வொன்றும் இரண்டே வரியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது சிறப்பானதாகும். சங்கப் பாடல்கள் பலவும், சிலப்பதிகாரக் காப்பியமும் பல ஆண்டுகளுக்கு முன்பே ருஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன.

பாரதியின் தேர்ந்தெடுத்த பாடல்கள் 1963-இல் ருஷ்ய மொழியில் வெளியாயிற்று. பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், ப. ஜீவானந்தம், ச. து. சு. யோகி, கண்ணதாசன், வாணிதாசன் போன்ற பல தமிழ்க் கவிஞரின் கவிதைகள் ருஷ்ய மொழியில் வெளிவந்துள்ளன. பல தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின்-நாவலாசிரியர்களின் படைப்புகள் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மாஸ்கோ வானொலியில் தமிழில் ஒலிபரப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்ற விக்டர் மீனின் தமிழ்ப் பிரிவு நிகழ்ச்சி ஏற்பாட்டாளராக இருக்கிறார்.

''மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகமும் இதர சோவியத் பதிப்பகங்களும் தமிழில் வெளியிடும் இலக்கிய விஞ்ஞான அரசியல் புத்த

கங்களும், மற்றும் மாஸ்கோ வானொலியின் தமிழ் ஒலிபரப்பும் தமிழில் சொல்வளத்தைச் செழுமையாக்குவதில் தம்மால் இயன்ற அளவு தொண்டு புரிகின்றன'' (விக்டர் மீனின்)

## பீஜித் தீவு

1940—இல் ஒரு இலட்சம் பேருக்கும் மேலாகத் தமிழில் பேசி வாழ்ந்த தமிழர்கள் இன்று 10,000 பேருக்கும் குறைந்துவிட்டதாகத் தெரிகிறது. இங்கு வாழ்வோரில் பலர் தமிழர் என்று சொல்லிக் கொள்ளவும், தமிழில் பேசவும் வெட்கப்படுகிறார்கள்.

15 ஆண்டுகளாக சமரச சன்மார்க்க சபையின் ஆதரவில் திருவருட்பா மற்றும் கூட்டுப் பிரார்த்தனை மூலம் சமயத்துடன் தமிழைப் பரப்பி வருகிறார்கள். சன்மார்க்க சங்கம் தென்னிந்தியர்களால் கடந்த 56 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டு வருகின்றது; ஓரளவு தமிழையும் கற்றுத் தருகிறார்கள். ஆண்டுதோறும் பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு, பங்குனி உத்திரம், கார்த்திகை தீபம் ஆகிய நாட்களைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். 1958 முதல் *மித்திரன்* என்ற எட்டு பக்கக் கையெழுத்து ஏடு நடத்தப்பட்டு வருகின்றது.

1928—இல் பீஜியில் குடியேறிய திரு. க. அப்பா பிள்ளை என்பவர் தற்போது உலகத் தமிழ்ப் பண்பாடு இயக்கத்தின் பீஜித் தீவுக் கிளையின் தலைவராக விளங்குகிறார்.

ஆஸ்திரேலியாவின் கிழக்கில் சுமார் 2000 மைல் தொலைவில் உள்ள இத்தீவின் தலை நகரம் சுவா. இங்கு வாழும் $5\frac{1}{2}$ இலட்சம் மக்களில் 280,000 பேர் இந்தியர். 5000 பேர் தமிழர்கள். 1955—இல் பீஜித் தீவைப் பற்றி உலகம் சுற்றிய தமிழர் ஏ. கே. செட்டியார் ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

ஒரே தமிழ்க் குடும்பத்தில் பல்வேறு இந்திய இனக் கலப்பு மணம் நடைபெறுவதால் பீஜித் தீவில் இக்குடும்பத்தில் தமிழ் அழிந்து இந்தியே ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையாக இந்தியர் வாழும் இத் தீவிலிருந்து அவர்களை நாடு கடத்த 1975 — இல் எழுந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டு விட்டது. குத்தகைத்தொழில், கூலிவேலை ஆகியவற்றில் தமிழரே மிகுதியாக இருக்கிறார்கள்.

இங்கு வாழும் தமிழர்கள் தங்கள் பெயருடன் சாதிப் பெயரையும் இணைத்து வைத்துக் கொள்வது காணப்படுகிறது, சில பெயர்கள்: முத்துச்சாமி ஐயர், முன்சாமி ரெட்டி, பொன்சாமி கவுண்

டர், ராமசாமி முதலியார், தேவராஜன் ஆசாரி, மாணிக்கம் நாயக்கர், முன்சாமி செட்டி. தமிழ்ப் பெண்களும் பெயரோடு சாதிப் பெயரை இணைத்துக் கொள்ளும் தன்மை நிலவுகின்றது. முனியம்மாள் கவுண்டர் என்பது அத்தகையப் பெயர்களில் ஒன்று.

இங்குள்ள தமிழர்களில் சிலர் டாக்டர்களாகவும் பலர் ஆசிரியர்களாகவும் பணிபுரிகிறார்கள்.

இங்குள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட கோயில்களில் தீ மிதித் திருவிழா நடைபெறுகிறது. இங்கே தெருக் கூத்தும் நடைபெறுகிறது.

இராமகிருட்டின மடத்தைச் சார்ந்த தவத்திரு சுவாமி ருத்ரானந்தா அவர்கள் திருக்குறளின் பீஜி மொழி பெயர்ப்பை வெளிவரச் செய்தார்.

## போலந்து

வார்சாவைத் தலைநகராகக் கொண்டு விளங்கும் போலந்து நாட்டுக்கும் இந்தியாவுக்கும் அரசியல் தொடர்பு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. ஆனால் போலந்தில் இந்திய இயல் கல்வி 160 ஆண்டுகளாய்ப் பழமை உடையதாயிருக்கிறது.

போலந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவின் தொடர்பால் 1955—இல் வார்சா பல்கலைக் கழகத்தில் எம். ஏ, பட்ட வகுப்பு தொடங்கப்பட்டது 1972—இல் தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டது. 1972 முதல் 1979 வரை தமிழ்க் கற்ற மாணவர்களின் எண்ணிக்கை 16. இவர்களில் ஆறு பேர் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துப் பயின்றார்கள். இவர்களனைவரும் தமிழில் பேச, படிக்க, எழுத, மொழிபெயர்க்க பயிற்சி பெற்றனர். இம் மாணவர்கள் தயாரித்து அளித்த முதுகலை கட்டுரைகள்: பழந்தமிழ் நாட்டில் முருக வழிபாடு, மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் பக்தி இயக்கமும்· பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல் அமைப்பும் பொருளும் நீலகிரி இருளப் பழங்குடி மக்கள். இக் கட்டுரைகள் தயாரிக்கப்பட்ட காரணத்தால் திருமுருகாற்றுப்படை, திருவெம்பாவை, பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல்கள் போலிஷ் மொழியில் மாணவர்களால் மொழிபெயர்க்கப்பட்டன. பட்டினப் பாலை, கம்பராமாயணத்தில் வாலி வதைப் படலம், பாரதியின் கண்ணன் பாட்டு ஆகியவை மாணவர்களால் மொழிபெயர்க்கப் பட்டன.

போஹ்நன் கெம்பார்கி என்பவர் திருக்குறள் முழுவதையும் இராம. சுந்தரம் அவர்களின் துணையோடு போலிஷ் மொழியில்

மொழிபெயர்த்து 1977 டிசம்பரில் வெளியிட்டார். 10,000 பிரதிகள் வெளிவந்தன. அப்போது பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பித்த இராம. சுந்தரம் அவர்கள் மாணவர்களின் தேவைக்காக ஒரு தமிழ் வாசகம் தயாரித்து, பல்கலைக் கழகம் மூலம் வெளியிட்டார். வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்காக வாரந்தோறும் தினமணி இதழ் இங்கு வருகிறது. தற்போது இப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பார்த்தசாரதி தமிழ் கற்பித்து வரு கிறார்.

வார்சா பல்கலைக்கழக நூலகத்தில் தமிழிலும் தமிழைப் பற்றி யும் நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. தமிழில் ஆராய்ச்சி இதழ்களும் வார மாத இதழ்களும் இங்கு கிடைக்கின்றன.

## மலேசியா*

மலேசியாவில் தமிழ்க் கல்வி ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றையுடையது. 1786 - இல் பினாங்கு ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது. இதனையொட்டித் தற்கால இந்தியத் தொழிலாளர் குடியேற்ற வரலாறும் தொடங்குகிறது. வீட்டு வேலை செய்வதற்கும், வேளாண்மையில் உதவுவதற்கும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பினாங்கில் சுமார் ஆயிரம் இந்தியத் தொழிலாளர்கள் இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் 'கூலிகள்' என்றே குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் போல வீட்டு வேலை செய்வதற்காக அல்லாமல், மலாயாவின் காடுகளை அழித்துத் தோட்டங்கள் ஆக்கவும், அத்தோட்டங்களில் வேலை செய்யவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் ஆங்குக் குடியேறத் தொடங்கினர். 1840-களில் கரும்புத் தோட்டங்களிலும், 1870-களில் காப்பித் தோட்டங்களி லும், 1890-களில் ரப்பர் தோட்டங்களிலும் வேலை செய்ய இவ் வாறு குடியேறத் தொடங்கிய இந்திய தொழிலாளர்களின் எண் ணிக்கை அடுத்தடுத்து நன்கு பெருகத் தொடங்கியது. 1891-இல் 75,000 ஆக இருந்த இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1901-இல் 120,000-ஐ எட்டியது. இவ்வெண்ணிக்கை 1911-இல் 268,269-க்கும், 1921-இல் 470,180-க்கும் 1931-இல் 621,847-க்கும் உயர்ந்தது. மலாயா விடுதலை அடைந்த 1957-இல் இந்தியர் களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 11.1 விழுக் காடு இருந்தது. இந்தியர்கள் என்று பொதுவாகக் குறிப்பிட்டா லும் இவர்களில் தமிழரே பெரும்பகுதியினர். எடுத்துக்காட்டாக 1844-1941-ஆம் ஆண்டுகளுக்கிடையில் வந்த 2,725,917 இந்தியத் தொழிலாளர்களில் 85.2 விழுக்காட்டினர் தமிழர்கள்.

* டாக்டர் இரா. தண்டாயுதம் அனுப்பியது.

தமிழர்கள் இவ்வாறு பெரும்பான்மையினராய்க் குடிப்பெயரப் பெயரத் தமிழ்க் கல்வியும் இங்கு வேர்கொள்ளத் தொடங்கியது தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தக் குடியேறிய தொழிலாளர்கள் தொடர்ந்து நிலைத்திருக்கவே தொடக்கத்தில் தமிழ்ப் பள்ளிகள் ஏற்பட்டன. 1816-இல் பினாங்கு இலவசப் பள்ளியில் (Penang Free School) தொடங்கப்பட்ட தமிழ்ப் பள்ளியே இது வரை கிடைத்துள்ள தகவல்களின்படி மலாயாவில் ஏற்படுத்தப் பட்ட முதல் தமிழ்ப் பள்ளியாகத் தெரிகிறது. இந்தப் பள்ளியில் இதே ஆண்டில்தான் மலாய் மொழியும் தொடங்கப் பெற்றது. போதிய ஆதரவு இல்லாக் காரணத்தால் விரைவில் தமிழ்ப் பள்ளி மூடப்பட்டது. இதன் பின்னர் சிங்கப்பூரில் 1834-இல் சிங்கப்பூர் இலவசப் பள்ளியில் (Singapore Free School) தமிழ் வகுப்பு ஒன்று தொடங்கப் பெற்றது. இவ்வகுப்பை மேற்பார்வையிடத் தமிழறிந்த ஆங்கிலேயர் கிடைக்காததாலும், எதிர்பார்த்த பயன் விளையாததாலும் 1839-இல் இவ்வகுப்பு நிறுத்தப்பட்டது. இதன் பிறகு சிங்கப்பூர் ஹை ஸ்ட்ரீட்டில் (High Street) இருந்த சிங்கப்பூர் கல்வி நிறுவனம் (Singapore Institution) ஒரு தமிழ் வகுப்பைத் தொடங்கியதாகவும் அதுவும் 1836-க்குப் பின் நடைபெறவில்லை என்றும் தெரிகிறது.

தமிழ்த் தொழிலாளரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தரத் தோற்றுவிக்கப்பட்ட இத்தொடக்கக் காலப் பள்ளிகளும் வகுப்புகளும் வெற்றியடையாமல் போனதற்கு முக்கிய காரணம், எந்தவொரு இடத்திலும் ஒரு பள்ளி நடத்துவதற்கு வேண்டிய மாணவர்கள் இன்மையே எனலாம். தோட்டங்கள் பல பகுதிகளில் சிதறிக் கிடந்ததும், ஒரு தோட்டத்திற்கும் மற்றொரு தோட்டத்திற்கும் இடையில் இருந்த தொலைவும், போதிய போக்குவரத்து வசதியின்மையும் மாணவர்கள் ஒன்று சேர விடாமல தடுத்தன. எனவே அப்போது இருந்த ஆங்கிலப் பள்ளிகளிலேயே தமிழையும் சொல்லிக் கொடுக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சிங்கப்பூரில் இருந்த செயின்ட் பிரான்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் (St. Francis Xavier Malabar School) மலாக்காவில் இருந்த ஒரு பள்ளியிலும் தொடங்கப்பட்ட வகுப்புகள் இதற்கு எடுத்துக்காட்டானவையாகும். இவையும் வெற்றி பெறவில்லை. 1862-இல் மாதர் விவிலிய சமய ஆய்வு சங்கம் (Ladies Bible and Tract Society) அரசாங்கப் பொருளுதவியுடன் தொடங்கிய ஒரு தமிழ்ப் பள்ளியும் சில காலமே நடைபெற்றது.

குடியேற்றத் தொழிலாளர் குழந்தைகளின் கல்வி நலனில் அரசாங்கம் சற்றும் அக்கறைக் காட்டாததால், அப்போதைய

முயற்சிகள் யாவும் மத நிறுவனங்களாலும் தனிப்பட்ட சில பெரியோரது நல்லெண்ணத்தாலுமே நடந்தன. இக்காலக் கட்டத்தில் தோன்றிய பல ஆங்கிலப் பள்ளிகள் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளாகவே தோன்றின. இத்தகைய பல பள்ளிகளைப் பினாங்கிலும் சிங்கப்பூரிலும் கிருத்தவ சமய நிறுவனங்கள் நடத்தி வந்தன. எஸ். பி. ஜி. என்னும் கிருத்தவ சமய நிறுவனம் வெல்லெஸ்லி மாநிலத்தில் ஐந்து பள்ளிகளை நடத்தி வந்தது 1895-1896-ஆம் ஆண்டுகளில் தவத்திரு ஆப்ரகாம் கோலாலம்பூரில் ஓர் ஆங்கிலோ-தமிழ்ப் பள்ளியைத் தொடங்கினார். இதுவே பின்னர் மெதடிஸ்ட் ஆண்கள் பள்ளியாக மாறியது

இதே காலகட்டத்தில் காப்பி, கரும்பு, ரப்பர் தோட்டங்களிலும் சில சிறிய தமிழ்ப் பள்ளிகள் தோன்றின. இவை வெல்லெஸ்லி, மலாக்கா, ஜோகூர் ஆகிய மாநிலங்களில் தோன்றின. 1872-இல் நிபோங் திபால் (Nibong Tibal) என்ற இடத்தில் தொடங்கப்பட்ட தோட்டப்பள்ளியும். 1875-1876-ஆம் ஆண்டுகளில் வெல்லெஸ்லி மாநிலத்தில் தொடங்கப்பட்ட தோட்டப் பள்ளியும் காலத்தால் முற்பட்ட சில தோட்டப்புறத் தமிழ்ப் பள்ளிகள் ஆகும். இவற்றிற்குப்பின் படிப்படியாகத் தமிழ்ப் பள்ளிகள் பெருகத் தொடங்கின.

எண்ணிக்கையளவில் தமிழ்ப் பள்ளிகள் பெருகத் தொடங்கினாலும் அரசாங்கம் அவற்றின்பால் பாராமுகமாகவே இருந்தது. தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை அது ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை மாறாகத் தோட்ட நிர்வாகங்களும் இதைத் தம்முடைய கடமையாகக் கருதவில்லை. எனவே தமிழ்க் கல்வி பயனுள்ள முறையில் அமையாததில் வியப்பில்லை. இச்சூழ்நிலையில் 1876-இல் அரசாங்கம் செய்து வந்த சிறு பொருளுதவியையும் நிறுத்தி விட்டது. எனினும் 1882-இல் மறுபடியும் அரசாங்கம் பொருளுதவி செய்ய முன் வந்தது.

சென்ற நூற்றாண்டில் தமிழ்க் கல்வியின்பால் ஆங்கில அரசாங்கம் கொண்டிருந்த மனப்பான்மையை இரு செய்திகள் தெளிவாகக் காட்டுகின்றன. முதலாவது 1872-இல் அரசாங்கம் தமிழ்-சீனக் குழந்தைகளுக்குத் தாய்மொழிக் கல்வி அளிப்பது தன் கடமையல்ல என அறிவித்ததாகும். இரண்டாவது, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்க் கற்றுத் தருவதற்கும் தமிழ் மாணவர்களிடமிருந்தே ஆசிரியர் கட்டணம் பெற்றுக் கொள்ள வேண்டும் என விதித்ததாகும். 1881-ஆம் ஆண்டு வெளியான '**சிங்கப்பூர்-**

தொடுவாய்ப்பகுதி தகவல் தொகுதி' (Singapore and Straits Directory) இச்செய்தியைத் தருகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நிலையில் சிறிது மாற்றம் ஏற்படத் துவங்கியது அரசாங்கமும் தமிழ்க் கல்வியில் ஓரளவு நாட்டம் காட்டத் தொடங்கியது. 1900-ஆம் ஆண்டில் பேராக் மாநிலக் கிரியான் மாவட்டத்தில் பாகன் செராயில் கட்டப்பட்ட தமிழ்ப் பள்ளியே முதலாவது அரசினர் தமிழ்ப் பள்ளி ஆகும். அச்சமயத்தில் பேராக்கில் அரசப் பேராளாக இருந்த சர் பிராங்க் ஸ்வெட்டன்ஹாம் (Sir Frank Swettenham) தமிழ்க் கல்வியின் வளர்ச்சியில் ஓரளவு ஆர்வம் காட்டியதன் விளைவே இது. நெகிரி செம்பிலான் மாநிலத்திலும் இக்கால கட்டத்தில் சில அரசினர் தமிழ்ப் பள்ளிகள் தோன்றின. இவற்றில் முதலாவது 1900-இல் சிரம்பானில் தோன்றிய அரசினர் தமிழ்ப் பள்ளி ஆகும். இப்பள்ளியின் தலைமை ஆசிரியரே தமிழ்ப் பள்ளிகளின் இடைக் காலத் துணைக் கண்காணிப்பாளராகப் பதவி வகித்தார். நெகிரி செம்பிலான் மாநிலத்தோடு பஹாங் மாநிலத்திலும் இப்பகுதியைத் தற்காலிகமாக இவர் வகித்து வந்தார். இவையல்லாமல் ஓரிரு பெண்களுக்கான தமிழ்ப் பள்ளிகளும் இக்கால கட்டத்தில் தொடங்கின. பினாங்கு கான்வென்ட் நடத்திய ஒரு பள்ளியும், ஸ்ரீராம கிருஷ்ண மடம் சிங்கப்பூரில் நிறுவிய சாரதாமணி பெண்கள் பள்ளியும் இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஆங்கில அரசாங்கம் தமிழ்க் கல்வியின் மீது இவ்வாறு நாட்டம் காட்டத் தொடங்கியதற்குத் தகுந்த காரணம் உண்டு. மலாயாவின் பொருளாதார வளத்திற்கு முதுகெலும்பாக விளங்கிய ரப்பர்த் தோட்டங்கள் இக்காலகட்டத்தில் எண்ணிக்கையில் மளமளவென்று வளரத் தொடங்கின. 1900—இல் 50, 000 ஏக்கர்களாகவும், 1938—இல் 3, 272, 000 ஏக்கர்களாகவும் உயர்ந்தன. ரப்பர்த் தோட்டங்களின் எண்ணிக்கை உயரஉயரத் தமிழ்த் தொழிலாளரின் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது இதற்கேற்றாற்போல் 1907-ஆம் ஆண்டிற்குப் பின் தென்னிந்தியாவிலிருந்து இங்கு தொழிலாளர்கள் வருவதற்கு இலவசப் பயணச் சீட்டும் தரப்பட்டது. இக்காரணங்களால் தமிழ்த் தொழிலாளர் பெருமளவில் மலாயாவிற்குக் குடிபெயரத் தொடங்கினர். 1911-க்கும் 1920-க்கும் இடையில் ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 90,000 பேர் மலாயா வந்துள்ளனர். இவ்வெண்ணிக்கை 1921- 1930 ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 88, 000 பேராகக் காணப்படுகிறது. இதன் பின்னரே ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது.

பெருகிவரும் மலாயாவின் ரப்பர்த் தோட்டங்களில் இவ்வாறு வேலை செய்ய வந்த தொழிலாளர்களை இங்கு நிலைத்திருக்கச் செய்யவே அரசாங்கம் தமிழ்க் கல்வியில் ஓரளவு நாட்டம் காட்டத் தொடங்கியது. 1912- ஆம் ஆண்டு கூட்டரசு மலாய் மாநிலங்களில் (Federated Malay States) கொண்டு வரப்பட்ட தொழிலாளர் சட்டம் இதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டாகும் (இரண்டாம் உலகப் போருக்கு முந்திய மலாயா அரசியல் அடிப்படையில் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. பினாங்கு, வெல்லெஸ்லி மாநிலம், மலாக்கா, சிங்கப்பூர் ஆகியவை நீரிணைக் குடியேற்ற மாநிலங்கள் (Straits Settlements) எனப்பட்டன நெகிரி செம்பிலான், சிலாங்கூர், பேராக், பஹாங் ஆகியவை கூட்டரசு மலாய் மாநிலங்கள் (Federated Malay States) என வழங்கின. திரெங்கானு, கிளந்தான், கெடா, ஜோகூர், பெர்லிஸ் ஆகிய மாநிலங்கள் கூட்டரசல்லாத மலாய் மாநிலங்களாகக் (Unfederated Malay States) கருதப்பட்டன.) இச்சட்டத்தின்படி ஏழு வயதிற்கும் பதினாலு வயதிற்கும் உட்பட்ட பத்துப் பிள்ளைகள் ஒரு தோட்டத்தில் இருந்தால் அங்கு ஒரு பள்ளி திறக்கப்பட்டு ஆசிரியரும் அமர்த்தப்பட வேண்டும். பள்ளிகள் அமைவதைப் பார்த்துக் கொள்வது தொழிலாளர் அதிகாரியின் (Controller of Labour) பொறுப்பில் விடப்பட்டது. இந்நிலை 1933 இறுதிவரை நீடித்தது.

இச்சட்டத்தின் காரணமாகத் தோட்டப்புறத் தமிழ்ப் பள்ளிகள் எண்ணிக்கையில் பெருகினாலும், கல்வியின் தரம் மிகத் தாழ்ந்தே இருந்தது. இதற்குக் காரணம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகம் இல்லை கல்வியைத் தருவது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்க அது தங்கள் தலையில் வலிய சுமத்தப்பட்டு விட்டதாகத் தோட்ட நிர்வாகங்கள் கருதின. கல்விக்காக மேலும் செலவிட அவை விரும்பவில்லை. எனவே பெயரளவில் சட்டத்தைத் திருப்திப்படுத்த அவை பள்ளிகளை நிறுவின. தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதில் அவை எந்தவித முயற்சியையும் காட்டவில்லை. கங்காணியோ அல்லது கிராணியோ (clerk) அல்லது பூசாரியோ அல்லது ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த தொழிலாளியோ பகுதி நேர ஆசிரியராக வேலை பார்த்தனர். தமிழ்ப் பள்ளி ஆசிரியர் தொழில் என்பது விரும்பி ஏற்கப்படாத ஒரு தொழிலாகவே இருந்தது வேறு எந்த வேலையும் கிடைக்காத சூழ்நிலையிலேயே தற்காலிகமாகத் தமிழாசிரியர் வேலையைச் சிலர் ஏற்றனர். (தமிழாசிரியர் என்ற சொல்லுக்குத் தமிழகத்தில் கொள்ளப்படும் பொருளும் மலாயாவில் கொள்ளப்படும் பொருளும் வேறு வேறானவை. புலவர் அல்லது வித்துவான் தேர்வில் தேறி உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்ப் பணி ஆற்றுபவர்களே தமிழகத்தில் தமிழாசிரியர் என அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் மலாயாவிலோ தமிழ் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களே தமி ழாசிரியர் எனச் சுட்டப்படுகின்றனர். இதற்கேற்றாற்போல் தொழி லாளரும் தங்கள்பிள்ளைகளின் கல்வியைப்பெரிதாகக்கருதவில்லை. தோட்டங்களில் பிள்ளைகள் வேலை செய்வது தடுக்கப்படாத தால், தங்கள் வறுமையைக் குறைத்துக் கொள்ளப் பிள்ளைகள் வேலை செய்வதையே அவர்கள் விரும்பினர். அன்றியும் தமிழ்க் கல்வி எந்த வகையிலும் தங்கள் நிலையிலிருந்து பிள்ளைகளின் நிலையை உயர்த்திவிடாது என அவர்கள் கருதியதும் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவே அமைந்தது. 1920களில் பத்து வய திற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதில் எவ்விதச் சிரமமும் இருக்கவில்லை என்பதையும் இங்கு நாம் நினைவிற் கொள்ள வேண்டும்

தமிழ்க் கல்விப் பாதையில் இவ்வளவு தடைகள் இருந்தபோதி லும், தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை மெல்ல மெல்லக் கூடிக் கொண்டே வந்தது. கூட்டரசு மலாய் மாநிலங்களில் 8,153 பிள்ளை களோடு 235 ஆக 1925-இல் இருந்த தமிழ்ப் பள்ளிகளின் எண் ணிக்கை, 1930-இல் 333 பள்ளிகளோடு 12,640 பிள்ளைகள் அள விற்கு உயர்ந்ததை ஓர் எடுத்துக்காட்டாய்க் கூறலாம். இச்சூழ் நிலையில் அரசாங்கமும் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சியில் ஓரளவு கவனம் காட்டத் தொடங்கியது. 1929-இல் தமிழ்ப் பள்ளிகளின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அது ஒரு சட்டம் இயற்றியது 1932-இல் அமைக்கப்பட்ட ஒரு மான்யக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்பத் தமிழ்ப் பள்ளிகளுக்குப் பிள்ளைக்கு ஆறு வெள்ளியாக மான்யம் வழங்கப்பட்டது. 1935-இல் இம்மான்யத் தைப் பிள்ளைக்கு எட்டு வெள்ளியாகவும் உயர்த்தியது. அத்துடன் தோட்டப்புறக் கள்ளுக் கடைகளின் வருமானத்தில் ஒரு பகுதியைப் பள்ளி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தவும் அரசாங்கம் வழி செய்தது. இவற்றுடன் நில்லாது, தமிழ்க் கல்வியின் தரம் உயரவும் அரசாங் கம் சில முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்ப் பள்ளிகளைக் கண் காணிக்கவும், பாடத்திட்டங்களை ஒருமுகப்படுத்தவும் முதன்முறை யாக 1930-இல் மலாயா கல்வித் துறையில் ஓர் அதிகாரி நியமிக்கப் பட்டார். இவர் பதவியேற்ற சிறிது காலத்திற்குள் இறந்துவிடவே. 1937-இல் இந்தியப் பள்ளிகளின் கண்காணிப்பாளராக (Inspector of Indian Schools) மற்றொருவர் நியமிக்கப்பட்டார். இவர் முதலில் தமிழ் கற்றுக் கொள்வதற்காக இலண்டனில் உள்ள கீழ்த்திசை—ஆப்பிரிக்க ஆய்வு நிறுவனத்திற்கு(School of Oriental and African Studies) அனுப்பப்பட்டார். அதன்பின் தமிழ்நாட்டுப் பேச்சு வழக் கில் பயிற்சி பெறவும், தமிழ் நாட்டுத் தொடக்கப் பள்ளிகளின் கல்வி

முறையை அறியவும் தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டார். மலாயா வின் தமிழ்க் கல்வி வரலாற்றில் இது ஒரு முக்கியமான திருப்பு மையம் எனலாம். ஆற்றலுள்ள கண்காணிப்பு இல்லாமல் வாடிக் கொண்டிருந்த தமிழ்ப் பள்ளிப் பயிர்கள், இம் மழையினுல் தளர்ச்சி நீங்கி ஓரளவு உற்சாகமும் பெற்றன. எனினும் பயிற்சி பெற்ற ஆசிரி யர்கள் இன்மையால் இப்பயிர் முழுமையாக வாட்டம் நீங்காமல் தான் இருந்து வந்தது. 1937-இல் கூட்டரசு மலாய் மாநிலங்களி லும் தொடுவாய்ப் பகுதி மாநிலங்களிலும் இருந்த 310 தமிழாசிரியர் களில் கால்பகுதிக்கும் குறைவானவரே பயிற்சிச் சான்றிதழ் பெற் றிருந்தனர் என்பது இங்குக் கருதத்தக்கது.

தோட்டப்புறங்களில் இவ்வாறு தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகும் வேளையில், நகர்ப்புறங்களில் தமிழ்ப்பள்ளி கள் சிலவாகவே இருந்தன. கோலாலம்பூரில் 1906-இல் தோன்றிய தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப் பாடசாலை, 1920-இல் தோன்றிய விவே கானந்தா தமிழ்ப் பள்ளி, 1937-இல் தோன்றிய அப்பர் தமிழ்ப் பள்ளி ஆகியவையே குறிப்பிடத்தக்க சில நகர்ப்புறப் பள்ளிகள். இவையல்லாமல் பினாங்கில் இந்தியர் சங்கம் ஒரு பள்ளியையும் இராமகிருஷ்ணா மிஷன் கோலாலம்பூர், சிங்கப்பூர் ஆகிய இடங் களில் இரு பள்ளிகளையும் நடத்தின. தமிழ் அல்லாமல் ஆங்கிலம் கற்றோர் சிறந்த வேலைகளைப் பெறும் வாய்ப்பிருந்ததால் நகர்ப் புறப் பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிகளையே நாடினர். மாறாகத் தோட்டப்புறப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமோ மலாயோ ஒரு சிறிதும் கற்றுத் தரப் படவில்லை. இந்நிலையில் தமிழ் மட்டும் அறிந்த பிள்ளைகள் ஒரு புறமும், தமிழையே அறியாத பிள்ளைகள் மற்றொரு புறமுமாக தமிழ்ப் பிள்ளைகள் இருவேறு உலகங்களில் இயங்கி வந்தனர்.

தொடக்கப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் ஆறு ஆண்டுகள் கல்வி கற்றனர். ஓராண்டு தொடக்கக் கல்வியும் பின் ஐந்து வகுப்புக்களும் என இவ்வாண்டுக் கல்வி பிரிக்கப்பட்டிருந்தது. ஏட்டளவில் ஐந்து வகுப்புக்கள் இருப்பினும் பெரும்பாலான பள்ளிகள் மூன்றாம் வகுப்போடு முடித்துக் கொண்டன. சில தமிழ்ப் பள்ளிகளில் மட்டும் நான்காம், ஐந்தாம் வகுப்புக்கள் இருந்தன. கூட்டரசு மலாய் மாநிலங்களில் 1937-ல் நான்காம் வகுப்பில் 650 பிள்ளைகளும், ஐந்தாம் வகுப்பில் 200-க்குக் குறைந்த பிள்ளைகளுமே இருந்தனர் என்ற புள்ளி விவரம் அன்றைய தமிழ்ப் பள்ளிகளின் உண்மை நிலையை ஓரளவு உணர்த்தும். தோட்டப் புறப் பள்ளிகளில் பல ஓராசிரியர் பள்ளிகளாக இருந்ததும் இதற்கொரு காரணம் எனலாம்.

இதனையடுத்து வந்த ஜப்பானியர் ஆதிக்க காலத்தில் (1942-1945) நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் ஜப்பானிய மொழிப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. மொழி, இன வேறுபாடின்றி எல்லாப் பள்ளிகளும் ஜப்பானிய மொழியையே பயிற்றுவித்தன. எனினும் இக்காலகட்டம் நீடிக்கவில்லை.

ஆங்கிலேயர் திரும்பி வந்த பின்னால் தமிழ்ப்பள்ளிகளின் நிலையில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. 1946-இல் புதிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதன்படி தொடக்கப் பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி இலவசமாகக் கற்றுத் தரப்பட்டது. ஆங்கிலம் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமானது. 1947-இல் தமிழ்ப் பள்ளிகளைத் திருத்திக்கட்டவும், நவீன சாதனங்களைப் பெருக்கவும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டது. மலாய் ஆசிரியர்களுக்குச் சமமான சம்பளமும் இவ்வாறு அரசாங்கம் தமிழ்ப் பள்ளிகளின் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரே கிடைத்தது. 1949-இல் கல்வியைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. அன்றியும் 1946இல் முதன் முதலாக ஏழாம் வகுப்பும் தொடங்கப் பெற்றது. இவ்வகுப்பில் பயின்று தேறியவர்களுக்குத் தமிழாசிரியர் வேலை கிடைக்கவும் வழி செய்யப்பட்டது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளால தமிழ்ப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. 1946-இல் 29,800 ஐயும் 1949-இல் 38,700-ஐயும் இவ்வெண்ணிக்கை எட்டியது.

இதன் பின்னர் நாட்டின் கல்விக் கொள்கையை வகுக்கவும், அதன் அடிப்படையில் ஆலோசனைகள் கூறவும் அவ்வப்போது அரசாங்கத்தால் பல உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக் குழுக்களின் அறிக்கைகள் தமிழ்ப்பள்ளிகளின் நிலையை அவ்வப்போது ஓரளவு மாற்றிக்கொண்டே இருந்தன. இவற்றில் முதலாவதாகக் குறிக்கத்தக்கது பார்ன்ஸ் அறிக்கை (Barnes Reroit) 1949-இல் நியமிக்கப்பட்ட இக்குழு 1951 இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஒரு மொழி ஒரு நாடு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இவ்வறிக்கை மலாய் மொழியைத் தேசிய மொழியாகப் பரிந்துரைத்தது. அடுத்த பத்தாண்டுகளில் ஆங்கிலத்தின் இடத்தை மலாய் பெறவேண்டும் எனக் கூறும் அவ்வறிக்கை, மலாயோ அல்லது ஆங்கிலமோ போதிக்கப்படாத தமிழ், சீனப்பள்ளிகளுக்கு அரசாங்கம் தன்னுடைய பொருளுதவியை நிறுத்திவிட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. இன அடிப்படையில் இல்லாமல், எல்லா மொழி. சமயம், பண்பாட்டைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து பயிலும் வகையில் தேசியப்பள்ளிகளை உருவாக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு அரசாங்கம்

சீனக் கல்வியைப் பற்றிய கருத்துக்களை அறிய ஃபென்-வு குழுவை (Fenn-Wu) அமைத்தது. எனினும் அப்போதைய காலனித்துவ அரசாங்கம் தமிழ்க் கல்வியைப் பற்றி ஆராய இத்தகைய ஓர் உயர் மட்டக்குழுவை அமைக்க ஒப்புக்கொள்ளவில்லை. இச்சூழ்நிலையில் சைவப் பெரியார் இராமனாதன் செட்டியார், ஆதிநாகப்பன், சுவாமி சத்யானந்தா, கே. எல். தேவாசர், ஜி. லியோ முதலியவர்களைக் கொண்டு இந்திய சமூகத் தலைவர்கள் ஒரு கல்விக்குழுவை அமைத்தனர். சீன, தமிழ்க் கல்விக் குழுக்கள் இரண்டுமே மலாயை தேசிய மொழியாக ஒப்புக் கொண்டன. தமிழ்க் கல்விக் குழு அத்துடன் ஒரு மும்மொழிக் கொள்கையைப் பரிந்துரைத்தது. அதன்படி தொடக்கப்பள்ளியின் ஆறாண்டுகளில் தாய் மொழியிலேயே கல்வி அமையவேண்டும் என்றும் ஆங்கிலமும் மலாயும் தொடக்கப்பள்ளியின் மூன்றாவது ஆண்டிலிருந்து படிப்படியாகக் கற்றுத் தர வேண்டும் என்றும் அது கருத்துரைத்தது.

மலாயாவின் மக்களுக்கு அதிக அதிகாரத்தைத் தரும் வகையில் 1955-இல் அமைந்த தேசிய அரசாங்கம் கல்விப் பொறுப்பைத் தன் வசம் வைத்துக் கொண்டதுடன் கல்விக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய டத்தோ அப்துல் ரஸாக்(பின்னர் மலேசியாவின் பிரதமரான துன் அப்துல் ரஸாக்) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழுவின் அறிக்கை (Razak Report) 1956-இல் வெளியானது நாடு முழுவதும் தழுவிய ஒரு தேசிய கல்விக் கொள்கையை இக்குழு பரிந்துரைத்தது. இதன்படி அப்போதிருந்த பள்ளிகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. மலாயைப் பயிற்சி மொழியாகவும் ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும் கொண்ட தொடக்கப்பள்ளிகள் தேசியப் பள்ளிகளாகவும் (Standard Primary Schools) ஆங்கிலத்தையோ தமிழையோ சீனத்தையோ பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் (Standard type Primary Schools), ஆங்கிலத்தையும் மலாயையும் பாடங்களாகப் போதிக்கும் தமிழ்ப் பள்ளிகளாகவும், சீனப் பள்ளிகளாகவும் இப்பிரிவுகள் அமைந்தன. எல்லாத்தொடக்கப்பள்ளிகளிலும் குறைந்தது பதினைந்து பிள்ளைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால் தமிழையோ சீனத்தையோ போதிக்கவும் இவ்வறிக்கை வழிவகை செய்தது. இக்கொள்கை இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகிறது. இக்குழுவின் அறிக்கையை மறுபரிசீலனை செய்ய 1960-இல் அப்போதைய கல்வி அமைச்சர் ரஹ்மான் தாலிப் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. இக்குழுவின் அறிக்கையும் (Rahman Talib Report) ரஸாக் அறிக்கையே தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் எனக் கருத்துரைத்தது. இதன்பின் எல்லாப் பள்ளிகளும் இரு முக்கிய

பிரிவுகளுக்குள் அடங்கின. மலாய்ப்பள்ளிகள் அனைத்தும் தேசியப் பள்ளிகளாகவும் (National Schools) மற்ற சீன, தமிழ்ப் பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் (National Type Schools) வகை செய்யப்பட்டன. இதுவே இன்றளவும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

அரசாங்கத்தின் கவனம் தமிழ்ப் பள்ளிகளின் மேலும் விழத் தொடங்கிய பின், தமிழ்க் கல்வியில் ஒரு தொடர்ந்த வளர்ச்சி நிலையைப் பார்க்க முடிகிறது. பின்வரும் பட்டியல் இதனைக் காட்டும்.

| ஆண்டு | பள்ளிகள் | மாணவர் |
|---|---|---|
| 1946 | 724 | 33,466 |
| 1956 | 902 | 48,212 |
| 1957 | 908 | 51,370 |
| 1958 | 895 | 53,836 |
| 1959 | 857 | 56,930 |
| 1960 | 832 | 61,221 |
| 1961 | 798 | 64,355 |
| 1962 | 758 | 66,865 |
| 1963 | 731 | 67,985 |
| 1964 | 717 | 69,668 |
| 1965 | 713 | 73,315 |
| 1966 | 703 | 76,691 |
| 1967 | 695 | 79,567 |
| 1968 | 679 | 81,872 |
| 1969 | 668 | 81,092 |
| 1970 | 661 | 79,449 |

மேற்கண்ட பட்டியல்படி மாணவர் எண்ணிக்கை படிப்படியாகக் கூடி வந்தாலும், பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தே வருகின்றது. பக்கம் பக்கம் உள்ள சில பள்ளிகளை இணைத்துக் கூட்டுப் பள்ளிகள் உருவாக்கப்பட்டதும் பள்ளிகளின் எண்ணிக்கை குறைய ஒரு காரணம் எனலாம். 1971-க்கும் 1980-க்கும் இடைப்பட்ட காலத்திலும் இப்போக்கைத் தொடர்ந்து காண முடிகிறது.

| ஆண்டு | பள்ளிகள் | மாணவர் |
|---|---|---|
| 1971 | 647 | 77,192 |
| 1972 | 632 | 78,758 |
| 1973 | 631 | 78,854 |
| 1974 | 618 | 79,674 |
| 1975 | 612 | 80,404 |
| 1976 | 606 | 78,546 |
| 1977 | தெரியவில்லை | தெரியவில்லை |
| 1978 | 590 | தெரியவில்லை |
| 1979 | 588 | தெரியவில்லை |
| 1980 | 583 | 73,958 |

இப்பட்டியல்படி 1975-க்குப் பின் பள்ளிகளின் எண்ணிக்கையில் மட்டும் அல்லாது பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் ஒரு வீழ்ச்சி இருப்பதை நன்கு காணமுடிகிறது. பல தமிழ்ப் பிள்ளைகள் தேசியத் தொடக்கப் பள்ளிகளில் பயில்வதும் இதற்கொரு காரணம் எனலாம். 1978-இல் மலாய், ஆங்கில, சீனப் பள்ளிகளில் படித்த இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கை 77,933 என்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது.

மலேசியத் தமிழ்க் கல்வியின் தரத்திலும் வளர்ச்சியிலும் பெரிய தடையாக விளங்கியது ஆசிரியர் பயிற்சிக்கான வாய்ப்பின்மையே எனலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழ்க் கல்வியின் விதைகள் இங்குத் தூவப்பட்டுவிட்டாலும், 1938-ஆம் ஆண்டில்தான் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கத் தமிழ் போதனாமுறை வகுப்புக்கள் முதன் முதலாகத்தொடங்கப்பெற்றன. அப்போது தோட்டப்புறப் பள்ளிகளில் கங்காணிகளாகவும், பூசாரிகளாகவும், தொழிலாளர்களாகவும் இருந்துகொண்டே ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கும் இவ்வாசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிலை ஜப்பானியர் ஆதிக்க காலத்தில் முற்றாகப் பாதிப்புற்றது. எனினும் ஆங்கிலேயர் மீண்டும் திரும்பி வந்தபின், அரைகுறையாகப் பயிற்சியைக் கைவிட்ட ஆசிரியர்களுக்கு எவ்விதப் பரிசோதனையும் நடத்தாமல் தேர்ச்சிச் சான்றிதழ் தந்து நிரந்தரமாக்கிவிட்டனர். இவர்களை இன்றும் 'குண்டு பாஸ் ஆசிரியர்கள்' என வேடிக்கையாக அழைக்கின்றனர். 1949-இல் இருந்த 1341 தமிழாசிரியர்களில் 369 ஆசிரியர்களே பயிற்சி பெற்றவர்கள்.

மற்றவர்களில் 617 பேர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இப்பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்தன. 1957-இல் மலாயா விடுதலையடைந்த பிறகு ஏழாம் வகுப்பு தடை செய்யப் பட்டது. இதனால் பலர் பாதிக்கப்பட்டனர்; தமிழ்க் கல்வியின் தரமும் பாதிக்கப்பட்டது. 1962-இல் போதனாமுறை பயிற்சி (Normal Training) நிறுத்தப்பட்டது. கோலாலம்பூரில் தினப்பயிற்சி நிலையத்திலிருந்த தமிழ்ப்பிரிவும் கைவிடப்பட்டது. இதனால்பாதிக் கப்பட்டவர்களின் வேண்டுகோளைக் கருத்தில்கொண்டு 1967-இல் தஞ்சோங் மாலிமில் விடுமுறைக்காலத் தற்காலிகத் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பொன்று சுல்தான் இட்ரிஸ் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கியது 1967-இல் இவ்வகுப்புக்களில் சேர்ந்த 82 பேர் 1970லும், 1968-இல் சேர்ந்த 132 பேர் 1971-லும் 1970-இல் சேர்ந்த 133 பேர் 1973-லும் தங்கள் பயிற்சியை முடித்தனர். புதிய கல்வித் திட்டத்திற்கிணங்கத் தொடங்கப்பட்ட பகல் நேரப் பயிற்சிக் கல் லூரிகளும் இங்குக் கருதத் தக்கன. இப்போது கோலாலம்பூரில் ஸ்ரீகோத்தா பயிற்சிக் கல்லூரியிலும், லெம்பா பந்தையிலுள்ள (Lembah Pantai) பயிற்சிக் கல்லூரியிலும் தமிழாசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இங்கு தேசிய மொழி பிரதான மொழியாகவும், தமிழ் ஒரு பாடமொழியாகவும் உள்ளது.

மலேசியத் தமிழ்க் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு 1957-ஆகும். இவ்வாண்டில்தான் மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழை முதன்மை மொழியாகக் கொண்டு இந்தியப் பகுதி (Indian Studies) தொடங்கியது. தமிழிலக்கியம், மொழியியல் முதலி யன இங்குத் தமிழில் கற்றுத் தரப்படுகின்றன அத்துடன் தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு, சமூகவியல் முதலியவை மலாய், ஆங் கில மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன. மலேசியச் சமுதாயத் தைச் சேர்ந்த பல்லின மக்களும் தமிழையும் தமிழினத்தின் பண் பாடு, வரலாறு, சமயம், சமூகவியல் ஆகியவற்றை அறிய இத்துறை சிறந்த தொண்டாற்றி வருகிறது. மலாயாப் பல்கலைக்கழக மொழிகள் நிறுவனத்திலும் (Language Centre), மாரா தொழில் நுட்பக் கல்லூரியிலும் தமிழர் அல்லாதாரும் தமிழ் கற்க வாய்ப் புக்கள் உள்ளன.

பல்கலைக் கழக அளவிலே தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் கற்கும் வாய்ப்புக்கள் மலேசியாவில் இருப்பினும், மலேசியத் தமிழ்க் கல்வி அமைப்பில் நிரப்பவே முடியாத ஓர் இடைவெளி உள்ளது. தொடக்கப் பள்ளிக்கும் பல்கலைக்கழகக் கல்விக்கும் பாலமாக அமைய வேண்டிய தமிழ் இடைநிலைப் பள்ளிகள் இங்கு இல்லை.

கல்வித் திட்டத்தின்படி பதினைந்து தமிழ்ப் பிள்ளைகள் விரும்பினால் தமிழ் இலக்கியத்தை ஒரு பாடமாகப் போதிக்க வாய்ப்புள்ளது. எனினும் இவ்வாய்ப்பு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. இடைநிலைப் பள்ளிகளில் இவ்வாறு ஒரு பாடத்தைத் தமிழில் படித்துத் தேறியவர்களே உயர் கல்வியைத் தமிழில் பெற வாய்ப்புள்ளது இப்போது மலேசியக் கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education) உயர் கல்விச் சான்றிதழ் (Higher School Certificate) ஆகிய தேர்வுகளுக்குத் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்கலாம். அண்மைக் காலம் வரை தமிழகப் பாடநூல்களே இங்கு பயன்படுத்தப்பட்டன. இப்போது இங்கேயே பாடநூல்களை உருவாக்கும் முயற்சி நடந்து கொண்டுள்ளது. முதன் முறையாக கவிஞர்கள் ஐ. உலகநாதன், கா. திருவரசு ஆகிய உள் நாட்டுக் கவிஞர்களின் பாடல்கள் மலேசியக் கல்விச் சான்றிதழ் தமிழ் இலக்கியத் தேர்வில் பாடமாகியுள்ளன.

தமிழ்க் கல்வியைப் பொறுத்த அளவில் தொடக்கப் பள்ளியிலே நின்றுவிட்டதால், சில காலத்திற்கு முன்பு வரை தமிழ்ப் பள்ளி மாணவன் ஒருவன் உயர் கல்வி பெறுவதென்பது பெரும் பாலும் கனவாகவே இருந்தது. ஆனால் இந்நிலை 1965 இல் மாறி விட்டது. தமிழ்ப் பள்ளியில் தொடக்கக் கல்வியை முடித்த ஒரு மாணவனும் நீமூவ் வகுப்பில் (Remove Class) ஓராண்டு படித்து மலாய் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று இடைநிலைக் கல்வியைத் தொடர இப்போது வாய்ப்புள்ளது

தோட்டங்களில் வேலை செய்யக் குடியேறிய தொழிலாளர்களின் பிள்ளைகளைக் கருத்தில் கொண்டே இங்கு முதன் முதலில் தமிழ்க் கல்வி வேரூன்றத் தொடங்கியதால், பிரச்னைகள் இன்னும் முடிந்தபாடில்லை. பள்ளிப் படிப்பை இடையில் கைவிடுவோர் பற்றி முராட் குழு 1973-இல் சமர்ப்பித்த அறிக்கை தமிழ்த் தொடக்கப் பள்ளிகளின் இன்றைய நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழ்ப் பள்ளி மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலை தாழ்ந்துள்ளதையும் மற்ற மாணவர்களைவிடத் தமிழ்ப் பள்ளி மாணவர்களிடம் கல்வி கற்கும் ஆர்வம் குறைந்துள்ளதையும், பொருளாதார நிலையில் பின் தங்கிய குழந்தைகளே தாய் மொழிப் பள்ளிகளுக்குச் செல்வதையும், தமிழ்ப் பள்ளிகள் அளவில் சிறியவையாய் இருப்பதையும், தேவையான கல்வி வசதிகள் இல்லாமையையும், மற்றப் பள்ளிகளோடு ஒப்பிடும்போது தங்கள் பள்ளிகளுக்கு வருகின்ற மாணவர்களை நீண்ட காலத்திற்குத் தங்க

ளிடம் வைத்திருக்கும் ஆற்றல் தமிழ்ப் பள்ளிகளிடம் இல்லாததை யும் இவ்வறிக்கை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ்த் தொடக்கப் பள்ளிகளும் அதில் பயிலும் மாணவர் களும் இவ்வளவு பிரச்னைகளை எதிர்நோக்கி நின்றாலும், அப் பிரச்னைகளை எதிர்கொண்டு வழிகாணும் உணர்வே இங்கு ஓங்கி யுள்ளது. இப்பிரச்னைகளை ஆராய்வதற்கு மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை சில கருத்தரங்குகளையே நடத்தியுள்ளது. அண்மையில் தமிழ் இலக்கியக் கழகமும் ஒரு கருத்தரங்கை நடத்தி யது. மலேசியக் கூட்டணி அரசாங்கத்தில் பங்கு வகிக்கும் மலே சிய இந்தியர் காங்கிரஸ் (Malaysian Indian Congress—M. I. C.), மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம், மலேசியத் திராவிடர் கழகம், தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவையும் பிற சமூக அமைப் புக்களும் இப்பிரச்னைகளை ஆய்ந்த கவனத்தோடு நோக்கி உரிய வழிகளை ஆராய்ந்து கொண்டுள்ளன. ஒருபக்கம் பிரச்னைகளும் மறுபக்கம் அவற்றைப் போக்க ஆய்வுகளுமாக மலேசியத் தமிழ்க் கல்வி வரலாற்றுப் பாதையில் தொடர்ந்து தன் பயணத்தை மேற் கொண்டுள்ளது. *

மலேசியத் தமிழ் வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் பத்திரிகைகளின் வரலாறு ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்டதாகும். பினாங்கிலிருந்து 1878-ஆம் ஆண்டு தங்கைநேசன் என்னும் மாதமிருமுறை இதழ் வெளிவந்துள்ளது. தமிழன் (1933), தேசநேசன் (1933), தேசாபி மானி (1937), ஜெயமணி (1941), சுதந்திர இந்தியா (1942), ஜன நாயகம் (1946), தேசபக்தன் (1954), மலைநாடு (1958), தேசதூதன் (1962) ஆகிய நாளிதழ்களும்; இந்திய மித்திரன் (1929), மலாய் நாடு (1930), முன்னேற்றம் (1931), ஜன வர்த்தமானி (1934). பாரத மித்திரன் (1934), சுதந்திரோதயம் (1942), சிறம்பான் செய்தி (1942), யுவபாரதம் (1942), புது உலகம் (1943), சேவிகா (1945), மலாயா வர்த்தமானி (1946), ஜனோபகாரி (1948), மலைமகள் (1956) முதலிய வார இதழ்களும்; சீர்திருத்தம், தமிழ்க் கொடி (1939), நவ யுகம் (1940), தமிழ்ச்சுடர் (1948), சோலை (1951), நாகரிகம் (1952) சிந்தனை (1955), தமிழ்க் குயில் (1956), திருமுகம் (1955), மாதவி (1959), நவரசம் (1958), பொன்னி முதலிய திங்கள் இதழ்களும் மலேசியா கண்டவற்றில் குறிப்பிடத்தக்கவை. பொருளாதார வசதி பற்றாக் குறையாலும், படிப்போர் தொகை அதிகமின்மை யாலும் இவை தொடர்ந்து வெளிவர இயலவில்லை. தமிழ்நேசன்

*இதுவரையிலான இக்கட்டுரைப் பகுதியை அனுப்பியவர்
டாக்டர் இரா. தண்டாயுதம்

(1923), தமிழ் மலர் (1963) ஆகிய நாளேடுகள் தொடர்ந்து வெளி வந்துகொண்டிருக்கின்றன. இவற்றுடன் சங்கமணி, வானம்பாடி ஆகிய வார ஏடுகளும், உதயம், புதிய சமுதாயம் என்னும் திங்கள் இதழ்களும் வெளிவந்து கொண்டுள்ளன.

இலக்கியப் படைப்புகள் மலேசியத் தமிழியல் வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. 1887-இல் வெளியிடப்பெற்ற சி. ந. சதாசிவப் பண்டிதர் இயற்றிய வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திர கவிகள் ஆகியவை இங்கு வெளியான முதல் நூல்களாகக் காணக் கிடக்கின்றன. கருணாகர சாகரன் அல்லது காதலின் மாட்சி என்னும் முதல் நாவல் 1917-இல் வெளிவந்தது. சிறுகதை இலக்கியம் 1930களில் அரும்பியது. 1968 வரை வெளியான இலக்கியப் படைப்புகளையும் பத்திரிகை களையும் பற்றிய குறிப்புகளைத் தொகுத்து *தமிழ் மலேசியானா* என்னும் பெயரில் டாக்டர் இராம. சுப்பையா ஒரு நூலாக வெளி யிட்டுள்ளார். தற்போது இலக்கியப் படைப்புக்களே அன்றி, திற னாய்வு முயற்சிகளும் பெருகத் தொடங்கியுள்ளன.

மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை ஆண்டுதோறும் வெளியிடும் *தமிழ் ஒளி* தமிழியல் தொடர்பான பல அரிய கட்டு ரைகளைத் தாங்கி வருகிறது. 1972-73 தமிழ் ஒளி இதழை மலேசி யத் தமிழிலக்கிய மலராகத் தமிழ்ப் பேரவை கொண்டு வந்துள்ளது.

மலேசியத் தமிழியல் பரப்பையும், அதில் மேற்கொள்ளப்பட் டுள்ள ஆய்வுகளையும் ஒருசேரக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, இன்னும் பல புதிய ஆய்வுகளுக்கு வழியிருக்கிறது என்பது உணரத்தக்கது. எதிர்காலம் இவ் ஆய்வுகளுக்கு உரிய வாய்ப் பளிக்கும் என்று நம்புவோம்.

முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டி, சிறப்பாக நடத்திய பெருமையும் மலேசியாவுக்கு உண்டல்லவா?

## மேற்கு ஜெர்மனி *

தரங்கம்பாடிக் கடற்கரையில் 1706-ஆம் ஆண்டு ஆனித் திங்கள் சீகன்பால்கு (Bartholomaeus Ziegenbalg) கால் வைத்த அன்றே ஜெர்மனிக்கும் தமிழுக்குமிடையே உறவென்னும் வித்து ஊன்றப்

---

* டாக்டர் அ. தாமோதரன் அனுப்பியது.

பட்டு விட்டது. சமயப் பணிகளை ஆற்றுதற்கேற்ற நிறுவனம் ஒன்றை நிர்மாணிக்கும் பொறுப்பேற்று வந்த சமயப்போதகர் சீகன் பால்கு தமிழில் ஆர்வமுற்று முறையாக அதைக் கற்கத் தலைப்பட்டதே விதியின் விளையாடல் போலும்! இல்லையென்றால் லூதரன் மிஷனைத் தமிழகத்தில் தொடங்கும் போதே தமிழியலின் தொடக்கத்திற்கும் சீகன்பால்கு கால்கோள் செய்திருப்பாரா? இவ்வாறு கிறித்தவ மதத்திற்கும் தமிழியற் கல்விக்கும் ஒரே சமயத்தில் தூதுவராக விளங்கிய அந்தப் பெருமகன் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு துவக்கிவைத்த தமிழியல் அரசியல் மாற்றங்களினாலும் உலகப்போர்களினாலும் இடையிடையே சிறிது தொய்வுற்றாலும் இன்றளவும் ஜெர்மனியில் செயல்பட்டு வருகிறது என்ற உண்மையை நன்றியுணர்வோடு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ் மக்களிடையே தாம் செய்ய வேண்டிய சமயப்பணிகளுக்காகச் சீகன்பால்கு தமிழ்மொழியை விரைந்து கற்றுக்கொண்டது வியப்புக்குரியது அல்ல. ஆனால் அத்துறையில் மென்மேலும் ஈடுபட்டுத் தமிழை ஆழமாகக் கற்றுத் தேர்ந்து உலகநீதி, கொன்றை வேந்தன், நீதிவெண்பா முதலிய தமிழ் நூல்களை மொழி பெயர்த்தது — ஓலைச் சுவடிகளாக இருந்த தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்து ஒரு நூலகத்தை நிறுவிக்கொண்டது — தமிழ்ச் சுவடிகளுக்கு ஒரு விளக்கப் பட்டியலை அமைத்துக் கொண்டது—தமிழைப் பயிலும் போதே அகராதிகளைத் தொகுக்கத் தொடங்கியது—தமக்குப் பின் தமிழைக் கற்போருக்குப் பயன்படுமாறு தமிழ் இலக்கணம் ஒன்றை வரையறுத்தது—தமிழ்த் தெய்வங்களின் மரபு முறையை விளக்கிக் காட்டியது—தமிழ் மக்களைப் பற்றிய கலைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கியது போன்ற தமிழ்ப் பணிகளை இவர் நிறைவேற்றியது வியப்புக்குரியதேயாகும். தொலைநோக்கோடு செயலாக்கப்பட்ட இப்பணிகளின் மூலமாகத் தமிழியலுக்கு வலிவான அஸ்திவாரத்தை அமைத்துவிட்டதோடு தமிழியல் வரலாற்றில் புது மரபொன்றையும் இவர் உருவாக்கி விட்டார்.

இவருக்குப்பின் சமயத் தொண்டாற்றத் தமிழகம் வந்த வால்தர் (Walther), பப்ரிஸியுஸ் (Fabricius), ப்ரைட் ஹவுப்ட் (Breithaupt), பைஸன் ஹெர்ட்ஸ் (Beisenherz), கிரவுல் (Graul), ரெனியுஸ், (Rhenius), பைத்தான் (Beythan), ஷொமே ருஸ் (Schomerus), லேமன் (Lehmann) போன்ற பேரறிஞர்களும் சீகன்பால்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழியலை வளர்த்தனர். இலக்கணம், மொழிபெயர்ப்பு, சமயம் முதலிய துறைகளில் தரமான நூல்களை வழங்கி ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் கற்பிக்குமளவு தமிழை

நாடறியச் செய்தனர். இதன் விளைவாக இந்தியவியலோடு தமிழியலும் இணைந்து செயல்படத் தொடங்கியது. தொடக்க காலத் தமிழியலுக்கு ஜெர்மானியர்கள் ஆற்றிய தொண்டுகளைப்பற்றி விரிவான நூல்களும் கட்டுரைகளும் முன்பே வெளிவந்துள்ளன. பேராசிரியர் தனிநாயகம் தொகுத்து வழங்கிய 'வெளிநாடுகளில் தமிழியல் : ஒரு கட்டுரைத் தொகுதி' (Xavier S. Thaninayagam Tamil Studies Abroad : a Symposium, 1968) என்னும் நூலில் டாக்டர் ஆல்ப்ரெஹ்ட் வெட்ஸ்லர் (Dr. Albrecht Wetzler), டாக்டர் அர்னோ லேமன் (Dr. Arno Lehmann) ஆகிய இருவரும் எழுதியுள்ள கட்டுரைகளில் அவற்றை விரிவாகக் காணலாம்.

சீகன்பால்கு தொடங்கி வைத்த இப்பெரு மரபு இரண்டாம் உலகப் போர் வரையில் தொடர்ந்தது. போர்க்கால நெருக்கடிகள் மற்ற துறைகளைப் போலவே கல்வித் துறைகளையும் பேரளவில் பாதித்து விட்டதாலும் போரின் முடிவில் ஜெர்மனி இரு வேறு நாடுகளாகப் பிரிந்துவிட்டாலும் தமிழ்க் கல்வி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. போர்க் கொடுமைகளிலிருந்து நாடு விடுபட்டுத் துறை தோறும் வளர வளரத் தேக்கநிலை பெற்றிருந்த கல்வித்துறைகளும் ஒவ்வொன்றாகப் புத்துயிர் பெறத் தொடங்கின. பல்கலைக் கழகங்களில் கீழ்த்திசை மொழிகள் ஆங்காங்கே இடம் பெறலாயின.

இந்தியவியல் என்றால் வடமொழியையும் வேதங்களையும் மட்டுமே கற்பது—கற்பிப்பது என்ற பாரம்பரியத்தை மாற்றி அமைக்கும் நோக்கம் ஜெர்மன் இந்தியவியல் அறிஞர்களிடையே முகிழ்க்கத் தொடங்கியது. வடமொழியோடு மற்ற இந்திய மொழிகளையும் திராவிட மொழிகளையும் சேர்த்து இந்தியவியலின் பரப்பை விரிவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் போக்கு தமிழியலுக்கு ஜெர்மனியில் மீண்டும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

மேற்கு ஜெர்மனியில் மேற்கு பெர்லின் (West Berlin), மார்புர்க் (Marburg), ப்ரேமன் (Bremen) ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் அவ்வப்போது தமிழ் கற்பிக்கப்பட்டிருந்தாலும் ஹாம்புர்க் (Hamburg), ஹைடல்பெர்க் (Heidelberg), கொலோன் (Koeln) ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் மட்டுமே தொடர்ந்து தமிழ் கற்பிக்கப்படுகிறது எனலாம். இவற்றுள்ளும் ஹாம்புர்ப் பல்கலைக்கழகத்தில் 1978-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்க் கற்பித்தல் முன்போலத் தீவிரமாக இயங்கவில்லை. கொலோன் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கற்பித்தலை விட நூலடங்கல் (Bibliography),

அகராதி முதலியவற்றைத் தொகுக்கும் நீண்ட காலத் திட்டங்களுக்கே கடந்த நான்காண்டுகளாக முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே மேற்கு ஜெர்மனியில் ஹைடல்பெர்க் பல்கலைக் கழகத்தில் மட்டுமே தமிழைப் பயிற்றுவித்தல் இப்போது சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

## ஹைடல்பெர்க் பல்கலைக்கழகம்

வளரும் நாடுகளில் காணப்படும் தற்காலப் பிரச்சனைகளை இந்தியவியலோடு ஒருங்கிணைத்து மேற்கு ஜெர்மனிக்கும் வளரும் நாடுகளுக்குமிடையேயுள்ள உறவை வளப்படுத்தும் நோக்கத்தில் 1962இல் உருவான கல்வி நிறுவனமே தெற்காசியக் கழகம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளைப் பற்றி இக்கழகத்தில் ஆராய்ச்சிகள் நடந்தாலும் இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சிகளே மிகுதியாக இங்கு நடைபெற்று வருகின்றன. இந்தியவியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல், புவியியல், இனவியல், சாகுபடி நிலக்கொள்கை-கிராமிய முன்னேற்றம் பற்றிய துறை, வெப்ப நாடுகளின் சுகாதாரம் பற்றிய துறை என்று ஒன்றோடொன்று தொடர்புடைய எட்டு பெருந்துறைகளைக் கொண்ட கல்விக் கழகம் இது. மொழித்துறை, தத்துவம், கலை, சட்டம், சமுதாயவியல் போன்ற மற்ற துறைகள் இப்பெருந்துறைகளின் உட்பிரிவுகளாக அடக்கப்பட்டுள்ளது என்பது அறியத்தக்கது.

பேராசிரியர் ஹெர்மன் பெர்கர் (Herrman Berger) தலைமையில் இயங்கும் இந்தியவியல் துறை பண்டைய இந்தியவியல் (Classical Indology), மொழிகளும் இலக்கியங்களும் (Modern Languages and Literature), சமய வரலாறும் தத்துவமும் (History of Religion and philosophy) என்ற மூன்று உட்பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இவற்றில் எதையும் தலைமைப் பாடமாகவோ (Main Subject) அல்லது துணைப் பாடமாகவோ (Subsidiary Subject) தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் அல்லது வரலாறு, பொருளாதாரம் போன்ற மற்ற பாடங்களோடு அவற்றை இணைத்துக் கொள்ளவும் பாடத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழைத் தலைமைப் பாடமாக எடுத்து எம். ஏ., அல்லது டாக்டர் பட்டம் வரையில் கற்கும் வாய்ப்பு தெற்காசியக் கழகத்தில் மட்டுமே உண்டு.

தமிழுக்கெனத் துணைப் பேராசிரியர் பதவியொன்று நிலையாகவுள்ள இந்த நிறுவனத்தில்திரு மா. சேசையா என்பவர் 1964இல் தமிழைத் தொடங்கி வைத்து இரண்டாண்டுகள் பணியாற்றினார். அவர் இந்த நிறுவனத்திலிருந்து விலகி இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் 1968 ஜுலை முதல் இக்கட்டுரையாளர் தமிழ்த்துணைப் பேராசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அன்றியும் பேராசிரியர் கமில் சுவலபில் (Professor Kamil V. Zvelebil) கோடையில் மாதமிருமுறை வந்து 'பழந்தமிழில் தெய்வீகக் கோட்பாடுகள்', 'தமிழ்த்தெய்வம் முருகன்', 'ஆடும் தெய்வம் நடராஜர்', 'தமிழில் இலக்கிய வகைகள்' போன்ற தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

தொடக்க நிலை வகுப்பு முதல் இறுதி நிலை இலக்கிய வகுப்பு வரையில் எல்லா நிலைகளிலும் இங்கே தமிழ் கற்பிக்கப்படுகிறது. இலக்கண இலக்கியங்களோடு பேச்சுத் தமிழ், மொழி பெயர்ப்பு முதலியனவும் மாணவர்களின் தரத்திற்கேற்பப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றாண்டுகள் மொழியைக் கற்ற பிறகு குறிப்பிட்ட பொருளில் எம். ஏ. அல்லது டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சியில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி ஆராய்ந்து எம் ஏ. பட்டம் பெற்ற ஒரு மாணவி இப்போது திராவிடர்க் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் வரலாற்றையும் கொள்கைகளையும் டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ந்து வருகிறார். ஜெயகாந்தன் சிறு கதைகளில் எச்சங்களின் அமைப்பைப் பற்றி ஒருவரும், அவருடைய நாவல்களில் தமிழ் இலக்கண அமைப்பைப் பற்றி வேறொருவரும் ஆராய்ந்து வருகின்றனர். ரமணமகிரிஷியைப் பற்றி ஒரு மாணவரும், மலையனூர் அங்காளம்மனைப் பற்றி இன்னொரு மாணவியும், சித்தர் பாடல்களில் ஆன்மீகக் கொள்கை பற்றி ஒரு மாணவியும் இப்போது ஆராய்ந்து வருவது இங்குள்ள தமிழியலின் போக்கைத் தெளிவுபடுத்தும். சமயம், தத்துவம், வரலாறு போன்ற தொடர்புடைய துறைகள் ஒரே நிறுவனத்தில் இருப்பதால் தமிழியற் கல்வியை வெவ்வேறு கோணங்களில் மாணவர்கள் அணுகுவது எளிதாக இருக்கிறது எனலாம். மாணவர்களின் தேவைக்கேற்ற ஒரு பெரிய நூலகம் இங்கே இருப்பது இந்தக் கழகத்தின் பெருமையை நிலைநாட்டுவதாகும்.

தமிழைக் கற்பித்தலோடு தமிழியல் தொடர்பான நூல்களை வெளியிடவும் தெற்காசியக் கழகம் ஊக்கம் தருகிறது இதன் பயனாக இதுவரையில் 'திருக்குறள் மேற்கோள் விளக்கம்' (1970), 'திருக்குறள் இலக்கணம்' (A grammer of Tirukkural, 1972)

'தமிழில் அகராதிகள் : ஒரு நூலடங்கல்' (Tamil Dictionaries: A Bibliography, 1978), 'நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்' (1980) என்ற நான்கு நூல்கள் இக்கழகத்தின் உதவியோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் மறைந்து விட்டதென உறுதியாக நம்பப் பட்டு வந்த கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் காண்டிகை யுரையைக் கண்டுபிடித்துக் காலந்தாழ்த்தாது தமிழுலகுக்கு வழங்கி யதை ஒரு பெருமையாகவே தெற்காசியக் கழகம் கருதுகிறது. இது போலவே பல ஆண்டுகளாகக் கையெழுத்துப் பிரதியாக முடங்கிக் கிடந்த சிவஞான சித்தியாரின் ஜெர்மன் மொழி பெயர்ப்பை வெளி யிட்ட பெருமையும் இக்கழகத்திற்கு உண்டு.

இருநூற்றுக்கு மேற்பட்ட இரு மொழி அகராதிகளும் சொல் மாலைகளும் தமிழில் காணப்பட்டாலும் அவற்றில் ஒன்றுகூட ஜெர் மன் மொழியோடு இணைந்ததாக இல்லாத குறையை நீக்க ஒரு அகராதித் திட்டமும் ஐரோப்பிய நூலகங்களில் காணப்படும் தமிழ்ச் சுவடிகளுக்கு ஒரு விளக்கப் பட்டியலைத் தொகுக்கும் திட்டமும் நீண்ட காலத் திட்டங்களாக இங்கே மேற்கொள்ளப்பட்டிருப்பது தமிழியலுக்கு வளமை தருவதாகும். இப்போதுள்ள வளர்ச்சியை விட எதிர்காலத்தில் தமிழியல் மேலும் வளருமென உறுதி கூறலாம். காரணம் தமிழ் பயிலும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதேயாகும்.

## கொலோன் பல்கலைக்கழகம்

பேராசிரியர் யானர்ட் (K. L Janert) அவர்களின் தலைமையில் இயங்கி வரும் இந்தியவியல் துறை 1968ஆம் ஆண்டு முதல் தமிழ் கற்கும் வாய்ப்பைக் கொலோன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. இந்தியவியலின் உட்பிரிவாகத் தமிழ் அங்கே நிலைத்திருப்பதற்குக் காரணம் பேராசிரியர் யானர்ட்டின் பெரு முயற்சியேயாகும். 1968 செப்டம்பர் முதல் இரண்டாண்டுகள் திருமதி மேரி மாசிலாமணி அம்மையார் தமிழ்ப் பயிற்றுவித்தார். இரண்டாண்டு இடைவெளிக்குப் பின்னர் 1972 முதல் டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணி யாற்றி வருகிறார். பேராசிரியரின் முழு ஆதரவும் நல்ல நூல் நிலை யமும் தகுதியுள்ள தமிழாசிரியரும் இருந்தும் மாணவர்களி டையே தமிழைக் கற்பதற்குரிய ஆர்வம் போதிய அளவு இல்லாததால் தமிழைக் கற்பிப்பதை விட ஆராய்ச்சித் திட்டங் களுக்கே இப்பொழுது அங்கே முதலிடம் கொடுத்து வருகின்றனர்.

பிறமொழியாளர்கள் தமிழைக் கற்பதோ அல்லது அவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதோ இன்றைய சூழ்நிலையில் எளிதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டென்றாலும் கற்பித்தற்குத் தேவையான நல்ல பாட நூல்கள், இருமொழி அகராதிகள் முதலியவை இல்லாமையே தலையாயதாகும். இருமொழி அகராதிகள் தமிழில் தோன்றத் தொடங்கி முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இக் குறைபாடு நீங்காமல் இருப்பது வியப்பிற்குரியதேயாகும். ஓரிரு நல்ல அகராதிகள் வெளிவந்திருப்பினும் அவை எளிதில் கிடைப்பதுமில்லை. இந்நிலைமையை நன்குணர்ந்த பேராசிரியர் யானர்ட் அகராதி வெளியிடும் திட்டத்தை மேற்கொள்ளலானார். இதன் முதற்கட்டமாக வின்ஸ்லோ பாதிரியார் அரிதின் முயன்று தொகுத்த தமிழ் ஆங்கில அகராதியைத் (M. Winslow: A comprehensive Tamil and English Dictionary of High and Low Tamil, 1862.) தேர்ந்தெடுத்து அதற்கு ஒரு மறு பதிப்பைப் (reprint) பேராசிரியர் யானர்ட் வெளியிட்டுதவினார்.

இன்றைய தமிழை முழுமையாக விளங்கிக் கொள்ள இந்த அகராதியும் ஓரளவே உதவ முடியும் என்பது தெளிவானதும் புதிதாக ஒரு தமிழ் ஆங்கில அகராதியை உருவாக்கும் திட்டத்தை மேற்கொண்டார் இந்த அகராதித் திட்டத்தில் டாக்டர் சுப்பிரமணியனுடன் பணியாற்றக் கேரளப் பல்கலைக் கழகத்திலிருந்து உதவியாளர்களை அழைப்பதையும் ஈண்டுக் குறிப்பிட்டாக வேண்டும். இதன்படி 1979 ஏப்ரல் முதல் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் கி. நாச்சிமுத்து இப்பணியில் உதவி வந்தார். இவருக்கு முன்னர் திரு A. தசரதன் என்ற ஆராய்ச்சி மாணவர் சில மாதங்கள் இத் திட்டத்தில் பணியாற்றியதாகவும் தெரிகிறது. நான்கைந்து ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் இத்திட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடருமென்று உறுதியாகக் கூறலாம்.

அகராதிகளைப் போலவே தமிழியலில் பின்தங்கியுள்ள மற்றொன்று நூலடங்கல் துறையாகும். கொலோன் பல்கலைக் கழகம் இந்தத் துறையிலும் பணியாற்றத் தொடங்கியுள்ளது வரவேற்கத் தக்கது. இத்துறையின் முதற் பணியாக, தமிழ்ச் சங்கம் வெளியிடும் செந்தமிழ் பத்திரிகைக்குத் தொடக்கம் முதல் ஒரு அடைவினை விளக்கக் குறிப்புகளோடு டாக்டர் சுப்பிரமணியன் தொகுத்துள்ளார். இந்த அடைவு தமிழியல் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் என்பது உறுதி.

## ஹம்புர்க் பல்கலைக்கழகம்

1970-ஆம் ஆண்டு டாக்டர் ஹெல்கா அன்டோன் (Dr. Helga Anton) இந்தியக்கலை - வரலாற்றுத் துறையில் பணியேற்ற பிறகே தமிழ் கற்பித்தல் சிறப்பாக அங்கு வளர்க்கப்பட்டது. இதற்கு முன் அங்கே வடமொழித் துணைப் பேராசிரியராக உள்ள டாக்டர் சீனிவாசன் பழந்தமிழ்ச் செய்யுட்கள் சிலவற்றை மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து அவ்வப்போது அறிமுகப்படுத்தி வந்தார். மகாகவி பாரதியாரைப்பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் அன்டோன் தமிழகத்தில் தங்கிப் பேச்சுத் தமிழையும் தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்களிடம் இலக்கியத் தமிழையும் பயின்றவர். ஆரம்ப வகுப்பு முதல் இலக்கிய வகுப்பு வரை அனைத்து நிலைகளிலும் தமிழை அறிமுகப்படுத்தி ஹம்புர்க் பல்கலைக்கழக மாணவர்களி டையே தமிழார்வத்தைத் தூண்டிய பெருமை திருமதி அன்டோன் அவர்களையே சாரும்.

இவர் அங்கே பணியாற்றிய ஏழு ஆண்டுகளில் 'பத்தொன்ப தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழிலக்கிய வளர்ச்சி' 'வானொலி—பத்திரிகை முதலிய செய்தித் துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் நடை' ஆகிய தலைப்புகளில் சிறப்புரையாற்றியது பாராட்டத் தக்கது பத்திரிகைத் தமிழைத் தொடர்ந்து கற்பித்த அனுபவம் காரணமாக 1975-இல் தம் மாணவி திருமதி D. ஹெல்மன் (Mrs. D. Hellman) என்பவரோடு இணைந்து 'Tamil Usage in Mass Media' என்னும் நூலொன்றைத் தமிழியலுக்கு வழங்கி யுள்ளார்.

தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் சேர்த்து ஹம்புர்க் பல்கலைக் கழகத்தில் நிலையாக ஒரு பதவியை ஏற்படுத்தி நாளடை வில் திராவிட மொழிகளுக்கெனத் தனித் துறை ஒன்றினை உரு வாக்க டாக்டர் அன்டோன் பெரிதும் முயன்றார். அவருடைய முயற்சிக்குப் போதிய அளவு நல்லாதரவு உடனாசிரியர்களிடமே இல்லாமையால் மனம் நொந்த திருமதி அன்டோன் இறுதியில் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது. இந்த நன் முயற்சி பலனளிக்காமற் போனது எதிர்காலத் தமிழியலுக்கு ஒரு இழப்பே யாகும். இந்தியக் கலை—வரலாற்றுத் துறையை விட்டு1978இல் டாக்டர் அன்டோன் விலகிய பின்னர் அங்கே படிப்படியாகத் தமிழ்க்கல்வி குறைந்து நின்றுவிட்டது. அந்த இழப்பை இப்போதே உறுதிப்படுத்துகிறது.

சீகன்பால்கு, க்ருண்ட்லெர் (Rev. J. E. Gruendler) போன்ற ஜெர்மன் பாதிரிமார்கள் விரும்பிய அளவு தமிழ்க்கல்வி ஜெர்மனியில்

வளரவில்லையாயினும் இப்போதுள்ள வளர்ச்சி புறக்கணித்தற்கு உரியதல்ல. இந்தியவியல் மாணவர்களிடையே இன்றுள்ள தமிழார்வம் தொடர்ந்து நீடித்தால் மேற்கு ஜெர்மனியில் தமிழியலுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதில் ஐயமில்லை.

## மொரீசியசு

பம்பாயிலிருந்து 7000 கி.மீ. தொலைவில் இந்தியப் பெருங் கடலில் உள்ள ஒரு சிறு தீவு இது. ஒன்பது மாவட்டங்களை உடைய இத் தீவின் தலைநகரம் போர்ட் லூயி ஆகும்.

18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்கள் இத் தீவில் ஆதிக்கம் செலுத்திய நாளிலேயே புதுச்சேரி, காரைக்கால், சென்னை ஆகிய நகரங்களிலிருந்து தமிழர்கள் இத் தீவுக்கு வரலானார்கள். அவர்களில் பலர் சிப்பாய்கள்; சிலர் கல்தச்சர்கள்; சிலர் வியாபாரிகள். 1810-ஆம் ஆண்டில் ஆங்கில ஆதிக்கம் தொடங்கிய பின்னர் தமிழர்கள் அதிகமாகக் குடியேறலானார்கள். அந்நாளில் இந்தியச் சிறுவர்களுக்கென்று தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. மாலை நேரங்களில் தமிழ் கற்பித்தனர்.

1954-இல் போர்ட் லூயியில் மூன்று பள்ளிகளில் முழுநேரத் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பெற்றன. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 14 பள்ளிகளில் 1500 குழந்தைகள் பாலர் தமிழ் வாசகம் என்ற தமிழ் நூலின் வழியே தமிழைக் கற்றார்கள். 1967-இல் தமிழ் கற்பிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்தது.

தற்போது 175 பள்ளிகளில் 218 முழு நேரத் தமிழாசிரியர்கள் பணிபுரிகிறார்கள். ஏறக்குறைய 10,000 மாணவர்கள் பயில்கிறார்கள். தமிழ்நாட்டுப் பாடநூல் தயாரித்துள்ள தமிழ்ப்பாட நூல்கள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன.

All Mauritius Tamil Examination Syndicate என்ற அமைப்பு, தனித்தமிழ் தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் வழங்குகின்றது. தமிழ் மணி என்னும் மூன்றாண்டு பட்டத் தேர்வு சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் நடத்தப்பெறுகிறது.

தொடக்கப் பள்ளிகளில் மட்டுமின்றி, மகாத்மா காந்தி நிறுவனம் எனப்படும் நிறுவனத்திலும் உயர்நிலையில் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகிறது. இந்நிறுவனம் இந்திய அரசின் உதவி பெற்று,

இந்திய மொழிகளில் தகுந்த பாட நூல்களை எழுதி வெளியிட முனைந்துள்ளது.

மகாத்மா காந்தி நிறுவன நூல் நிலையத்தின் தமிழ்ப் பகுதியில் கலைமகள், மஞ்சரி, ஆனந்தவிகடன் ஆகிய மூன்று இதழ்களே வரவழைக்கப்படுகின்றன.

1980 ஆகஸ்டில் இங்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடைபெற்றது. தமிழக அரசின் நிதி அமைச்சரும், கல்வி அமைச்சரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மொரீசியசுத் தீவு மாணவர்க்கு தமிழ் கற்பிக்க பாடநூல் தயாரிப்புப் பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

முருக வழிபாடு இத் தீவில் வாழும் பெரும்பான்மையான தமிழர்களால் நடத்தப் பெறுகிறது. தைப்பூசம், சித்திரைப் பருவத் திருவிழா ஆகியவை மிகச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. தீ மிதித்தல் என்பது மாரியம்மன் கோவில்களில் பெருமளவில் நடத்தப்படுகிறது. திரௌபதையம்மனுக்கும் தீமிதி நிகழுவதுண்டு. புரட்டாசித் திங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழர்கள் விரதமிருப்பதுண்டு. தமிழ்ச் சமையலுக்கு இத் தீவில் தனிச் சிறப்பு உண்டு. சமையலில் தமிழர் பயன்படுத்தும் பல பொருளுக்கும் தமிழ்ப் பெயர்களே இங்கு வழங்கப்படுகின்றன. கொத்தமல்லி, கறிவேப்பிலை, பிர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய் ஆகியவை அவ்வாறே வழங்கப்படுகின்றன.

சங்கிலி, சந்நியாசி முதலிய பழந்தமிழ்ப் பெயர்கள் வழக்கில் உள்ளன. வெள்ளி வீதி, நக்கீரன், மங்கையர்க்கரசி போன்ற தூய தமிழ்ப் பெயர்களும் வழக்கில் வந்துள்ளன. முத்தையா—முச்சியா, முருகன்-மூகன், வீரப்பன்-வீர்லப்பென் என நல்ல தமிழ்ப் பெயர்கள் திரிந்து வழங்குவதையும் காணமுடிகிறது.

மொரீசியசு வானொலியில் தமிழ் ஒலிபரப்பு உண்டு. வாரத்திற்கு இருமுறை ஒலிபரப்பு நடைபெறுகிறது. தைப்பூசக் காவடித் திருவிழாவுக்கு முந்திய நாள் இரவு பத்துமணி முதல் மறுநாள் காலை ஆறு மணி வரை முருகன் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றது. புரட்டாசி நோன்பு பருவத்தில் கோவிந்தன் திருவிழாவைத் தழுவி ஒரு மாத அளவில் காலையில் பத்து மணியளவிற்குச்சிறப்பு நிகழ்ச்சி, மாதத்தில் இரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இப்போது தமிழுக்கு உண்டு. தமிழ்ப் புத்தாண்டு நாளில் தொலைக்காட்சி ஒளிபரப்பு வெளி ஒளிபரப்பாக இடம் பெறுவதுண்டு.

மொரீசியசு தீவின் ரூபாய் நோட்டில் தமிழ் எழுத்துக்கள் அச்சிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவீடன்

இந்நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தில் Institute of Indology என்னும் பெயரில் இந்தியவியல் நிறுவனம் ஒன்று உள்ளது. தமிழ்க் கல்விக்கும் தமிழாராய்ச்சிக்கும் இங்கு வாய்ப்பு உண்டு. உப்சலா பல்கலைக் கழகத்தில் ஒப்பியல் நோக்கில் தமிழ்க் கல்விக்கு இடம் உண்டு. இங்கே தமிழ்ப் பயிற்சியுள்ளவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் : பேராசிரியர் ஸ்டிக் விக்கந்தர், பேராசிரியர் கார்ல் குஸ்தாவ்டையேல், பேராசிரியர் சீக்ஃபிரிட் லியன்டார்ட், திருமதி. எச். எல். வால்டன்.

## ஸ்ரீலங்கா

**1971**-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி ஸ்ரீலங்காவின் மொத்த மக்கட்தொகை 12,689,897. இதில்—

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 1,423,981 | 11.2% |
| இந்தியத் தமிழர் | 1,174,606 | 9.3% |
| இலங்கைச் சோனகர் | 828,304 | 6.5% |
| இந்தியச் சோனகர் | 27,420 | 0.2% |
| | 3,454,311 | 27.2% |

ஸ்ரீலங்காவில் தமிழ்மொழிக்குத் தேசிய அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட மாநிலத்திலும், கிழக்கு மாநிலத்திலும் ஆட்சி மொழியாகத் தமிழை அரசியல் சட்டப்படி இடம்பெறச் செய்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலங்களில் நீதிமன்ற மொழியாகவும் தமிழ் ஆக்கப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள தமிழ் மொழியைப் பயன் படுத்த முடியும். அரசாங்கத்திடமிருந்து தமிழ் மொழியிலேயே பதிலையும் அவர்கள் பெற முடியும். இதற்கு அரசியல் சட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்புவைத் தலைநகராகக் கொண்ட ஸ்ரீலங்காவில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் வழங்குகின்றன.

இங்கு வாழும் தமிழர்களில் கணிசமான தொகையினர் அரசு, தனியார் துறை நிறுவனங்களில் எழுத்து வினைஞராகவும், மருத்துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளில் வல்லுநர்களாகவும் பணி புரிகின்றனர். விவசாயம், வாணிகம் ஆகியவற்றிலும் தமிழர் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன், வீரகேசரி, தினபதி, ஈழநாடு ஆகிய தினசரிகளும்; தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, ஈழநாடு, சுதந்திரன் ஆகிய வார இதழ்களும்; மல்லிகை, சுடர், சிரித்திரன் என்னும் மாத இதழ்களும் ஸ்ரீலங்காவில் வெளியாகும் தமிழிதழ்களாகும்.

ஸ்ரீலங்கா வானொலி தரமான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழருக்கு அளித்து வருகிறது. ரூபவாஹினியும் நல்ல தமிழில் செய்தி அறிக்கையை (செய்தி மஞ்சரி) அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அரசு நிலையில் திரு. அ. அமிர்தலிங்கம் (தமிழர் கூட்டணித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர்), திரு. சௌ. தொண்டமான் (கிராமியக் கைத் தொழில் அமைச்சர், தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்), திரு. செ. இராசதுரை (இந்து கலாச்சார, தமிழ் மொழி அமுலாக்க அமைச்சர்) ஆகியோர் குறிப்பிடத்தக்க தமிழர்களாவர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் 1942-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்க் கலை, கலாச்சாரம், கல்வி ஆகியவற்றை வளர்த்தல்; தமிழ் வளர்ச்சிக்கு உகந்த நூல்களை வெளியிடுதல் ஆகியவை இச் சங்கத்தின் தலையாய நோக்கங்களாகும்.

தமிழிலக்கிய ஆக்கத்தின் வளர்ச்சிக்கு உழைக்கும் நோக்கத்துடன் 1974-ல் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்க் கதைஞர் வட்டம் இலக்கிய ஆக்கங்களை மதிப்பீடு செய்து பரிசுகளை வழங்கி வருகிறது.

தமிழ்க் கலை, கலாச்சாரம், கல்வி ஆகியவற்றைக் காப்பாற்றி வளர்த்தலை நோக்கமாகக் கொண்டு இயங்கும் அமைப்பே கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகம். வள்ளுவர், இளங்கோ, பாரதி பெயரால் அமைந்த மன்றங்களும் தமிழ்ப் பணி புரிகின்றன.

தமிழகத்தைப் போன்றே ஈழத்திலும் குருகுல பாரம்பரியத்துடனேயே தமிழ்க் கல்வி ஆரம்பமாகிறது. குருகுல பாரம்பரியம் மறைந்த பின்பு, தமிழறிந்த ஆசான்கள் தம்முடைய வீட்டுத் திண்ணையில் நடத்திய திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ்க்

கல்வி இடம் பெற்று வந்துள்ளது. ஆறுமுக நாவலர், சுவாமி விபுலாநந்தர் முதலியோரும் தமது ஆரம்ப காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடத்திலேயே தமிழ் கற்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டது. ஆறுமுக நாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பள்ளிகளில் தமிழும் சைவ மும் போதிக்கப்பட்டன. ஆறுமுக நாவலரைத் தொடர்ந்து வந்த ஒரு பண்டித பரம்பரை ஈழத்தில் தமிழ்க் கல்வியை வளர்த்து வந் துள்ளது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆறுமுக நாவலர் ஆரம் பித்த பள்ளிகளின் மூலம் தமிழ்க் கல்வி அங்கே பெருகிற்று. அதன் மூலம் நவநீதகிருஷ்ண பாரதியார், கணேசையர், சபாபதி நாவலர், பண்டிதமணி கணபதிப் பிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை, கந்த முருகேசனார் போன்ற தமிழறிஞர்கள் தோற்றம் பெற்றார்கள்.

கிழக்கிலங்கையைப் பொறுத்த வரையில் கிறித்தவ மிஷனரி மார்களின் ஆரம்பப் பள்ளிக்கூடங்களே இயங்கி வந்தன. 1930க்குப் பின்பு இராமகிருஷ்ண மிஷன் அப்பகுதியில் தமிழ்ப் பள்ளிக் கூடங் களை நிறுவும் வரை பொதுவாகக் கல்வி நிலை மோசமாகவே இருந்தது. தமிழ்க் கல்வியையும் சைவத்தையும் அங்கு வளர்த்த பெருமை இராமகிருஷ்ண மடத்தையே சாரும். அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று அரும்பணி புரிந்தவர் சுவாமி விபுலாநந்தரே ஆவார்.

சுயமொழி மூலம் கல்வி போதித்தல் என்னும் கொள்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட பின்பு, ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கலை, விஞ்ஞானம் ஆகிய எல் லாத் துறைகளும் தமிழ் மூலம் போதிக்கப்படலாயின. இப் பாட நெறிகளுக்குரிய ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து அரசாங்க அரசகரும மொழித் திணைக்களம் தமிழ் மொழி மூலக் கல்விக்கு உதவி புரிகிறது. இப்போது தமிழில் பல்வேறு துறைப் பாடநூல்களும் எழுதப்பட்டு வருகின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தொடக்கக் காலத்தில் (1940) தமிழ் பயின்ற மாணவரின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்றாக இருந்தது. அவர்கள் தமிழை ஆங்கில மொழி வழியே கற்கவேண்டியிருந்தது. 1944-இல் இலவசக் கல்வியும் அதனைத் தொடர்ந்து சுயமொழிக் கல்வியும் நடைமுறைக்கு வந்த பின்பு, பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிக ரித்தது. பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை நிறுவப்பட்டு முதற் தமிழ்ப் பேராசிரியராக சுவாமி விபுலாநந்தர் பதவி ஏற்றார். பொது

சிறப்புக் கலைமாணி, முதுமாணிப் பட்டங்களும், கலாநிதிப் பட்டமும் தமிழ்க் கல்வியில் வழங்கப்பட்டன. இதுவரை பதினைந்துக்கு மேற்பட்டோர் முதுமாணிப் பட்டமும், மூவர் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளனர். இப்போது கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதனை, நுகேகொட, கெலானியா ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகத் தமிழ்த் துறைகளில் ஐந்து பேராசிரியர்களும், பதினைந்து விரிவுரையாளர்களும் தமிழ் கற்பித்து வருகிறார்கள். ஈழத் தமிழரின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகிய துறையில் ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்க் கல்வியைப் பொறுத்தவரையில் கல்லூரி மட்டத்தில் சம உரிமையையும் சலுகைகளையும் அளித்துள்ளது; சிங்கள மாணவர்கள் தமிழ் கற்பதற்குரிய வாய்ப்புகளையும் செய்துள்ளது. சில சிங்களப் பள்ளிக்கூடங்களில் தமிழும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழக மட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனித்தமிழ் பல்கலைக் கழகமாக இயங்குகிறது. மட்டக்களப்பிலும் பல்கலைக் கழகம் உருவாக உள்ளது. ஸ்ரீலங்கா வரலாற்றில் முதன் முதலாக தமிழ்மொழி அமுலாக்கத்திற்கு தனியாக ஓர் அமைச்சினைத் தற்போது ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நான்காம் உலகத் தமிழ் மாநாடு, தமிழ்ப் புதினத்தின் நூற்றாண்டு நினைவு மாநாடு, நான்காம் உலக இசுலாமிய இலக்கிய மாநாடு, அகில உலக இந்து மாநாடு ஆகியவை ஸ்ரீலங்காவில் நடைபெற்ற சிறப்பு வாய்ந்த மாநாடுகளாகும். பல ஆண்டுகளாக அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துகளைப் பொறித்து வெளியிடும் ஒரே நாடு இலங்கைதான்.

# II

## ஆஸ்திரியா

ஜெர்மன் மொழியை அரசியல் மொழியாகக்கொண்டது ஆஸ்திரியா. இந்நாட்டின் தலைநகரான வியன்னா முன்னொரு காலத்தில் ஐரோப்பாவிற்கே தலைநகராக விளங்கிய பெருமையை உடையது.

ஆஸ்திரியாவில் உள்ள மக்யார் (magyar) மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையே சில ஒற்றுமை வேற்றுமைகள் இருப்பதை ஆராய்ச்சி அறிஞர் சிலர் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

## ஆஸ்திரேலியா

ஆங்கில மொழி வழங்கும் இந்நாட்டில் பெரும்பான்மையாகப் பிரிட்டிஷாரும், சிறுபான்மையாகச் சீனர்கள், ஜப்பானியர்கள், இந்தியர்கள் ஆகியோர் வாழ்கிறார்கள். தலைநகரான கேன்பராவில் உள்ள ஆஸ்திரேலியத் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு இனிமேல் தான் இடம் ஏற்படல் வேண்டும்.

ஆஸ்திரேலியாவிற்குப் பல்வேறு தொழில் காரணமாகச் சென்ற தமிழர் அனைவரும் ஒன்று கூடி 1978—ஆம் ஆண்டு சிட்னி தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தனர். தாய்மொழியாம் தமிழின் தொடர்பும், தமிழ்ப் பண்பாடும் விடுபட்டுப் போய்விடுதல் கூடாது என்ற உயரிய எண்ணமே இத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும். 4-2-1980—இல் சிட்னி ஸ்டிராத் பீல்ட் பப்ளிக் பள்ளியில் (Stratfield Public School, Sydney) தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் பணி துவங்கப்பெற்றதற்கு முக்கிய காரணமாக அமைந்தது சிட்னி தமிழ்ச் சங்கத்தாரின் பெரு முயற்சியே ஆகும். ஆஷ்பீல்ட் (Ashfield) என்னும் ஊரிலும் தனியார் சிலரின் ஆர்வத்தால் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன நூல்களைத் தொடக்க நிலையில் பயன்படுத்தினார்கள். தற்போது சிங்கப்பூரில் வெளியாகும் *தமிழ் வாசகம்* (முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையில்) என்னும் நூல்களையே பயன்படுத்துகிறார்கள்.

*சிட்னி தமிழ்ச் சங்கம்* 'சந்திப்பு' என்னும் ஓர் இதழையும் வெளியிடுகின்றது. கதை, கட்டுரை, கேலிச் சித்திரங்கள் ஆகியவை இவ் இதழில் இடம் பெறுகின்றன. பல்வேறு இந்திய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்களின் விளம்பரங்களும் இதில் இடம்பெறுகின்றன. 'சிட்னி தமிழரின் கலாச்சாரச் சந்திப்பே' (A cultural rendezvous to the Tamils in Sydney) *சந்திப்பு* எனும் இதழ் என்பது அதை நடத்தும் ஆசிரியர்களின் கூற்றாகும்.

தமிழ் மற்றும் இந்தியப் பண்பாட்டினை பரப்பும் பெருநோக்கத்துடன் சமயம் தொடர்பான விழாக்களை இங்கு வாழும் தமிழர் கொண்டாடி வருகிறார்கள்.

# இந்தோனீசியா

மூவாயிரம் தீவுகளைக் கொண்ட இக்குடியரசின் தலைநகரம் ஜாகர்த்தா. இத் தீவுகளில் வாழும் மக்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள்; வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள்; வெவ்வேறு பண்பாடு உடையவர்கள். இவர்களை ஒற்றுமைப் படுத்தும் தேசிய மொழி பாஹாசா இந்தோனீசியா என்பதாம்.

தமிழகத்திற்கும் சாவகத்திற்கும் 'ஜாவா' பழங்காலத்திலிருந்த உறவுகளை வரலாற்றுச் சான்றுகள் தெளிவாக்கியுள்ளன. தென்னிந்தியாவுக்கும் இந்தோனீசியாவுக்கும் இடையே நிலவிய தொடர்புகளைப் பல கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழகத்திலிருந்து வணிகப் பெருமக்களும் மாலுமிகளும் சாவகம் சென்றிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். மணிமேகலைக் காப்பியத்தில் சாவகம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இராசேந்திர சோழனும், வீரராசேந்திரனும் கடாரத்தை வென்றதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் சுமத்திரா தீவில் கிடைத்துள்ளன. மேலும், தமிழ் வாணிகக் குடியிருப்புகள் இங்கு நிலைபெற்று இருந்தன என்பதற்கான சான்றுகள் இருப்பதாகப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரும் எழுதியிருக்கிறார். சுமத்திராவில் வாழும் காரோபட்டக் (Karobatak) என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள் தம் இனத்தவரின் உட்பிரிவுகளுக்குச் சேரர், சோழர், பாண்டியர், கலிங்கர், மலையாளியர் என்னும் பெயர்களை வழங்கி வருகின்றனர் என்பது அறியத்தக்கது.

தற்போது பேசப்பெறும் இந்தோனீசிய மொழியில் சில தமிழ்ச் சொற்கள் உள்ளன. பணத்தைத் துனை என்றும், காப்பாளரைக் காவலர் என்றும், கவியைத் தோழன் என்றும், மதிப்பை நிலை என்றும், சுங்க வரியைச் சுங்கே என்றும், கொடியைத் தாலி என்றும் குறிப்பிடுகின்றனர். இடம், வட்டில், பண்டம், கலம், கடலை, கண்டு என்னும் சொற்களும் வழங்கி வருகின்றன. கோயில் என்னும்சொல் இந்தோனீசிய மொழியில் கூயில் என மருவி வழங்குகிறது. சாகோ அரிசி சவ்வரிசி எனவும், கெடுங் என்பது கிட்டங்கி எனவும் தமிழில் வழங்குகின்றன

தமிழ்நாட்டுடன் இந்தோனீசியர் வைத்திருந்த உறவு மிகவும் அழுத்தமானதாகும். அங்குள்ள பல்லவ முறைச் சிற்பங்கள் இவ் உறவை உறுதிப் படுத்துகின்றன.

தமிழ்க் கல்விக்கு இந்த நாட்டில் இப்போது வாய்ப்பில்லை.

# இத்தாலி

இத்தாலி நாட்டின் தலைநகராக விளங்குவது புகழ்பெற்ற ரோம் மாநகரமாகும். புதுச்சேரியின் அருகிலிருக்கும் அரிக்கமேடு என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற ரோமருடைய பழைய கட்டடங்களையும் அவற்றில் கிடைத்த தாழிகளையும் ஆராய்ந்து பார்த்ததன் மூலமாக, அவர்கள் இத்தாலி நாட்டிலிருந்து கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிற்கு வந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பெற்றது. யவனர் பலர் சங்க காலத்தில் தமிழ் நாட்டில் குடியேறினர் என்பதற்குச் சிலப்பதிகாரம் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து ஆகியவை சான்று பகர்கின்றன. யவன வீரர்கள் தமிழ் மன்னர்களின் மெய்க்காப்பாளராகவும், ஊர்க் காப்பாளராகவும் பணியாற்றியுள்ள நிலையை வரலாறு உணர்த்துகிறது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிளினி (Pliny), மார்க்கோ போலோ ஆகியோர் முறையே தென்னிந்தியாவைப் பற்றியும், தமிழ் நாட்டைப் பற்றியும் எழுதியுள்ள குறிப்புகளைக் கொண்டு தமிழ்நாட்டுக்கும் இத்தாலிக்கும் இடையே நிலவிய தொடர்பினை அறிய முடிகின்றது.

தமிழில் பல உரைநடை நூல்களை எழுதிய தத்துவ போதக சுவாமியும் (Robert de Nobile), கான்ஸ்டன்டின் ஜோஸப் பெஸ்கி என்னும் தன் இயற்பெயரை வீரமா முனிவர் என மாற்றியமைத்துக் கொண்டவரும் இத்தாலி நாட்டினரே.

கார்மேல் சபை வேத போதராக வருகை தந்த பாலினஸ் பார்த்தலோமியோ எழுதிய நூல்களில் மலபார், தமிழ்நாட்டு மக்களின் சமுதாய சமய வழக்கங்கள், கலை, மொழியியல் போக்குகள் ஆகியவை குறித்த பல பயன்தரும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

சென்ற நூற்றாண்டில் இத்தாலியில் திராவிட மொழி ஆய்வு நடைபெற்றிருக்கிறது. ஆஞ்செலோ டி குபேர்னாட்டிஸ் என்பவர் திருவள்ளுவரைப் பற்றிப் பல குறிப்புகளை எழுதியுள்ளார்; உரோமை வேத போதகப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றுள்ள மலையாள, தமிழ் மொழிச் சுவடிகளைப் பற்றியும் விளக்கக் குறிப்புகளை வரைந்துள்ளார். அவருடைய தென்னிந்தியப் பயண நூல் மிக்கப் பயனுடையதாக விளங்குகிறது.

சிராஸியாடோ இசையா அசோலி என்னும் மொழியியலறிஞர் வடமொழியில் திராவிட மொழிகளின் செல்வாக்குப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். பாலோ மாண்டிகாஜா என்னும் மக்களியல் ஆய்வாளர் சென்னை மாநில (தமிழக) மக்களின் பலதரப்பட்ட வாழ்க்கை முறை பற்றிய செய்திகளைத் தம்முடைய இந்தியப் பயண நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டில் பல ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆல்பிரரோட்டாம்போட்டி என்னும் அறிஞர் திராவிட மொழிகளுக்கும் இதர மொழிப் பிரிவுகளுக்கும் உள்ள தொடர்பினை *மொழியின் தோற்றம்* என்னும் தம்முடைய நூலில் ஆராய்ந்துள்ளார். வடமொழி நுனி நா அண்ண மெய்களில் திராவிட மொழிச் செல்வாக்குப் பற்றி ஆஞ்சலோ மரியா பிஜகல்லி என்பார் ஓர் ஆய்வுக் கட்டுரையினை எழுதியுள்ளார்.

திராவிட மொழிச் சொல்லாக்கவியல் பற்றி *மலாய் மொழியில் போர்த்துக்கீசியர் கடன் சொற்கள்* என்னும் தம் நூலில் நேப்பிள்ஸ் கீழ்த்திசைக்கலை நிறுவனத்தின் பேராசிரியர் லூசி சாந்தா மரியா ஆராய்ந்துள்ளார். *தமிழில் பாரசீகச் சொற்கள்* என்னும் ஆய்வேட்டில் அம்மொழியில் இடம் பெற்றுள்ள ஈரானியக் கூறுகள் பற்றிய பல சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் உரோமைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் அலெக்சாண்ரோ பசானி. உரோமையில் சிறிது காலம் தமிழ் கற்பித்தவர் டாக்டர் கபிரியேல் எசிங்கர் பெர்ரோ-லூசி. மானிடவியல் ஆய்விலும் ஈடுபட்ட இவர் ஜெயகாந்தனின் புதினங்கள் குறித்து சிறந்ததொரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறார்.

வாட்டிக்கன் (Vatican) நகரில் உள்ள அரிய நூற்கூடத்தில் எந்த மொழிக்கும் உரிய அரிய நூல்களைக் காண முடிகிறது. பதினேழாம் நூற்றாண்டில் அச்சிடப் பெற்ற தமிழ் - போர்த்துக்கீசிய அகராதியின் அச்சுப் பிரதி வாட்டிக்கன் நூற்கூடத்தில் காணக்கிடக்கின்றது.

வெளிநாட்டு வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடம் கொடுத்த முதல் நிலையம் வாட்டிக்கன் வானொலி நிலையமே என்பது உணரத்தக்கது.

இன்று இத்தாலி நாடு தமிழ்த் தொடர்பின்றி இருக்கின்றது.

## ஈராக்

பாக்தாத் மாநகரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கும் ஈராக் நாட்டில்தான் பண்டைய அசீரியா (Assyria), சுமேரியா (Sumeria) என்னும் நாடுகள் இருந்தன. தமிழர் பழங்காலத்திலிருந்தே இந்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று கூறுவர். கார், தோகை, யானைக் கொம்பு ஆகியவற்றை இந் நாடுகளுக்குத் திராவிட மக்களே முதன் முதலில் கொண்டு வந்தார்கள் என்று கூறுவாரும் உண்டு. ஊர் என்ற நகரின் பெயர் மாபெரும் கல்தேயருடைய ஊரைக் குறிக்கின்றது. அவர்களுடைய பெருங்கடவுளுக்கு ஆண் என்னும் பெயருண்டு. தமிழ்க் கோயில்களில் பணிபுரியப் பெண்டுளை நியமித்ததுபோல, அவர்களின் கோயில்களிலும் கோயிற் பணிக்கென்று பெண்களை நியமித்திருந்தார்கள்.

## எத்தியோப்பியா

எத்தியோப்பியாவின் தலைநகராக விளங்குவது அடிஸ் அபாபா. அடிஸ் அபாபா என்னும் பெயரின் பொருள் *புதிய மலர்* என்பதாகும்.

லலிபெல்லா என்னும் இடத்தில் உள்ள பெரும் கற்பாறைகளைச் செதுக்கி அமைத்த கோயில்கள் மாமல்லபுரக் கோயில்களை நினைவூட்டுகின்றன என்று அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

## கயானா

ஜியார்ஜ் டவுன் என்ற நகரைத் தலைநகராகக் கொண்ட இந்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் குடியேறியுள்ளனர். தம்முடைய குழந்தைகள் தமிழை மறத்தல் கூடாது; தமிழிலேயே பேசல் வேண்டும் என்பதிலும், தமிழ்ப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து கடைபிடித்து வருதல் வேண்டும் என்பதிலும் இந்நாட்டுத் தமிழர் மிகவும் கவனத்துடன் இருக்கிறார்கள். இங்கு வாழும் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களும் தமிழ்த் திருநாளை மிகவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடி வருகிறார்கள். தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் படிக்கவும், நாட்டைப் பார்க்கவும் இவர்கள் மிகவும் விருப்பம் உடையவர்களாயிருக்கிறார்கள்.

## கிரீஸ்

ஐரோப்பிய பண்பாட்டிற்குத் தாய்நாடாக விளங்கிய இந்நாட்டில், முற்காலத்தில் முல்லை நிலத் தமிழ் மக்களைப் போல ஒரு வகையான ஏறு தழுவுதலில் மக்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அவர்தம் கலைப் பொருட்கள் பலவற்றிலிருந்து அறியக் கிடக்கின்றது.

இந்திய வரலாற்றில் திராவிடப் பண்பாடு அடிப்படையாக அமைந்திருப்பது போலவே கிரேக்கப் பண்பாட்டிற்கு மூல காரணமாக இருந்தவர்களும் இந்தியத் திராவிட மக்களின் இனத்தவரே என்பது ஒரு சில ஆய்வாளர்களின் கருத்து.

தமிழ்க் கல்விக்கு இன்று இந்நாட்டில் வாய்ப்பு இல்லை.

## கம்போடியா

பழங்காலத்தில் தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நாடுகளில் கம்போடியாவும் ஒன்று. இந்திய இளவரசன் ஒருவன் மூலமாகக் கம்போடியாவில் ஓர் அரச வரிசையே தோன்றியதாகவும் அறிய முடிகிறது.

தமிழ்க் கல்விக்குப் போதிய வாய்ப்பு இந்த நாட்டில் இல்லை.

## கீன்யா

நைரோபி இந்நாட்டின் தலைநகர். இந்த நாட்டில் தமிழர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் ஆசிரியப் பணியிலும், பிற அலுவல்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு ஏற்பட வழியில்லை.

## குவாடிலோப்

பிரெஞ்சு மொழி வழங்கும் இந்நாட்டில் இந்தியர்களும் சிறுபான்மையோராக வாழ்கிறார்கள். தமிழர்கள் சிலரும் இந்நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தமிழோடு தொடர்பு இல்லை என்பது வெளிப்படை. மாரியம்மனுக்கு இங்கு கோயில் உள்ளது.

## கொரியா

வட, தென் கொரிய நாடுகளில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு இல்லை. கொரிய மொழியில் உள்ள சில சொற்களுக்கும் தமிழ்ச் சொற்களுக்கும் இடையே ஒற்றுமை இருப்பது மொழியியல் பேராசிரியர் ஒருவரால் ஆராயப்பட்டுள்ளது. அத்தகைய சொற்களில் சில வருமாறு :

| | Korean | Tamil | |
|---|---|---|---|
| Father | Appa | Appa | (அப்பா) |
| Mother | Amma | Amma | (அம்மா) |
| Brother's wife | Unni | Anni | (அண்ணி) |
| Grass | Pull | Pull | (புல்) |

## சீனா

கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே சீனாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே கடல் வழியாகவே வாணிபம் நடந்திருக்கிறது என்று அறிய முடிகிறது.

சீனப் பல்கலைக்கழகங்களில் தமிழைக் கற்றுக் கொடுக்க முன்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இப்போது அவை இல்லை. தமிழ் நாட்டிலிருந்து தமிழ் வாரப் பத்திரிகைகளும், இலங்கையிலிருந்து தமிழ் தினசரி பத்திரிகையும் சீனாவுக்கு வருகின்றன.

சீன வானொலியில் 39 அன்னிய மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுகின்றன. இந்திய மொழிகளில் தமிழ், இந்தி, வங்காளம், உருது ஆகிய மொழிகளில் ஒலிபரப்பு நிகழ்த்தப் பெறுகின்றது. சீனாவில் குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களுக்காக நாள் தோறும் ஒரு மணி நேரம் தமிழில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் செய்திகள், அனைத்துலக விவகாரங்கள் பற்றிய விவாதம், சீனப் பொருளாதாரம், பண்பாடு, இசை பற்றியன இடம் பெற்று வருகின்றன.

ஏறக்குறைய பதினெட்டு ஆண்டுகளாகத் தமிழ் ஒலிபரப்புக்கு இடம் கொடுத்து வரும் பீகிங் வானொலி இப்போது தமிழிலக்கிய ஆய்வுக்குழு ஒன்றை அமைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்ற

வர்களே இவ்ஆய்வுக்குழுவின் உறுப்பினர்கள். பல ஆண்டுகளாகத் தமிழ் ஒலிபரப்பாளராகப் (அறிவிப்பாளராக) பணியாற்றி வரும் 42 வயதான சன் - குவா - சியாங் என்பவர் தமிழிலக்கிய ஆய்வுக் குழுவின் பொறுப்பாளராக இருக்கிறார். இவர் 1981 சனவரியில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார். சீனப் பிரதிநிதி ஒருவர் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்தது இதுவே முதல் முறை.

தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து அவை பற்றிச் சீன மக்களுக்கு எடுத்துக் கூறுவதே தமிழிலக்கிய ஆய்வுக் குழுவின் அடிப்படை நோக்கமாகும். இக் குழுவைச் சேர்ந்தவர்களால் தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதியார் கவிதைகள் ஆகியவை குறித்துப் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கல்கி, மு. வ., அகிலன், ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, தி. ஜானகி ராமன், செ. கணேசலிங்கம் ஆகிய இந்திய இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்போவியங்களைச் சீன மொழியில் மொழியாக்கம் செய்யவும் இக்குழு முயற்சி மேற்கொண்டுள்ளது.

## சுரிநாம்

பரமாரிபோ என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட சுரிநாமில் இந்தியர் பெரும்பான்மையோராக வாழ்கிறார்கள். இங்கே டச்சு, ஆங்கிலம், ஜாவனிஷ், சுரிநாமிஷ் ஆகிய மொழிகளோடு இந்தி மொழியும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது. இந்த நாட்டில் தமிழர்கள் சிலர் வாழ்ந்து வருகிறார்கள் என்று தெரிய வருகிறது.

## சுவிட்சர்லாந்து

இந்நாட்டின் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்குச் சிறப்பான இடமளிக்கப்படவில்லை. லாசேன் பல்கலைக்கழகத்திலும் பெர்ன் பல்கலைக் கழகத்திலும் விரிவுரை நிகழ்த்தும் பேராசிரியர் கார்ல் கெல்லர் என்பவர் திருவனந்தபுரத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்த காரணத்தால் தமிழிலும் மலையாள மொழியிலும் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார். இக் காரணத்தால் தம்முடை விரிவுரைகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளை ஒப்பீட்டு நோக்கில் பயன்படுத்திக் கருத்துக்களை எடுத்துரைப்பார் எனத் தெரிய வருகிறது.

## தாய்லாந்து

